விலை ரூபா 2-00

பக்கங்கள் 16

# ஈழநாடு
வார மலர் EELANADU VARAMALAR
— வெள்ளிவிழா ஆண்டு —

மலர்: 25 | தை 8 | ரபி-ஆகி 18 | யாழ்ப்பாணம் | ஞாயிற்றுக்கிழமை | 22-1-84 | இதழ் 340

## கிளிநொச்சியில் பல்கலைக்கழக பெயர்ப்பலகை

(யாழ்ப்பாணம்)

யாழ்' பல்கலைக்கழகத்தில் இதுவரை ஆரம்பிக்கப்படாத பிரதான இரு பீடங்களான விஞ்ஞான, விவசாய பீடங்களுக்கு கிளிநொச்சியில் ஒதுக்கப்பட்டுள்ள 100 ஏக்கர்காணியில் நாளை 'யாழ். பல்கலைக் கழகம்' எனப் பெயர் பொறிக்கப்பட்ட பலகை நாட்டப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

யாழ். பல்கலைக்கழக அதிகாரிகள் இப்பெயர்பலகையை நாட்டி வைப்பர் எனத்தெரிவிக்கப்படுகிறது.

யாழ். பல்கலைக் கழகத்தில் நிறுவப்படாத பீடங்களை நிறுவுவதற்கு அரசாங்கம் கிளிநொச்சியில் இக்காணியை ஒதுக்கியும், இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லையாம். அடர்ந்த பாரிய

(16-ம் பக்கம் பார்க்க)

# யாழ். புற்றுநோய் சிகிச்சை நிலையத்துக்கு நிரந்தர வைத்திய நிபுணரில்லை!

## ● செவ்வாய் திறக்கப்படுகிறது

(ஏ. வி. மாணிக்கம்)

சுமார் 20 லட்சம் ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்டு, அதற்குரிய விசேட உபகரணங்கள் பொருத்தப்பட்டு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தெல்லிப்பழை புற்றுநோய் சிகிச்சை நிலையம் திறந்து வைக்கப்படவுள்ள போதிலும், நிரந்தரமாக புற்றுநோய் வைத்திய நிபுணர் ஒருவர் இங்கு நியமிக்கப்படுவாரா என்பது கேள்விக்குறியாகவுள்ளது.

இந்தப் புற்றுநோய் சிகிச்சை நிலையத்தைத் திறந்து வைக்க, சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ரஞ்சித் அத்தபத்துவும், மகளிர் விவகார போதனு வைத்தியத்துறை அமைச்சர் திருமதி சுனீத்திரா ரணசிங்காவும் யாழ்ப்பாணத்துக்கு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை வருகிறார்கள்.

இரு அமைச்சர்களும் இங்கு வருகை தரும்போது, புற்றுநோய்ச் சிகிச்சை நிலையத்தில் கதிர் இயக்கும் இயந்திர தொழில் நுட்பவியலாளர் இருவரையும் தங்களுடன் கூட்டி வருகிறார்கள். ஆனால் புற்றுநோய் சிகிச்சை அளிக்கும் வைத்திய நிபுணர் ஒருவர் கூட வருவாரோ என்பதில் ஆஸ்பத்திரி வட்டாரங்களில் சந்தேகம் எழுந்துள்ளது.

இலங்கையில் மகரகமவில் மட்டும் புற்றுநோய் சிகிச்சை அளிக்கும் ஆஸ்பத்திரி இருக்கிறது.

இக்காலக்கட்டத்துக்கு முன்னர் 1980 மார்ச் மாதத்தில் தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரியில் புற்றுநோய் சிகிச்சை நிலையம் ஒன்று அமைக்க அத்திபாரக்கல் நாட்டப்பட்டது.

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் முன்னாள் தலைவர்

(16-ம் பக்கம் பார்க்க)

## யாழ். ஆஸ்பத்திரியில் இளைஞர் சடலம்!

(யாழ்ப்பாணம்)

பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான வாலிபரின் சடலம் அடையாளம் காண்பதற்காக யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

கரவெட்டி தபால் அலுவலகத்துக்கு அண்மையில் இவ்வாலிபர் துப்பாக்கியால் சுடப்பட்டார்.

நேற்று முன்தினம் இச்சம்பவம் நடைபெற்றது.

மேற் குறிப்பிட்ட தபால் அலுவலகத்தில் பென்ஷன் பணம் வழங்கப்பட்டுக் கொண்டிருந்த போது பருத்தித்துறைப் பொலிசார் பாதுகாப்புக் கடமையிலீடுபட்டிருந்ததாகவும், அச்சமயம் வாலிபர் ஒருவர் பொலிசாரின் உத்தரவை மீறி நடந்து கொண்டபோது துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காகி மரணமானார், என்றும் கூறப்படுறது.

பொலிசார் தொடர்ந்து விசாரணை செய்து வருகின்றனர். (மா)

## "இடம்பெயர்ந்த ஆசிரியர்கள்— பழைய பாடசாலைகளுக்கு திரும்புவது நல்லது!"

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த ஆசிரியர்கள் சம்பந்தமாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் சிபார்சுகள் பெப்ரவரி முதல் வாரமளவில் கல்வி அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப் படலாம் என்று தெரிய வருகின்றது.

இடம்பெயர்ந்த தமிழாசிரியர்களின் பிரச்னை தொடர்பாக கல்விப் பணிப்பாளர் குழுவின் தலைவர் திரு யு ஜி பி, காரியவாசத்துடன் தமிழர் ஆசிரியர் சங்கச்செயலாளர் திரு. மகாசிவம் தொடர்பு கொண்டு உரையாடியபோது மேற்கண்ட தகவல் தெரியவந்தது.

தங்கள் சிபார்சுகளை பெப்ரவரி முதல் வாரத்தில் கல்வி அமைச்சரிடம் சமர்ப்பித்து நடைமுறைப்படுத்துவது சாத்தியமாகும் என அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். இதுவரை மீண்டும் வேலைக்குத் திரும்பிய ஆசிரியர்கள் தொடர்ந்தும் தமது பழைய பாடசாலைகளில் வேலை செய்வது சிறந்ததென்றும் எஞ்சியிருப்பவர்கள் இயலுமானவரை அடுத்த இருவாரங்களுக்குள் தமது பழைய பாடசாலைகளுக்குத் திரும்பி வேலை செய்வது சிறந்ததென்றும் திரு. காரியவாசம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இடம்பெயர்ந்த பெண் ஆசிரியர்கள் பழைய இடங்களுக்குத் திரும்ப முடியாத நிலையில் இருந்தவர்கள் அடுத்த இரு வாரங்களுக்குள் திரும்புவது நல்லது இரண்டு வாரங்களுக்குள் திரும்ப முடியாத சூழ்நிலை இருக்குமானால் அவர்கள் சொந்த லீவில் இருக்கலாம் என்றும் அவர் கருத்து தெரிவித்துள்ளார்.

தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் திரு. மகாசிவம் இத்தகவல்களைத் தெரிவித்தார்.

## இடம்பெயர்ந்த மாணவரின் புதிய நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்த பல்கலைக் கழக தமிழ் மாணவர்கள் தங்கள் கோரிக்கையை வென்றெடுப்பதற்காக அடுத்து நடத்தவிருக்கும்போராட்டம்குறித்து யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்றுக்கூடி ஆலோசித்தனர்.

"இக்கூட்டத்தில்திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவு ஆகியஇடங்களுக்குச்சென்று தங்கள் கோரிக்கை பற்றி விளக்கமளித்துதொடர்ந்து நடத்தும் போராட்டத்துக்கு ஆதரவு திரட்டுவதற்கென குழுக்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் அத்துடன் இடம் பெயர்ந்த மாணவர்கள் திரும்பவும் அங்குசெல்லக்கூடாதெனவும் இக்குழுக்கள் வற்புறுத்தப் போவதாகவும், நாளை அல்லது நாளை மறுதினம் போராட்டம் ஆரம்பிக்கப்படுமென்றும் மாணவர் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார் (மா)

## வெடிவிபத்து ஒருவர் பலி

சிங்கப்பூர், டிச. 21

சிங்கப்பூரில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் விமானக் கண்காட்சியில் ஏற்பட்ட வெடிவிபத்தில் ஒருவர் பலியானதோடு 5 பேர் காயமடைந்துள்ளனர்.

## புறக்கோட்டை சம்பவம்! 7 பேர் கைது!

(கொழும்பு)

புறக்கோட்டைச் சம்பவம் தொடர்பாக ஏழுபேர் சந்தேகத்தின் பேரில் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மூன்று கடைகளில் ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபா கப்பம் பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

புறக்கோட்டையிலுள்ள கடையொன்றுக்குள் நுழைந்த சிலர், அங்கிருந்த விற்பனையாளரைப் பெற்றோல் ஊற்றிக் கொழுத்த முயன்றதாகவும், பின்னர் அம்முயற்சியைக் கைவிட்டு அறுபதினாயிரம் ரூபாய் காசை மேசைலாச்சிக்குள்ளிருந்து எடுத்ததாகவும், அப்போது அதனை தடுக்க

(16-ம் பக்கம் பார்க்க)

## கரவெட்டி துப்பாக்கிச்சூடு: ராஜாங்க அமைச்சு அறிக்கை

(இ. கந்தசாமி)

'ஐரிஷ் குடியரசில் பொபி சாண்ட்ஸ் சாகும்வரை உண்ணாவிரதமிருந்து இறந்த போது 'பயங்கரவாதி' என்ற பெயரை பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தட்சர் அரசு சூட்டி அவரதும் மற்றும் அறுவரதும் சாவைத் தடுத்து நிறுத்தவில்லை. அஹிம்சை போராட்

(16-ம் பக்கம் பார்க்க)


# வீடு விற்பனைக்கு

சாவகச்சேரி

சாவகச்சேரியில், தபாற்கந்தோருக்கு எதிராக 2½ பரப்புக்கு கூடுதலான காணியில் அமைந்துள்ள

மூன்று படுக்கை அறைகளும் சகல நவீன வசதிகளும் கொண்ட சுமார் 2200 சதுர அடி விஸ்தீரணமுள்ள வீடு விற்பனைக்கு உண்டு.

அத்துடன் தபாற்கந்தோர் வீதியில் 3 பரப்பு கட்டிடக்காணியும் உண்டு.

காணிக்கு 10 அடி அகலமான பிரத்தியேக பாதையுண்டு.

காலை 9-00 மணி முதல் மாலை 5-00 மணி வரை மட்டும் பார்வையிடலாம்.

தொடர்பு கொள்க:

" ஜஸ்மின் "

தபால்கந்தோர் எதிராக, சாவகச்சேரி.

தொலைபேசி: சாவகச்சேரி: 236

கொழும்பு: 595666
597340

(252)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

பெரியதம்பிரான் கோவிலடி வண்ணார் பண்ணையில் 5½ பரப்புக்காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு; இ. பத்மநாதன், குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில் மேற்கு, அல்லது K. V. மகாதேவன் சட்டத்தரணி, குரும்பசிட்டி 177

இரண்டு சில்லு உழவு இயந்திரம் Iseki (மண்ணெண்ணெயில் இயங்குவது) மிகச்சிறந்த நிலையில் சகல உபகரணங்களுடன் உடன் விற்பனைக்குண்டு Dr. ச குணரத்தினம் D/4 எமர்சன் வீதி, கிளிநொச்சி. 061

Ford Cortina, 1300 டிலக்ஸ் 8 ஸ்ரீ தொடர் இலக்கமுள்ள நல்ல நிலையிலுள்ள கார் விற்பனைக்குண்டு, 'பீட்டரீஸ் விலா', நாரந்தனை, ஊர்காவற்றுறை. (கிராமசபைக்கு அருகாமையில்.) 275

Isuzu E L F 250 Six Whee மரபொடி நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க, டில்க்கா பேணிச்சர் பலஸ் 234, 236, கே. கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். 271

அச்சுவேலி யாழ்ப்பாணம் வீதியில் வீடு கட்டக்கூடிய 2 பரப்பு காணி விற்பனைக்குண்டு தொடர்புகொள்க ''ராணிஸ்டான்'' (தபால் நிலையம் அருகாமையில்), அச்சுவேலி. 111

கந்தர்மடம் மணல்தறை ஒழுங்கையில் 3 பரப்பு காணி கிணறு சுற்றுமதிலுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க 18/1 மணல் தறை ஒழுங்கை கந்தர்மடம் யாழ்ப்பாணம். 174

அனுபவமும்திறமையுமுள்ள ஜவுளி விற்பனையாளர்கள் தேவை. திறமைக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும். - ராகுல சூரியன்ஸ், இல 122, பிரதான வீதி, பருத்தித்துறை. 251

யாழ். நகரில் நல்ல சூழலில் 1 பரப்புக்காணியும், சித்தன் கேணியில் 4 பரப்புக்காணியும், தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவிலுக்கு ½ மைல் தூரத்தில் 10½ பரப்புக்காணியும் உடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: பொ. சிவபாலன், சட்டத்தரணி, சித்தன் கேணி. 211

நன்கு தொழில் நடந்துவரும் கிறைண்டிங் மில் விற்பனைக்கு உண்டு. க. கந்தசாமி 159/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 224

நாவற்குளி கேரதீவு றோட்டில் நாவற்குளி சந்தியிலிருந்து அரைமயில் தூரத்தில் சகல வசதிகளுடன் வீடு ஐந்துபரப்பு காணியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: A.S R.சிவலிங்கம் பலாலி றோட், கோண்டாவில் 264

அல்சேசன் நாயும் நல்லஇன புறுக்களும், விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு M. K. நயிமுதீன், கட்குளலேன், கொட்டடி யாழ்ப்பாணம். 263

மிகவும் அரிதாக பாவித்த நல்ல நிலையில் உள்ள நாஷனல் கலர் T.V. 17'' அளவு விற்பனைக்குண்டு. அன்ரனா. பூஸ்டரும் தரப்படும். விபரங்களுக்கு 31, பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை மேற்கு, யாழ்ப்பாணம். 260

நல்ல நிலைமையிலுள்ள Honda C 90 (புனரமைக்கப்பட்டது) மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. நகுலாபரன், 90, கொட்டி முந்தல் ஒழுங்கை (பொற்பதி றோட்) கொக்குவில் கிழக்கு, கொக்குவில். 233

## விற்பனைக்கு

யாழ். மாநகரசபை எல்லைக்குள் ஸ்ரீதர் தியேட்டருக்கு அண்மையில் ஸ்ரான்லி வீதியில் ஒன்றரைப் பரப்பிற்கு உட்பட்ட வெறும் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு; 18/2 கச்சேரி கிழக்கு, ஒழுங்கை சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். 261

மாங்குளம் சந்திக்கு அருகாமையில் முல்லைத்தீவு றோட்டில் கட்டிடங்கள் கட்டக்கூடிய இரண்டரைப்பரப்பு காணி விற்பனைக்குஉண்டு நீ ஞானப்பிரகாசம், கொல்லபுளியங்குளம் மாங்குளம். 267

யாழ்ப்பாணம் சுண்டிக்குளியில், கச்சேரி பிரபல பாடசாலை, பஸ்நிலையம், என்பவற்றிற்கு மிக அண்மையில் இரண்டு பரப்புக்காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ப ராஜன் 36/12, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். 242

கட்டுவன் றோட், தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைக்கு அருகாமையில் பதின்மூன்று பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு தொடர்பு: R இராஜரத்தினம், 308, கல்லூரி ஒழுங்கை, வட்டுக்கோட்டை. 200

கேரதீவு வீதியில் நாவற்குளிச்சந்திக்கு அருகாமையில் 2 பரப்புக் காணித்துண்டுகள் உடன் விற்பனைக்கு உண்டு 137, செண். பற்றிக்ஸ் வீதி (பிரதானவீதியிலிருந்து முதல் வீடு) யாழ்ப்பாணம். 279

யாழ்ப்பாணம் கண்டிறோட்டில், அரியாலை ஆரம்பத்தில் திடீரெனப் புதிய ஸ்தாபனம் ஒன்று அமைக்கக்கூடிய சூழ் நிலையில் நவீன மின்சாரவசதிகளுடன் 9 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு;- திரு A.மரியாம்பிள்ளை, இலக்கம். 5, செண். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம். 195

Baby Belling 2 அடுப்பு குக்கர், Hair Driyer, Fruit Juicer, Mixer, Sig Saj தையல் மெசின், நஷனல் Box Fan விற்பனைக்குண்டு. தொடர்பு; 137, செண். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம். 280

எங்கள் தயாரிப்புளான கொப்பி வகைகளும், மொனிற்றேஸ் கொப்பிகளும் சில்லறையாகவும், மொத்தமாகவும் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிகளுக்கு விஷேச கழிவு உண்டு. தமயந்தி அச்சகம் மானிப்பாய், 283

நல்லூர் மூர்த்தவிஞயகர் வீதியில், இருக்கும் மூன்று பரப்புகாணி விற்பனைக்குண்டு. (கோவில் தேவாலயங்கள் பாடசாலை ஆகியன அருகாமையில்) விபரங்களுக்கு: S. W. சோமகன் இல. 3 சந்தண மாதா கோவில் சுண்டிக்குளி. 293

திக்கம் சந்தைக்குப் பின்புறமாக பின்வரும் காணிகள் 20 பரப்பளவில் விற்பதற்குண்டு. பெரிய ஒழுங்கையின் வடக்குப்பக்கமாக உள்ளன, ஒருமித்தும் துண்டுகளாகவும் விற்கப்படும். பெற்றுயிஞர் குறிச்சியிறை நெடுங்கேணி வீரக்கொடிகுறிச்சியிறை தச்சன் குருக்கட்டு தொடர்பு: திருமதி R சிவபாதம் மே/பா. ச. சி. இராமசாமி 'சிவாருள்' பன்னைபட்பதி, புலோலி கிழக்கு, பருத்தித்துறை. 284

## விற்பனைக்கு

இருபது ஏக்கர் தென்னந்தோட்டம் (10 வருட கன்றுகள்) பனையில் உடன் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு 19 சப்பல்வீதி, யாழ்ப்பாணம் 290

## FOR SALE

3 lms. V.C. suitable building-site off K. K. S. Road Uduvil, near A. G. A's office Uduvil and Chunnakam library. Offers invited. Contact Muthuvinayagam, Attorney-at-Law, Suthumalai. 288

Datsun pick up Truck 34 sri single cab one ton one owner. Contact 28 Convent road, Jaffna. 237

## WANTED

Respectable Jaffna Hindu Karawe parents seek partner professional or executive for pretty daughter, Science Graduate, 29 years, employed as junior executive. Good house and substantial dowry provided. Christian may be considered for civil marriage. Apply with full particulars. Advt. No. 287, c/o Eelanadu, Jaffna. 287

## தேவை

சிங்களம் சரளமாகப் பேசக்கூடிய மினி பஸ் சாரதிதேவை யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது. விளம்பர இல. 286 மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 286

எலக்றிக் வெல்டிங் காஸ் வெல்டிங், கம்மாலைவேலை என்பவற்றில் அனுபவம் வாய்ந்த ஆள் உடனடியாகத் தேவை. தகுதிக்கேற்ற சம்பளமும் தங்குமிடவசதியும் செய்து கொடுக்கப்படும். தொடர்பு ஆ. சத்திவேல் வல்வை மெற்றல் இன்டஸ்றிஸ் காங்கேசன் துறை வீதி, வல்வெட்டித் துறை. 291

வயோதிபத்தாயைக் கவனித்து, பராமரிப்பதற்கு அனுபவமுள்ள பெண் உதவியாளர் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும், அ. இராசரத்தினம், 12,BA. தம்பி ஒழுங்கை யாழ்ப்பாணம், 227

கிறைண்டிங் மில்லில் வேலை செய்வதற்கு ஆண்கள் சீயாக்காய் பவுடர், பற்பொடி பைக்கற் செய்வதற்கு பெண்கள் தேவை. தங்குவதற்கு இடவசதியுண்டு தேவன்ஸ் 67, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 223

### மணமகன் தேவை

இந்து வேளாள குல ரோகினி நட்சத்திரம் லக்கினத்தில் செவ்வாயுமுள்ள படித்த 33 வயதுள்ள மணமகளுக்கு, பட்டதாரி, தொழில்நுட்ப, கணக்காளர், உத்தியோகத்திற்குக் குறையாத மணமகன் தேவை. உத்தியோகத்திற்குத் தகுந்த சீதனம் வழங்கப்படுவதுடன் மத்திய கிழக்கில் வேலைவாய்ப்பும் பெற்றுத்தர வசதியுண்டு. சாதகப் பிரதியோடும், மற்றும் உத்தியோக முழு விபரம் உட்பட விண்ணப்பிக்கவும். ''அயோத்தி'' 87, கோயில்வீதி, கொக்குவில்-கிழக்கு, கொக்குவில். 202

## தேவை

யாழ்ப்பாணம் அச்சுவேலி றோட்டில் உள்ள கிராமத்தில் வீட்டிலே தங்கியிருக்கக் கூடிய அனுபவமும் பொறுப்புணர்ச்சியும் உள்ள கார் சாரதி தேவை. தங்குவதற்கு இடவசதியும் சாப்பாடும் கொடுக்கப்படும். 40 வயதிற்கு மேற்பட்டவர்கள் விரும்பத்தக்கது. எதிர்பார்க்கும் சம்பளத்துடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 249, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 249

யாழ். குடாநாட்டில் உள்ள ஏற்றுமதி ஒப்பந்த நிறுவனத்திற்கு பெண் லிகிதர் உடன் தேவை. ஜி சி. ஈ. (சா/த) பரீட்சையில் ஆங்கிலம்உட்பட 5 திறமைச்சித்தி வயது 18—35 ஆங்கிலத்தட்டெழுத்து தெரிந்திருத்தல் வேண்டும், அனுபவம் அவசியமில்லை ஏற்றுமதி இறக்குமதிதுறையில் அனுபவமிருப்பின் விரும்பத்தக்கது 27-1-84ந் திகதிக்கு முன் கடித மூலம் விண்ணப்பிக்கவும் விளம்பர இல 257, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 257

## பயிற்சி

மோட்டார் மெக்கானிஸம்-வெல்டிங் பயிற்சிகள் 01-02-84 ஆரம்பமாகின்றன இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி 11B, மொம்சாக் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 301

### பிறந்ததின வாழ்த்து

சின்னத்துரை தாட்சாயனி [துளசி]



ஒட்டுமடத்தில் வசிக்கும் சின்னத்துரை செந்தமிழ்ச் செல்வி தம்பதிகளின் புதல்வி தாட்சாயனி தமது இல்லத்தில் முதலாவது பிறந்ததினத்தைக் கொண்டாடினார் இவரை பிரான்சில் உள்ள அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, செல்வ மாமா, சித்தி, அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், அக்காமார், அண்ணன்மார், மச்சான்மார், மச்சாள்மார், பூட்டி மற்றும் உற்றார் உறவினர் அனைவரும் இறைவனருளால் சகலகலையும் பெற்று பல்வளத்துடன் பல்லாண்டுவாழ வாழ்த்துகிறார்கள். 305

## வகுப்புகள்

வார இறுதி வகுப்புகள், விசேட மகளிர் வகுப்புகள்— ஆங்கிலம் Typing, Shorthand, வர்த்தகம், கணக்கியல் 7-10ம் வகுப்பு வரையான பாடங்கள் கற்பிக்கப்படும். திருமதி S பூபாளராஜன் B.A. Hons (Lond.) CIS (Lond.) Director of Studies, The Polytechnical Institute, 34/16 கோவில்வீதி, (பிரதான வீதிக்கு 100 யார் அண்மையில்) யாழ்ப்பாணம், 256

## வாடகைக்கு

அரசாங்க / தனியார் கல்லூரிகளில் / ஸ்தாபனங்களில் கல்விகற்கும் மாணவர்களுக்கு. சிறந்த உணவு பாதுகாப்பு, பராமரிப்புவசதிகளுடன் இருப்பிடவசதி உண்டு. தொடர்பு: திலகீஸ், 10, கொன்வென்ற் றோட், யாழ்ப்பாணம். 265

அறை வாடகைக்குண்டு. மாணவிகள்! வேலைபார்க்கும் பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். 46, பிரப்பங்குளம் ஒழுங்கை, வண்ணார்பண்ணை. 151

கொழும்பில் வந்து தங்கிப் போவதற்கு நாளுக்கு ரூ. 50/-க்கு மேற்பட்ட கட்டணத்தில் தொலைபேசி உட்பட சகலவசதிகளுடன் பாதுகாப்பான புதிய மாடி வீட்டில் அறைகள்உண்டு. விரும்பினால் உணவும் வழங்கப்படும். பிரசாத் றெஸ்ற், 11, உப்பரிஸ்சறோட், பம்பலப்பிட்டி, கொழும்பு. 282

## தவறிவிட்டது

கிளிநொச்சியிலிருந்து 20-1-84 காலை புறப்பட்டு யாழ்நகர் வந்த V.S.V. தனியார் பஸ்ஸில் எனது அடையாள அட்டையும் உடைகளும் 5 கொத்து அரிசியும் ஒரு உரப்பையுடன் மாறி எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. சேட், தேங்காய்-மாங்காய் கொண்ட உரப்பை எம்மிடம் உள்ளது. உரியவர் தயவு செய்து எமது பையை ஒப்படைத்து தன்னுடையதைப் பெற்றுக் கொள்ளவும். ஆனந்தசுப்பிரமணியம், சாந்தி நிலையம், கைதடி. 285

## யாருடையது?

சுண்டிக்குளி அஞ்சல் அலுவலகத்தில் உட்பாரற்று இருக்கக் காணப்பட்ட பிரயாணிகள் பை ஒன்றும் அதனுள் இருந்த மூக்குக்கண்ணாடி முதலியவற்றை அஞ்சல் அதிபர் ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டி அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளவும். [கி]

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


## ஐஸ்கிறீம் கொம்பனி
## விற்பனைக்குண்டு

12 டீப்பிறீசர்
5 கோஸ்பவர் ஐஸ்பழமெசின்
2 கோஸ்பவர் ஐஸ்கிறீம் மெசின்
2 வான் 2 லீற் என்ஜின்

ஐஸ்கிறீம் கடை நடத்துவதற்குரிய சாமான்கள் விற்பனைக்குண்டு.

தொடர்பு கொள்ளவும்:
**16, கன்னதிட்டி லேன், யாழ்ப்பாணம்.**
(300)

வார மலர்
ஈழநாடு
EELANADU VARAMALAR

யாழ்ப்பாணத்தின் நீர்ப் பிரச்னை தீர்வுகாணப்படாத தொன்ருகவே இருந்துவருகிறது. விவசாயத்தை அடிப்படையாகக்கொண்ட இந்தப் பகுதியில் இப்பிரச்னை தீர்க்கப் படாமலிருப்பது, ஒரு எச்சரிக்கையாக இருக்கிறது நிதிப் பற்ருக்குறைதான் இதன் காரணமா?

வீழ்ச்சியினுல் சுண்ணும்புக்குழிவுகளில் 100,000 ஏக்கர் அடி நீர் தேங்குகிறது. மழை குறைவாகப் பெய்யும் வருடங்களில் இவ்வாறு தேங்கும் நீரின்அளவுங் குறைவாகவே இருக்கும். இவ்விதமாகத் தேங்கும் நீரிலும் 30-50% கடலுக்குட் செல்கிறது. விவசாயத்திற்கும் மற்றுந் தேவைகளுக்

களவு நீர் இப்பொழுது இறைக்கப்படுகின்றது. இவ்வாறு அதிக நீர் எடுக்கப்படுவதினுல் தேங்கும் நீருடன் உப்புத்தன்மையுள்ள நீரும் சேர்வதற்கு சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. மேலும் மேலதிகமான செயற்கை வளம்படுத்திகளை பயன்படுத்துவதால் நிலத்தின் கீழ்தேங்கும் நீர் நைதரசனுல் அழுக்காக்கப்படுகிறது. சேதனப்பசளைகளைப் பயன்படுத்துவது யாழ்ப்பாண விவசாயிகளின் உடன்பிறப்புப் போன்றது. அத்துடன் வெகுகாலமாக சேதனப்பசளைகள் பற்றி மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை முடிவுகளும், விளக்கங்களும் இருப்பதாலும், செயற்கை வளம்படுத்திகளுக்குப் பதிலாக சேதனப்பசளைகளைக் கூடுதலாக

டம்' ஆகும். இத்திட்டம் நூறு வருடங்களுக்குமுன் பிரேரிக்கப்பட்டது அதன் பிறகு 72 ஆண்டுகளின் பின்பே இத்திட்டத்தின் முதற்கட்டமாக தொண்டமானறு அணைக்கட்டு அமைக்கப்பட்டது. இருந்தும் மிகச்சமீபகாலத்தில் தான் இவ்வணைக்கட்டுத் திருத்தப்பட்டு முற்ருகச் செயற்படத்துவங்கியது. அதன்பின், ஐந்து வருடங்களின்பிறகு அரியாலை அணைக்கட்டுக் கட்டப்பட்டது. பின்பும் ஐந்து வருடங்களின் பின். அடுத்த கட்டமாக கிழக்கு நீரேரிக்குள் கடல் நீர் புகாதவாறு ஆனையிறவில் அணை கட்டப்பட்டது. இக் கிழக்கு நீரேரிக்குள் கனகராயன் ஆறு மற்றும் ஐந்து ஆறுகளினுல் வரும் நன்னீரைச்

# நிதிப் பற்றுக்குறை எப்போது நீங்கும்?

# யாழ்ப்பாணத்தின் நீர்ப்பிரச்னை எப்போது தீரும்?

★ பூச்சிநாசினிகளாலும்
செயற்கை
வளம்படுத்திகளாலும்
நீர் அழுக்கடைகிறது!

★ யாழ். மக்கள்
பூச்சி நாசினியை
தவருகப்
பயன் படுத்துகிருர்கள்

'மயோசின்' யுகத்தில் இலங்கையும் இந்தியாவும் ஒரே நிலப்பரப்பாக இணைந்திருந்தன. இரண்டுகோடி வருடங்களுக்கு முன்பு இலங்கையை இந்தியாவிலிருந்து ஒரு தனித் தீவாகக் கடல்பிரித்தது. கடல் மட்டத்தின் கீழிருந்த யாழ்ப்பாணப்பகுதி, காலப்போக்கில் சுண்ணும்புக் கல்போன்ற கனி உப்புகளின் படிவினுல் கடல் மட்டத்திற்கு மேலான நிலப் பரப்பாக அமைந்தது. இதனுல் குழிவான சுண்ணும்புப் பாறைகள் கீழாகவும், நன் மண், லற்றசோல் போன்ற மண்வகைகளை மேலாகவும் கொண்டதாகவே யாழ்ப்பாண குடாநாட்டின் நிலப்பரப்பு அமைந்துள்ளது.

## மழை வீழ்ச்சியும்

## நீர்த்தேக்கமும்

சுண்ணும்புப் பாறைகளுக் கிடையேயுள்ள குழிவான பகுதியில் தேங்கும் நீரும் (Aquifers), ஒரு போக மழைநீருமே நீர்பாசனத்திற்கும் மற்றும் தேவைகளுக்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பயன்படுத்தப் படுகிறது. வருடாந்தம் பெய்யும் மழையில் எண்பது வீதம் பெரும்போக காலத்திற் பெய்கிறது. பெரும்போக காலத்திற் பெய்யும் சராசரி மழை வீழ்ச்சியான 37 அங்குல மழை

கும் 50,000 ஏக்கர் அடி நீர்சராசரியாகப் பாவிக்கப்படுகிறது. எனவே, தேங்கும் நீரை-குறிப்பாக உவர்த்தன்மையுள்ள நிலங்களில்-குறைவாகப்பாவிக்கவேண்டியது அவசியமாகின்றது. தீவிரமானவிவசாயத்தை மேற்கொள்ளும் இப்பகுதியில் வெட்டக்கூடிய பெரிய கிணறு

பயன்படுத்த விவசாயிகளை ஊக்குவிக்கவேண்டும். மேலும் கூட்டுப்பசளை (Compost) உண்டாக்கும் முறைபற்றியும் விவசாயிகளுக்குச் செய்முறை விளக்கமளிக்கப் படவேண்டும். அதிகளவு பூச்சிநாசினிகளைப் பயன்படுத்துவதாலும் தேங்கும் நீர்அழுக்காக்கப்படுகிறது.

**ஜே. ஜே. நயில்ஸ்**
ஓய்வுபெற்ற பிரதேச / விவசாய அலுவலர்

களிலிருந்தே வேண்டியநீரைப் பெறக்கூடியதாகவுள்ளது.

## நீரழுக்கு

## உப்புத்தன்மை

## ஏற்படக்காரணம்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஒருலட்சம் கிணறுகள் இருக்கின்றன. இவற்றில் 25வீதமானவை விவசாயத்திற்கு மட்டும் பயன்படுவன. எஞ்சியவற்றிலும் 25வீதமானவை விவசாயத்திற்கு மற்றும்தேவைகளுக்கும் பயன்படுகின்றன. முற்காலத்தில் நீரிறைக்கப் பயன்பட்ட துலாக்களுக்குப் பதிலாக இப்பொழுது முற்ருக விரைவாக இறைக்கும் இயந்திர உபகரணங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதனுல் அதி

யாழ்ப்பாணத்தில் தவருன முறையிலும் அதிகளவிலும் பூச்சிநாசினிகள் பயன்படுத்தப் படுகின்றன. (உலகில், இறப்பு விகிதத்தில் இலங்கை முன்னணியிலுள்ளதென அறிக்கைகள் கூறுகின்றன.

## வெளிநாட்டு

## நீரியல் நிபுணர்கள்

## எச்சரிக்கை

நிலத்தின் உவர்த்தன்மை குளோரைட் அயனின் அளவைக்கொண்டே அளக்கப்படுகிறது. கோடைகாலத்தில் யாழ்ப்பாணத்தில் 25வீதமான நிலப்பரப்பில் குளோரைட் அயனின் அளவு அதிகரித்துக் காணப்படுகிறது. 50 வீதமான நிலப்பரப்பே (500 (P. P. Mக்குக் குறைவான) உவர்த்தன்மையற்ற நிலப்பகுதியாகும். அதிகளவு நீரிறைப்பைப்பற்றியும் நிலத்திற்கடியிற் தேங்கும் நீர் உப்புத்தன்மையடைவது பற்றியும் வெளிநாட்டு நீரியல் ஆய்வாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். காங்கேசன்துறையில் சீமெந்து உற்பத்தியை இரட்டிக்கும் நோக்கமாகச் சுண்ணும்புக்கற்களை நிலத்திலிருந்து அதிகளவில் எடுப்பதனுல் உவர்நீர் நிலத்திற்கடியில் வந்து அப்பகுதி வறண்ட நிலமாகிவிடும் எனச் சூழலியலாளர் விடுத்த எச்சரிக்கையும் பயத்தைத் தோற்றுவிப்பதாக அமைகிறது.

## யாழ் நீர்ப்பிரச்சினை:

## ஏரித்திட்டமே

## தீர்க்கும் வழி

யாழ்ப்பாணத்தின் நீர்ப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு ஏற்ற முக்கியவழி 'ஏரித் திட்

சேமிக்கமுடியும். ஆனுல் இவ்வாறு தேக்கப்படும்நீர் பாவிக்கப்படாது கடலுக்குள் விரயமாகின்றது. இவ்வாறு நீர் விரயமாகாதவாறு ஒரு அணைகட்டி ஒரு கால்வாய் மூலம் தேக்கும் நீரை வடமராட்சி ஏரிக்குள் கொண்டுவருவதே முக்கியமான திட்டமாகும். இத்திட்டத்தைச் செயற்படுத்துவதன் மூலம், 10,000 ஏக்கர் நிலத்தைப் பயிர்ச்செய்கைக் கேற்றதாக்குவதுடன், மேலும் 20,000 ஏக்கருக்கு நீர்ப்பாசனத்தை அதிகரிக்க முடியும். அத்துடன் நிலத்திற்கடியிலுள்ளநீரினளவையும் கூட்டி அப்பகுதிக் கிணறுகளின் உவர்த்தன்மையையும் குறைக்கமுடியும். ஏழு லட்சம் மக்கள் இதனுல் பயனடைவர் ஆனுல் கிழக்கு அணையைக் கட்டி கால்வாயையும் அமைக்கும்வரை இது ஒரு வீணை எதிர்பார்ப்பாகவே இருக்கிறது இத்திட்டம் தடைப்பட்டதற்கு நிதிப்பற்ருக்குறையே காரணமாகும்.

# தமிழ்

# தேய்கிறது

தனித் தமிழைப் கடைப்பிடிக்காததால்தான் தமிழ்தேய்ந்து கொண்டு போகிறது ,யாழ்ப்பாணத்திலிருக்கிற தமிழர்களுக்கு இருக்கிற உணர்வுகூட நமக்கு இல்லாமல்போய்விட்டது ..... யாழ்ப்பாணத்தில் பேசும் தமிழைக் கேட்டால் ஆச்சரியமாயிருக்கிறது. 'துறை' என்பதை 'திணைக்களம்' என்று தூயதமிழில் பேசுகிருர்கள்....

பேராசிரியர்
வள்ளரசு

''நாம் என்ன என்ருல் இருக்கிற தமிழ் வார்த்தையைக் கூடச் சரியாய்ப் பயன்படுத்துவதில்லை. பயன்படுத்தாமல் பல வார்த்தைகள் துருப்பிடித்துப் போய்விட்டன....


''வேற்று மொழியிலிருந்து சொற்களைச் சேர்த்துக் கொண்டேபோனுல் அப்புறம் தமிழருக்கு என்ன மரியாதை? தமிழுக்கு இருக்கிறசிறப்பே மொழிவளம் கொண்ட 'பரந்த' மொழி என்பது தான்.'' [க. க]

## ஆய்வுநிலையத்தின்

## எதிர்காலம்

போதிய நிதியைக்கொண்டு மேற்படி திட்டத்தைப் பூர்த்தியாக்கும்வரை வேறு குறுகிய காலத்திட்டங்களைக் கையாள வேண்டும். உதாரணமாக, நீர்ப்பாவனையைப் பொருளாதார ரீதியில் குறைத்துக் கொள்ளவேண்டும். (தூர்ப்பாசனம், துளிமுறை, திருத்திய வாய்க்கால் முறை); உவர்நில மீட்சி (1969 இல் ஜப்பானிய வல்லுநர்களால் மேற்கொள்ளப்பட்ட யாழ்ப்பாணத்தின் மண் ஆராய்ச்சியின் படி); கிணறு தோண்டுவதைக் கட்டுப்படுத்தல், கற்பாறைகளுள்ள நிலங்களைப் பாவிக்க நடவடிக்கையெடுத்தல்; குறைந்தளவு நீருடன் உண்டு பண்ணக்கூடிய பயிர்களைப் பயிரிடல் (எண்ணெய்ப் பயிர்கள் போன்றவை); இப்படியான முறைகளை அறிமுகப் படுத்துவதற்கேதுவான ஆராய்ச்சிகளைச் செய்வதற்கு திருநெல்வேலியிலுள்ள ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த

(15-ம் பக்கம் பார்க்க)




ரஸ்ட் ரவல் சேர்வீஸ்

தலைமை அலுவலகம்

11/A, மொம்சாக்கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T. P. 24111

ஹைதிராமணி ஆர்காட் 65, சதாம் வீதி, கோட்டை. T. P. 548409, 548811

★ பிரயாண முகவர் தொழிலின் 18 வருட அனுபவம் உள்ளவர்களின் மேற்பார்வையில் நடாத்தப்படும் இந்த ஸ்தாபனம் இன்று முன்னணியில் நிற்கும் பிரயாண முகவர் காரியாலயங்களில் ஒன்ருகும். ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்!

★ ஏரோபுளட் சி. எஸ். ஏ. (C. S. A.), எயர் லங்கா, விமான டிக்கட்டுகளில் விசேட கழிவு தரப்படும்.

★ குறைந்த கமிசனில் பிரயாணிகள் காசோலை செய்து தரப்படும்.

★ தரகர்கள் இன்றி நீங்களே டிக்கட்டுக்களை பெற்றுக்கொள்ளலாம்.

B. R. No: 105190

# சுவாமி ஞானப்பிரகாசர் பற்றி

## ஹன்டி பேரின்பநாயகம்

ஞானப்பிரகாச சுவாமிகளின் எழுத்துக்களிலிருந்தும், அவருடன் நான் நடத்திய சம்பாஷணைகளிலிருந்தும் தெரிந்துகொண்ட வரையில், அவர் தமது ஆராதியில் விளக்கிய ஆய்வுப்பேறு என்னவெனில் இந்திய - ஐரோப்பிய மொழிகள் குழாம் எனப்படும் மொழிகள் ஒரு சுயாதீனமான, தனித்துவமான மொழிக் குழாத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை என்பதும், ஆனால் அவை தமிழினைத் தாய்மொழியாகக் கொண்ட திராவிடக் குடும்பத்தின் வழித்தோன்றல்களே என்பதும், இம்மொழிகளின் பூர்வமூலங்களை ஆராய்வதன்மூலமும், அவற்றைத் தமிழ்மொழியினது மூலங்களுடன் ஒப்புநோக்குவதன்மூலம இக்கருத்தை ருஜுப்பிக்கமுடியும் என்பதுமேயாகும். இதனை ருஜுப்படுத்துவதில் இவர் நன்கறியப்பட்ட மொழியியற் கோட்பாடுகளை ஆதாரமாகக் கொண்டார்.

ஞானப்பிரகாச சுவாமிகளுடைய கூற்றுப் பிரகாரம், ஒரு காலகட்டத்தில் தமிழை அல்லது அதன் பிரா இருதங்களை, அதாவது, விருத்தி குன்றிய மாற்று வழக்குகளைப் பேசிய மக்களே இந்தியாவில் வாழ்ந்தனர். திராவிட மக்களில் பெரும்பாலானோர் தெற்குப் பிரதேசத்திற்கு விரட்டியடிக்கப்பட்டபோது, ஊடுருவாளர்கள் இவர்களில் ஒரு பகுதியினரைத் தம்முள் ஈர்த்துக்கொண்டு இந்தப் பூர்வ குடிகளின் மொழிகள்மீது தமது சொந்தப் பேச்சு மொழியினைத் திணித்தனர்.

மொகஞ்சதாரோவிலும் ஹரப்பாவிலும் கண்டெடுக்கப்பட்ட தொல்லாதாரங்களும், இந்நாகரிகத்தை உருமலர்த்திய மக்களினது மொழியை ஹேரால் புனரமைத்ததையும், ஞானப்பிரகாச சுவாமிகளின் ஆய்வுமுடிவுகளை உறுதிப்படுத்துவனவாக உள்ளன.

### ஐரோப்பிய

### மொழிகளின்

### பூர்வமூலம்

'நவீன ஐரோப்பிய மொழிகளின் பூர்வமூலங்கள் திராவிட மொழிகளே' என்ற கருத்தும், 'ஒரே சந்ததி வழிவந்த திராவிடர்கள் ஒரே பிரதேசத்தில் வசித்தும், ஒரே மொழியினைப் பேசியும் வந்தார்கள்' என்ற கருத்தும் இவரது ஆய்வுரையின் குறிப்பிடத்தக்க பிற அம்சங்களாகவும் இதே கருத்தை சுயேச்சையான, எதிர்பாராத பிறிதொருதரப்பும் உறுதிப்படுத்தியுள்ளது.

மேற்கு ஆசியாவிலும். ஐரோப்பாவிலும் பிரயோகிக்கப்படும் எண்ணூற்றுக்கும்

(16-ம் பக்கம் பார்க்க)

# காகமும்

# பசுவும்

பறந்து வந்தாள்,
காக்கா
பசுவின் மேல் இருந்தாள்
கறுப்பி அக்கா
காக்கா கத்திச்
சத்தம் போட்டாள்

கொத்திப்
பூச்சி பிடித்தாள்
கொஞ்சம் தத்தி
இருந்தாள்
குத்திக் கொத்திக்
கொஞ்சம் குறும்புஞ்
செய்து
பார்த்தாள்

வெள்ளைப் பசு மாமி
வீசிவிட்டாள்
வாலால்
மெல்ல
எழும்பிக் காக்கா
மேலே பறந்து போனாள்.

கல்வயல்
வே. குமாரசாமி


குறேஸ் ட்ரவல் சேர்விஸஸ்
[CROSS TRAVEL SERVICES (PTE)]
லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின்

மற்றுமோர் புதிய முயற்சி

"CROSS TECHNICAL SERVICE"
குறேஸ் டெக்னிக்கல் சேர்விஸ்

★ MENOLTA போட்டோஸ்ரற் கொப்பி மெஷின்கள் ★ MENOLTA கமராக்கள் மற்றும் மின்சார உபகரணங்களின் ஏக விநியோகஸ்தர்களான

குறேஸ் டெக்னிக்கல் சேர்விசில்

★ NATIONAL குளிர்சாதனப் பெட்டிகள் ★ BLACK AND WHITE COLOUR T.V. ★ றேடியோக்கள் ★ கார் றேடியோக்கள் ★ VEDIO ★ GAS COOKERS ★ ELECTRIC COOKERS ★ எல்லாரக மின் விசிறிகளும் மின்கேற்றல் ★ SPEAKERS ★ AMPLIFIERS ★ DINNER SETS ★ PYREX ★ CORRELLE ★ HAIR DRYER ★ PHOTOSTAT PAPER இன்னும் பல வீட்டுப்பாவனைப் பொருட்களையும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

NOTE, எல்லா மின்சார உபகரணங்களுக்கும் உத்தரவாதப் பத்திரம் (GUARANTEE CARD) வழங்கப்படும்.


## மாரியே அருள்வாய்

மணற்காட்டில் அமர்ந்தவளே மாரி
மனச்சஞ்சலத்தைத் தீர்ப்பவளே மாரி
நினைந்த வரம் கொடுப்பவளே மாரி
நிம்மதிகள் தருபவளே மாரி
பார் சிறக்க அருள்பவளே மாரி
பல கலைகள் தருபவளே மாரி
சீர் பொழிவாய் அகிலமெலாம் நீயே
தீமையெலாம் போக்கி யருள்வாயே.

காரை பா. அருளானந்தன்

● (காரைநகர் மணற்காடு முத்துமாரியம்மன் கோவிலில் இன்று மாலை பாலஸ்தாபனக் கிரியைகள் ஆரம்பம்)


நெஸ்லேயின் சிறப்புகள் அனைத்தும்...
உங்களுக்கு வசதியான விலையில்

நெஸ்பிரே
ரூ. 24.00




நெஸ்லேயின் உத்தரவாதம் கொண்ட நெஸ்பிரே முழு ஆடைப் பால் மாவின் கவர்ச்சியான புதிய விலையை அறிவிக்கிறோம்.

— 28% பால் கொழுப்பு, புரதச்சத்து, மேலதிக விற்றமின்கள் கொண்ட நெஸ்பிரே போஷாக்கில் அக்கறையுள்ள தாய்மாரின் முதற் தெரிவாகும்.

நெஸ்லேயின் உலகப்புகழ் வாய்ந்த தரக் கட்டுப்பாட்டிற்கு உள்ளாகும் நெஸ்பிறேயை தூய்மையிலும் புதுச்சுவையிலும் அக்கறையுள்ள இல்லத்தரசிகள் விரும்பி நாடுகிறார்கள்.

விலையிலும் கரிசனைகாட்டும் ஒவ்வொருவரின் விருப்பத்தையும் ஈடுசெய்ய நெஸ்பிறே இப்பொழுது புதிய விலையில் வருகிறது

நெஸ்பிறே போஷாக்கும் கிறீம் சுவையும் மிக்கது. உங்கள் குழந்தைகள் ஆசையோடு பருகி ஆரோக்கியமாக வளர்வார்கள் உங்கள் குடும்பத்திற்கு மிகச் சிறந்தது இருக்கையில் வேறெதையும் நாடுவானேன்?

இன்றே ஒரு பக்கெட் வாங்குங்கள், தொடர்ந்தும் வாங்குங்கள்.


நெஸ்பிறே

வளரும் பிள்ளைகளுக்கு நெஸ்லே வழங்கும் பால்

கிராம் 400
விலை ரூபா 24/-

Grant K & E 5246

## எமது சிறுகதை




''அம்மா... ஒவ்வொரு நாளும் சனியன்பிடிச்ச மாதிரி வாசலிலைதான்...'' கையில் 'ஏசியா' சைக்கிளைப் பிடித்தபடி 'கெமிஸ்ரி கிளாசுக்கு'ப் புறப்பட்ட கிரிஜா கொடுத்த குரல் தாய் கனகம்மாவை ஒரு முறை உலுப்பிவிட்டது:

''என்ன பிள்ளை?'' என்றவாறே வாசலுக்கு வந்த கனகம்மாவுக்கு ஓரளவுக்கு நிலைமைவிளங்கிவிட்டது.

தாயைக்கண்டதும் கிரிஜாவுக்கு இன்னமும் வாய்நீண்டு கொண்டது.

''...இந்த மனிசியிலை ஒவ்வொரு நாளும் முளிச்சிப்போறதிலையும் வகுப்புக்கு போகாமலிருந்திடலாம்...என்றபடி சைக்கிளைவீட்டை நோக்கித் திருப்பிக் கொண்டே தொடர்ந்தாள்...

''புருசன் செத்தா வீட்டுக் கைகிடக்கிறதை விட்டிட்டு ஒவ்வொரு நாளும் முத்தத்திலைதான் உலாத்து. இதிலை முளிச்சுப்போனா விடிஞ்சாப் போல்தான்..

''அதுசனியன் கிடக்கட்டும் மோனை! நீ அங்கைபாராமப் போபிள்ளை'' என்றபடி மகள் சைக்கிளைத் திருப்பிவிடாமலிருக்க ஆறுதல் கூறி கேற்றைத்திறந்து வெளியே அனுப்பிவிட்டுத் தான் உள்ளே வந்தாள் கனகம்.

உள்ளேவந்த கனகம்மாவுக்குக்கண்கள் இரண்டும் எதிர் வீட்டு முற்றத்தில் நின்ற சரசுவை எதிர்ப்பது போல் பார்த்தன ''அவளின்ரை சதிராட்டமும் ஸ்ரைலும்'' வாய் முணுமுணுத்துக் கொண்டது.

சரசு கட்டியிருந்த மெல்லிய நீலச் சேலையும் அவள் முகத்தில் ஓடியிருந்த சோகக்களையும் கணவனையிழந்தவள் என்பதை, காணுபவர்களுக்குச் சொல்லாமல் சொல்லிக்கொண்டிருந்தன. கனகம்மாவின் வார்த்தையில் சொல்வதாயிருந்தால் ''புருஷனையிழந்தவள்'' கழுத்தில் மாங்கல்யம் மின்னவில்லை. நெற்றியில் குங்குமம் மிளிரவில்லை. அந்தத் தெருவில் இருப்பவர்களுக்கு சரசு ''விதவை'' என்பது புரியும்.

சரசுவுக்குத்தான் எத்தனை சோதனைகள்.. ஒரே பிள்ளையான அதுவும் பெண்ணுகப் பிறந்துவிட்ட பாவத்திற்காக அவளை வாழ வைக்க ஒரே துணை 'பென்சன்' தான். சரசு தெருவிற்கு வரக் கூடாது. அவள் குங்குமமிழந்து நிற்கும் பொது அவளில் முளித்துப் போனல் சகுனப் பிழை. ஒன்றை இழந்த துயரம் ஒன்றை வாழவைக்க வேண்டும் என்ற வேதனை. இவற்றுக்கு நடுவே 'சகுனம்' என்ற சுவரின் புலம்பலுக்கு அவளும் தன் தலையை ஒளித்து மறைக்க வேண்டிய அவலம்.

முன் வீட்டிலிருக்கும் கனகம்மாவிடம் தப்புவதென்பது சரசுவுக்கு பெரும் பிரச்சனை. ''என்ன சரசு'' என்று ஆரம்பித்து ஆறுதல் கூறுபவள் போல் ஒரு பாவனை பண்ணி ''இன்னும் உன்ர அவர் செத்தது எங்களுக்கு இண்டைக்குப் போலை கண்ணுக்கை நிற்குது. நீ கொஞ்ச நாளைக்கு வீட்டுக்கை இருக்கப்படாதே'' என்று நாசுக்காக 'குத்தல்' போடும் போது சரசுவிற்கு வேதனை தாளாது.

சரசுவின் மகள் பூரணம் சொல்லும் ஆறுதல்தான் இன்றைக்குச் சரசுவை ஓரளவுக்காவது இவ்வளவு தூரம் உயிருடன் உலாவ வைத்திருக்கிறது. இல்லையேல் இந்தப் பாழும் சமூகம் அவளை என்றைக்கோ கொன்றிருக்கும்.

''ஏனணை அம்மா வீட்டிக்கை கிடந்து அவியிறாய். சொல்லிறவை சொல்லிக் கொண்டு கிடக்கட்டும்'' என்று பூரணம் கூறும் அன்புவார்த்தைகள் தான் அவளை இன்றைக்கு உலாவவைத்திருக்கிறது.

●

''அம்மா... நான் வகுப்புக்குப் போட்டுவாறன். மழைக்குணமாய் இருக்கு. குடையைக் கொண்டு போறன்...'' பூரணம் வகுப்புக்குப் போவதாகக் கூறிக்கொண்டு புறப்பட்டபோது சரசுவுக்கு வேதனையாக இருந்தது. மெல்லிய நிறமாய்சாயம் போயிருந்த உடுப்பொன்றைப் போட்டுக் கொண்டு இன்றைக்கோ நாளைக்கோ அறுந்துவிடும் போல் அடித்தோல் பாதத்தை விட்டுக் கழன்று பாதத்தைத் தூக்கி வைக்கும் போதெல்லாம் 'டக்! டிக்!' என்று சத்தமிடும் செருப்பை மாட்டிக் கொண்டு நடந்து போனதைப் பார்த்த போது...'

'அவர் இண்டைக்கு இருந்திருந்தால் பிள்ளை இப்படியே போவாள். அடிக்கடி சொல்லுவார்.பாரன் சரசு என்ர பிள்ளை டாக்குத்தராகி என்னையும் ஏத்திக் கொண்டு 'போர்ட்' காரிலை போருளோ இல்லையோ எண்டு...'

அன்றைக்கு அவர் சொன்னது இன்றைக்கு அவள் மனதைத் துளைத்தது.

''ஓம் பிள்ளை! கெதியாப் போ. நேரம் போட்டுது.'' கனகத்திடம் கிரிஜா இப்பதான் போகுது என்ற சரசு 'கேற்' வரை பூரணத்தை அனுப்பி விட்டு தெருவை ஒரு முறை வலமும் இடமும் திரும்பிப் பார்த்து விட்டு உள்ளே போனன்.

குங்குமமிழந்த தாயின் நெற்றியையும் முகத்தையும் ஒரு முறைபார்த்துத் தலையசைத்துச் சிரித்துவிட்டு பூரணம் விறுவிறுவென வகுப்புக்குப்போய்க் கொண்டிருந்தாள். அவளும் கிரிஜா போகும் கண்ணன் மாஸ்ரரின் 'கெமிஸ்ரி கிளாசு'க்குத் தான் போய்க் கொண்டிருந்தாள். ஆனல் 'ஏசியா'வை விட வேகமாகப் போய்க் கொண்டிருந்தாள்.

கண்ணனின் வகுப்புக்கு மாணவமாணவிகள் தனியாகவும் கூட்டங் கூட்டமாயும் போய்க் கொண்டிருந்தனர். சிலமாணவிகள் பூரணத்தின் அம்மா என்ற முறையில் திரும்பிச்சரசுவைப் பார்த்துச்சிரித்து ''பூரணம் போயிட்டாவோ? என்று கேட்டு 'ஓம்பிள்ளையள்' என்ற சரசுவின் பதிலையும் பெற்றுக் கொண்டுவிரைந்து கொண்டிருந்தனர்.

கனகம்மாவுக்கு இவையெல்லாம் வளவுக்குள் நிற்கவே தெரிந்தது.

''தகப்பன் செத்திட்டா 'கற்பூரம் சுத்துற' துக்குப் போய்ப் பிழைப்பமெண்டில்லை. அவவுக்கும்படிப்பு. போதாக் குறைக்குக்கண்ணனிட்டையும் 'ரியூசனுக்குப் போகக்கேக்கிது. எல்லாம் எடுபாடுதான்'' - கனகம் வாய்க்குள்ளேயே முணுமுணுத்துக் கொண்டாள்.

வீட்டைநோக்கித் திருப்பியவளுக்குக் கணவன் கதிர்காமு எங்கேயோ புறப்படுவது தெரிந்தது.

''நான் ஒருக்காக்கடைப்பக்கம் போட்டுவாறன்? ஏதேனும் வாங்கோணுமே?'' - வழக்கமான கேள்வியை கதிர்காமர் கேட்கத்தவறவில்லை.

''ஓமப்பா! நாளைக்கு கிரிஜாக்குச் சோதினை தொடங்குது. மோல்டோவாமுடியுது. வாங்கியாங்கோ. அதோடை மிளகாய்மல்லி யோடை கோப்பிக்கும் சாமானுகள் வாங்கியாங்கோ... வந்து...ஏதோ நினைச்சனுன் மறந்து போனன் ...ஆ! கோப்பிக்குச் சாமன் வாங்கிறதிலும் 'நெஸ்கபே' ரின்னிலை ஒண்டை வாங்கியாங்கோவன். அதைஇனிஆர் வறுத்து இடிச்சுக் கொண்டிருக்கிறது...'' - நீண்டபட்டியல் போடத் தொடங்கிவிட்டாள் கனகம்.

''இஞ்சேருங்கோ இன்னுமொண்டைமறந்து போனன் நல்லகாலம் நினைச்சது. 'பிரிண்டட்கொட்ரேய்' சிங்கப்பூர்த் துணி புதிசா வந்திருக்காம். கிரிஷா சொன்னவள். நல்லதாப் பார்த்து இரண்டு வேறை வேறை கலரில மூண்டு மூண்டு யார் வாங்கியாங்கோ. அவள் வாறகிழமை தன்ரைசிநேகிதியின்ர 'பேர்த்டே' எண்டவள் போடட்டுமன்'' என்றவள் ஏதோஞாபகம் வந்தவளாய் உடனேயே, ''கொஞ்சம் இருங்கோ, தேத்தண்ணி போட்டுத்தாரன் குடிச்சிட்டுப் போகலாம். அங்கைவாசலுக்கை வெளிக்கிட்ட உடனே சரசு சனியன் மாதிரி நிக்கிருள். அவளிலை முளிச்சுப் போனல் எல்லாம் பரிநாசம்தான்'' என்று வெகுண்டு கொண்டு தேத்தண்ணிச் சாட்டில் கதிர்காமரைத்தங்கவைத்து விட்டாள்.

கதிர்காமருக்கு நாளும் பொழுதும் சகுனம், முளிவியளம் என்று அதிலேயே ஊறி ஊறி யாரோ ,உளவியல் விஞ்ஞானி சொன்னது போல் அந்தப்பழக்கம் அவரோடு ஒட்டிக் கொண்டு விட்டது.

கதிர்காமர் தேத்தண்ணி குடித்துக் கொண்டிருக்கும் போதுவெளியே வந்துபார்த்த கனகத்திற்கு அப்பாடா என்றிருந்தது. கெதியாய்க்குடிச்சிட்டுப் போங்கோ. அவள் சரசு 'கேட்'டுக்கை இல்லை. தெருவும் சந்தடியில்லாமல் கிடக்கு, என்று கதிர்காமரை அனுப்பிவிட்டு வந்தபோது தான் நிம்மதி வந்தது.

●

வகுப்பிலே 'மொடல்' பேப்பர் கொடுக்கப்பட்டிருந்தது. மறுநாள் 'அட்வான்ஸ் லெவல்' சோதனை. ஆனபடியால் ஒரு முதல்தேர்வை 'மாஸ்ரர்' நடத்திக் கொண்டிருந்தார்.

கிரிஜாவுக்கு சரசுவில் தான் 'முளித்து'வந்ததே நினைவில் நின்றது. எதிரில் இருந்த பூரணத்தின் பிடரிப்பகுதியை வஞ்சத்துடன் பார்த்துக் கொண்டாள். 'மாஸ்ரர்' உடனேயே சரிபிழை பார்ப்பதில் ஈடுபட்டார். பிள்ளைகள் தங்களுக்குள் தீர்வு காண்பதில் ஈடுபட்டிருந்தனர்.

கீச்சுக் குரல்கள் சரி பிழைகளை சமப்படுத்திக் கொண்டிருந்தன.

''வெரி குட்! இதாற்ற பேப்பர்? ஓ! பூரணம்! நல்லாச் செய்திரிக்கிரு ஹயஸ்ற் அது தான். எயிற்றி போர்—மாஸ்ரரின் குரல் ஒலித்த போது ஒரே அமைதி.

'' சரளா, சுகந்தி, ஆர்த்தி இவையளும் நல்லாச் செய்திருக்கினம். சில ஆட்கள் உதவாது. நாளைக்கு என்ன செய்யப் போகினமோ தெரியாது. ரோகினி, ஆனந்தி' கிரிஜா

(6ம் பக்கம் பார்க்க)

## மானுடத்தின்

## வெற்றிகள்

மனிதன் மனிதத் தன்மையுடன்
மண்ணில் நிறைந்து வாழ்வதுவும்
மனிதன் புனிதத் தன்மையுடன்
மண்ணில் மறைந்து போவதுவும்
மனிதன் மதியை வளர்த்தென்றும்
மலிவாய்க் கொடுத்து மகிழ்வதுவும்
மனிதன் மனிதனை மதித்தென்றும்
மதிப்பைப் பெறுவதும் மாவெற்றி!

மனிதன் மனமது மலராஞல்
வாயில் வரும்மொழி தேனுகும்
மனிதன் மனமது மலையாஞல்
வன்மொழி வழியே வாயாகும்
மனிதன் மனமது அலையாஞல்
வாய்வழி மொழியும் வழுவாகும்
மனிதன் மனதொரு நிலையாஞல்
வாய்மொழி வெற்றியின் வளமாகும்.

புதியன கண்டே பிடிப்பதற்குப்
புத்தியும் பொருளும் பொருந்துவதும்
முதியவர் காட்டிய முறைகளினை
முன்னேற் பாடாய்க் கொள்வதுவும்
சதியெது மற்ற சக்திகளைத்
தமக்குறு துணையாய்த் தாங்குவதும்
விதியெனக் கொண்டால் வெற்றியெனும்
விளைவுகள் கூடி விருதுவரும்.

பள்ளிப் படிப்பொரு படியாகும்
பாரைத் தொடுப்பது பணியாகும்
உள்ளத் திடமது உணர்வாகும்
உயரிய சிந்தனை ஒளியாகும்
அள்ளிக் கொடுப்பது அன்பாகும்
அளந்து எடுப்பது பண்பாகும்
விள்ளும் கருத்துகள் விளைவாஞல்
வெற்றிப் படிக்குயர் விதியாகும்.

நல்லபி விருத்திப் பாதையிலே
நாட்டம் வைப்பதும் நடைமுறைக்கண்
சொல்லபி விருத்தி சுபசெயற்கண்
சுபிட்ச மாவதும் அதற்குதவும்
வல்லமை யெல்லாம் எந்திரக்கண்
வைத்திருப் பதுவும் மனிதனது
நல்லகப் பாங்கும் நுண்ணறிவும்
நல்கிய நயமார் வெற்றியதே!

வெள்ளிக் கிண்ணம் தங்கக்கிண்ணம்
விளையாட் டின்கண் விருதுகள்தாம்
புள்ளிக் கண்முன் பொருந்துமுயர்
புகழார் தேட்டப் பொருட்களுமாம்
பிள்ளைப் பேறின் பெறுபேறு
பிதாமா தாவின் பெரும்வெற்றி
வெள்ளிக் கிண்ணம் தங்கமல்ல
வீரனெம் மகவென விளங்குவதே!

- வே. ஐயாத்துரை

# சகுனங்கள் மாறுகின்றன

சிறுகதை

(5ம் பக்கத் தொடர்ச்சி)

இவை துப்பரவாச்செய்யேல்லை என்ன பிரச்சனை சொல்லுங்கோ! ஆ...!,'

மாஸ்ரர் கேட்டபோது கிரிஜா தலையைக்கீழே தாழ்த்திக் கொண்டாள். தன்னுடையபலவீனம் வெளிப்பட்டது நெஞ்சைஉறுத்தியது, எழுந்துபூரணத்தைப் பிடித்து ''உன்ர கொம்மாவிலைதான் முழிச்சு வந்தனான் அதுதான் இந்தக் கதி என்று சொல்ல வேண்டும் போல் இருந்தது' பேசாது இருந்துவிட்டு'ஏசியாவில் ஏறி வந்து இறங்கியதும் வீட்டுக்குள் ஓடிப் போய் கட்டிலில் விழுந்து அழத் தொடங்கி விட்டாள்'

கனகம்மா வந்து விஷயத்தைக் கேட்ட போது விக்கி விக்கி விஷயத்தை சொன்னாள். '' நாளைக்கு சோதினைக்குப் போகேக்கை பார்த்துப் போகலாம். இப்ப எழும்பி முகத்தைக் கழுவிப் போட்டு கோயிலுக்கு போட்டு வா. எனக்கு நீ போகேக்கையே தெரியும் சரசு வாசலிலை நிண்டது''

கதிர்காமரும் சிறிது நேரத்தில் வந்து விட்டார், துணி கிடைக்கவில்லை என்று கையை விரித்தார்.

எனக்குப் போகேக்கையே தெரியும் ''சனியன் மாதிரி...'' வேறும் ஏதோ சொல்ல நினைத்தவள் வாயை மூடிக்கொண்டாள். திரும்பிப் பார்த்து கிரிஜா நிற்பதைக் கண்டதும் ''போ பிள்ளை கெதியாய்க் கோயிலுக்கும் போட்டு வா மழை வரும் போலை கிடக்கு,' என்று அவளை அனுப்பினாள்.

'மோல்ட்டோவா நெஸ்கபே' மட்டும் சகுனம் பாராமல் கிடைத்து விட்டது. துணி கிடைக்காததற்கு மட்டும் சகுனம் குறுக்கே வந்துவிட்டது. அவளுக்குத் தெரியாது அப்படி ஒரு சிங்கப்பூர்த் துணி அந்த நேரம் கடைக்கு வரவில்லை என்பதும் அது யாரோ சொன்ன பொய்க் கதை என்றும் கதிர்காமர் அறிந்து வந்த இந்த விஷயத்தைச் சொல்ல முன்னரே சகுனப் பிழையைக் கூறி ஒரு பாட்டம் தீர்த்தாயிற்று.

●

',கொம்பாஸ் எடுத்திட்டியே! 'அயிடன்ரி காட்'எல்லாம் சரியோண்டு பாத்திடு சுட்டிலக்கத்தை ஒரு துண்டிலை குறிச்சு வைச்சிட்டா சுகமெல்லே.,என்று கனகம்மா கிரிஜாவைப் பரீட்சைக்கு அனுப்புவதில் மும்முரமாக இருந்தாள். ''எல்லாம் சரி என்று மட்டும் கிரிஜா சொல்லிக் கொண்டாள். ஏதோ அந்நிய நாட்டுக்கு உல்லாசப் பிரயாணம் செய்பவள் போல் அழகிய இள நீல ,பெல்ஸ்' போட்டு 'ஜுபர்' என்று நெஞ்சிலே அச்சிட்டு கறுப்பிலே பாதங்கள் போல் ''டிசைன் பண்ணிய ஆண்கள் அணியும் பெனியன் ஒன்றை அணிந்து மணிக் கூட்டில் நேரத்தைப் பார்த்து தன்னுடைய கைக்கடிகாரத்தை 'செற்' பண்ணி நீல நிறப் பட்டியை மாற்றிக் கொண்டிருந்தாள் கிரிஜா.

,'சரி பிள்ளை, நான் போய் 'கேற்றுக்கை' பாத்திட்டு கூப்பிடுறன் வா'' என்று சொல்லிக்கொண்டு கனகம் வெளியே வரவும் பூரணம் பரீட்சைக்கு புறப்படவும் சரியாக இருந்தது.

''கனகம் மாமி! கிரிஜா போயிட்டாவே?'' என்று பூரணம் கேட்ட போது கனகம் வாயைச் சுழித்துக் கொண்டாள்:

''இல்லப்பிள்ளை அவள் இப்பத்தான் சாப்பிடுகிறாள். வர நேரம் செல்லும்'' என்று விட்டுத் தெருவைப் பார்க்கவும் வெறுங் குடத்துடன் பூமணிக் கிழவி தண்ணீர் எடுப்பதற்காகக் கந்தையர் வீட்டுக்கு போவதற்கு வரவும் சரியாக இருந்தது.

''என்ன பிள்ளை சோதினைக்கே?'' என்று பூமணிக் கிழவி கேட்ட போது

''ஓம் ஆச்சி சோதினைக்குத்தான் நீங்கள் எங்கை தண்ணி எடுக்கவே'' என்று அன்பாகக் கேட்டாள் பூரணம்.

',நீ போ பிள்ளை நேரம் போகப் போகுது''என்று பூரணத்தை அனுப்பினாள் பூமணி ஆச்சி.

கனகம்மாவுக்கு ஒரு மாதிரி இருந்தது. 'நல்ல காலம் கிரிஜா வந்திருந்தா வெறுங் குடத்தில்தான் முளிச்சுப் போயிருப்பாள் தப்பிற்றாள்'' என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டாள். ''சரசு வழக்கமாய் மற்றவை நல்ல காரியத்துக்குப் போகேக்கை கேற்றுக்கை வந்து நிற்கிறதுக்கு இது ஒரு பாடம்'' என்று உள்ளம் பூரித்தாள். ஆனால் பூரணத்திற்கு அதைப் பற்றியே கவலை இல்லை. அது வெறும் குடமென்றாலென்ன? பாற்குட மென்றாலென்ன? எல்லாம் ஒன்றுதான் ''

''பிள்ளை கெதியாய் வா'' என்று கனகம்மா குரல் கொடுக்க கிரிஜா ,ஏசியா'வுடன் வந்து பரீட்சைக்குச் சென்று விட்டாள். பரீட்சைகள் அனைத்தும் முளிவியளத்தோடு நிறைவேறி விட்டன, கனகம்மாவுக்கும் கிரிஜாவுக்கும்.

●

காலம் சுழல்கிறது. நல்ல மழைக்காலம் தொடங்கி விட்டது. குளிரோ தாங்க முடியாது. கதிர்காமர் தேத்தண்ணீர் குடித்துக் கொண்டிருந்தவர் திடீரென்று நெஞ்சு வலிப்பதாகக் கூறினார். அந்தக் குளிரிலும் கதிர்காமருக்கு வியர்த்துக் கொட்டியது. கனகம்மா போட்ட கூப்பாட்டில் அயலில் உள்ளவர்கள் ஓடி வந்து ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர், முடிவு 'காட் அற்ரெக்' கதிர்காமர் மோசம் போய் விட்டார் என்ற போதே எல்லோரும் அதிர்ந்து விட்டனர்.

கனகம்மாவும் உற்றார் உறவோடு 'றேடியோ' வுக்கும் கொடுத்து ஒரு மாதிரியாக சகல கிரியைகளும் முடித்து விட்டாயிற்று. வந்தவர்கள் வந்தவழியே போய் விட்டனர். சரசுவும் பூரணமும் இருக்கும் நிலையே கனகத்திற்கும்' கிரிஜாவிற்கும்.

கனகம்மாவிற்கு வெள்ளைச் சேலை கட்டப் புடிக்கவில்லை. ''நான் என்னடி கிழடியோ'' என்று ஒரு சுழிப்பு. கிரிஜா கூடச் 'சப்போட்' பண்ணினாள்.

''அம்மாவுக்கு அப்பா இருக்கேக்கை சொல்லுறவர் நீ குங்குமம் இல்லாமல் இருக்கப்படாது நான் இல்லா விட்டாலும் நீ அப்படி இருக்கப் படாதென்று எனத் தகப்பன் சொல்லியிருந்ததாக ,லேபல்' கட்டிக் கதை அளந்தாள்.

மற்றவர்களுக்குக் கனகம்மாவின் போக்குப் பிடிக்கவில்லை. கனகம்மாவோடு சேர்ந்து சரசுவைத் திட்டித் தீர்த்தவர்கள் திசை மாறிக் கனகம்மாவைத் திட்டத் தொடங்கினர்.

''அவவிடை சோக்கைப் பார் . புருசன் செத்து ஆறு மாசம் ஆகேல்லை. அதுக்கிடையிலை சிங்கப்பூர் நைலெக்சும் ஆளும்...''

இவையெல்லாம் கனகம்மாவின் செவிகளுக்கு ரீ.வி அலைகளாக எங்கிருந்தோ வந்து 'வீடியோ ரேப்' போல மனதில் ஒவ்வொரு காட்சியும் மாறி மாறிப் பதிவாகின.

●

கனகத்திற்குப் பிரச்சனைகள் கூடி விட்டன. கதிர்காமரின் மறைவும் அயலில் சனங்களின் அர்த்தம் பொதிந்த ஆயிரம் பேச்சுக்களும் கூட அவளைப் பாதித்த போதும் கிரிஜாவின் பரீட்சை முடிவுகள் தலைகீழாகி விட்டது திகிலாக இருந்தது.

''கிரிஜாவை லண்டனுக்கு அனுப்பப் போறன்''

''கிரிஜாவுக்கு வேலூருக்கு ,ஸ்கொலசிப்' கிடைக்கும் போல கிடக்கு.''

இப்படி ஆயிரம் கதைகள். பூரணம் கெட்டித்தனமாக பாஸ் பண்ணியது 'ஏதோ 'வேர்க்அப்' பண்ணித் தான் என்றும் ஒரு கதையைக்கட்டி விடக்கனகத்துக்கு நேரமெடுக்கவில்லை.

சரசுவுக்கு இருந்த மனநிலை கனகத்திற்கு இருக்கவில்லை. ''பூரணம் போல கிரிஜாவும் கெட்டித்தனமாய்ப் பாஸ் பண்ணியிருந்தா எவ்வளவு சந்தோஷம். பிள்ளைக்கென்ன இப்பவயசே போட்டிது. இன்னொருக்கா எடுக்கிறது தானே ''என்று கிரிஜாவுக்காக இரக்கப்பட சரசுவுக்கு மனநிலை இடம் கொடுத்தது. சரசு கூறியதைக் கூட மனதில் பதிக்காது ''லண்டன்' 'வேலூர்' 'வேர்க்அப்' கதைகளையே அளந்து கொண்டிருந்தாள் கனகம்.

●

தன்னை யாரோ கூப்பிடுவது போல் கேட்கவே கனகம் வெளியே வந்தாள். பூரணம் நிற்பதைக் கண்டதும் வெளிப் பார்வைக்குச் சிரித்துக் கொண்

திருமலை க. வேலுப்பிள்ளை ஜூனியர்

டாள்.

''வாபிள்ளை!'' என்று கனகம் விடுத்த அழைப்புக்கு இருந்து பேசப்பூரணத்திற்கு நேரமில்லை.

''மாமி! இண்டைக்கு யாழ் தேவியிலை போறன். கண்டிக்குப் போகவேணுமெல்லே'' என்றபோது.

''ஓம் பிள்ளை உனக்கென்ன? நீ கெட்டித்தனமாய் மெடிசின் எடுத்திட்டாய்'' என்றாள் கனகம். 'கெட்டித்தனமாய் மெடிசின் எடுத்திட்டாய்' என்று ஒரு குத்தல் கொடுக்கத்தவறவில்லை. கள்ளமில்லாத பூரணத்திற்கு எங்கே இது விளங்கப்போகிறது?

''கொம்மாவையும் கூட்டிக் கொண்டு போயற்றாச் சுகமெல்லே பிள்ளை. அவ இங்கை தனியஎன்ன செய்யிறது'' என்று ஏதோ பரிந்து பேசுவது போல் பேசினாள் கனகம்.

''இல்லை மாமி; இப்பபிள்ளையளோடை தானேபோறன். இதுதானே முதல் பயணம். ஆனபடியாலை இரண்டு வருஷம் முடியப்பாப்பம்'' என்றாள்.

''ஓம் மேனை. இது உனக்குப் புதுப்பழக்கம். இவள் கிரிஜாவுக் கெண்டா கொழும்பு கண்டியெல்லாம் தண்ணி பட்டபாடு'' என்றனள் கிரிஜா வீட்டிலில்லாத விஷயத்தைச் சொல்லவில்லை.

'றிசல்ட்' சரியில்லை எண்டவுடனேயே கிரிஜாவைக் கொழும்புக்கு மாமனுடன் அனுப்பி விட்டாள் பூரணம் கேட்க முன்பே கனகம் சொன்னாள்: ''கிரிஜாவும் மாமன்ரை இளையதின்ரை பேர்த்டேக்கு கொழும்புக்குப் போய்ட்டாள் இஞ்சைபார் பிள்ளை, இந்த முளிவியளத்துக்கு உதவாதது கள்இருக்கேக்கை ஒரு காரியமும்உருப்படாது''-தேவையில்லாத ஒரு 'நெரட்டைக்' கதை சொல்லாமல் விடவில்லை அவள்.

இவற்றைக் கேட்க பூரணத்திற்கு நேரமேது?

''சரிவாறன் மாமி. அம்மாவும் இன்னொரு பிள்ளையும் வாசலுக்கை நிக்கினம். பேந்து ரயிலை விட்டிட்டாக் கரைச்சல். போயிட்டுவாறன்'' என்று சொல்லிக்கொண்டே வாசலுக்குப் போனாள்.

''அம்மா! போயிட்டு வாறன்'' என்றவள் தாயைப் பார்த்தாள்.

சரசுவுக்குக்கண்ணீர் முட்டிக் கொண்டு வந்தது. அந்த நேரம் தண்ணீர்எடுக்கக் குடத்தோடு வந்த பரமேஸ் ''என்ன பிள்ளை! இண்டைக்குப் பயணம்போலை...'' என்றாள். கனகத்துக்கு எரிச்சலாக வந்தது.

',அப்பசரி எல்லாரும் நில்லுங்கோ போயிட்டு வாறன்''

எல்லோரும் பேசாது நின்றனர்.

கிரிஜா போல புதுப்புது பெல்சோ பெனியனோ எதுவும் இன்றிசாதாரண சீத்தை உடுப்புகளுடன் அடங்கிய பெட்டியுடன், சாயம் போயும்போகாததுமான கவுனுடன் பூரணம் கண்டி 'பேரதெனியா பல்கலைக்கழகத்துக்குப் போய்க் கொண்டிருந்தாள்.

எதிர்காலத்திலே டாக்டராக வந்து எத்தனையோ உயிர்களைக் காப்பாற்றப் போகும் டாக்டர் பூரணம் முளிவியளம், சகுனங்கள் எதையுமே பொருட்படுத்தாமல் வெள்ளை உள்ளத்துடன் நாட்டுக்குச் சேவை செய்யப் போய்க் கொண்டிருந்தாள்.

[யாவும் கற்பனை]

## இவ்வாரம் எப்படி?

### மேஷம்

எண்ணிய 'காரியத்தில் தடை ஏற்படும். மேலதிகாரிகளின் கண்டிப்பும் உண்டு. குடும்பப் பிணைப்புகள் இறுகும். காதலர்க்கு கரும்பாக இனிக்கும். சிறிய விபத்துக்களும் இடம் பெறலாம். வஞ்சகர் வலை விரிப்பர். பிள்ளைகளால் உதவியுமாகும். புகழ்ச்சியும் மகிழ்ச்சியைத் தேடித் தரும்.

### ரிஷபம்

தன வரவும் தரும சிந்தையும் மேலோங்கும். நஷடத்திற்கும் இடமுண்டு முதலீடுகளைத் தவிர்த்துக் கொள்ளவும் விஷப் பரீட்சை மூலம் விபரீதங்கள் விளையும். விஷமிகள் விழித்திருப்பார்கள். களஸ்திர விடயங்களும் அவ்வழிச் சிறப்புமுண்டு. புதிய சந்நப்புக்கள் பிரச்னைகளை உண்டாக்கலாம். எவ்விடயத்திலும் உண்மையுடனும் நேர்மையுடனும் நடக்கவும்.

### மிதுனம்

பெரியோர்புகழ்ச்சியும் புதுப் பிரயாணங்களும் பூமி பொருள் லாபங்களும் உருவாகும் தடைகள் பல உருவாகலாம். பெயரைக் கெடுப்பதற்கும் பொருளைப் பறிப்பதற்கும் சிலர் எத்தனிப்பர். அவதானமும் நிதானமும் வேண்டும். நீண்ட நாள் தொடர்பில் மாற்றமேற்படும். அது மனதில் இதமாக இருக்கும், எதிலும் அமைதி வேண்டும்.

### கடகம்

தன வரவு உங்களை மகிழ்விக்கும். தொழில் துறையில் முன்னேற்றமும் உயர்ச்சியான மாற்றங்களும் மேலோங்கி நிற்கும். பெரியோரும் அயலோரும் அன்பு காட்டுவர். சில விடயங்களுக்கு தடை விதிக்க தரகர்கள் எத்தனிப்பர். விழிப்புடன் இருக்கவும்.

### சிம்மம்

துன்பத்தின் சாயல் மனதில் புகை மூட்டத்தையும் பகை மூட்டத்தையும் உண்டு பண்ணும். திடீரென வரும் வருவாயால் கடன் தொல்லைகள் தீரும், அன்புக் கரங்கள் அணைக்கும். நல்ல விடயங்களுக்கு வழி கோலப்படும். பிதா வழிச் சுகம் கிடைக்கும்.

### கன்னி

சிறு விபத்து. சீறி வரும் ஆத்திரம் சிந்தனையைக் குழப்பும். நிதானத்துடன் செயல்

(12ம் பக்கம் பார்க்க)

வெளிநாடு செல்வதற்கு

★ விமான டிக்கட்

★ அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் காசோலை(வங்கியின் கட்டணத்தில்)

★ விமான ஆசனப் பதிவுகள்

மற்றும் உங்கள் சகல பிரயாண தேவைகளுக்கும்

(Passport, Visa எந்த ஒரு'நாட்டுக்கும் எடுத்துக்கொடுக்கப்படமாட்டாது இதுசம்பந்தமான படிவங்களும் (Application Forms) எம்மிடம் இல்லை)

இன்றே நாடுங்கள்

மக்கிறேன் டிரவல்ஸ் லிமிட்.

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(Zambian Airways பிரதான விற்பனைப் பிரதிநிதி)
GENERAL SALES AGENTS

த. பெ. எண்: 92 போன்: 24154

## முன்கதைச் சுருக்கம்

தனது தங்கைகளுக்காக உழைக்கச் சென்ற சண்முகம், குவைத்திலிருந்து ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு ஊருக்கு வருகின்ருன். தம்பி பூபாலன் மட்டுமே விமானநிலையத்திற்கு வந்திருக்கிருன். சண்முகத்தின் மனைவி நிர்மலாவோ, அவனது குழந்தை ரமணனே வரவில்லை; ஏமாற்றமடைகிருன். நிர்மலாவைக் கலியாணம் செய்ததால் கிடைத்த சீதனத்தைக் கொண்டு மூத்த தங்கை உமாவின் கலியாணம் நடந்தது; நிர்மலாவைக் கலியாணம் செய்த மூன்ரும் மாதமே அவளை யாழ்ப்பாணத்தில் விட்டுவிட்டு சண்முகம், பிரிய நேர்ந்தது. வீட்டிற்கு ஆவலோடு வருகிருன்; மாற்றங்கள் தெரிகின்றன. நிர்மலா அவனேடு ஒரே கட்டிலில் உறங்க மறுக்கிருள். ''நீங்கள் உங்கள் தங்கைமார்களுக்காக உழைக்கச் சென்றீர்கள்; உழைத்தீர்கள் ஒன்றில் நீங்கள் எங்களுக்காக வாழ வேண்டும்! அல்லது உங்கள் சகோதரங்களுக்காக வாழ வேண்டும்'' என்கிருள். ''கடமையை முடித்துவிட்டு எப்ப எங்களுக்காக வாழ வருகிறீர்களோ அப்பதான் நான் மனைவியாக வாழ்வேன்'' என்கிருள். கிளி, செல்வம் என இரு தங்கைகள். கிளி தனது மைத்துனன் சீராளனைக் காதலித்தாள்; கல்வீடு கட்டி, பணம் பொருள் சேர்ந்ததும் சீராளனை வெறுத்து ஒதுக்குகிருள். பவளம், சண்முகத்தின் மாமன்மகள். அவள்மூலம், நிர்மலாவுக்கும் பகீரதனுக்கும் காதல்இருந்ததுஎன்றசெய்தியை அவன் அறிகிருன். கிளி, ஒரு ஆசிரியனை மணக்க நேர்கிறது. கிளியின் கலியாணவீட்டில் செல்வத்தைச் சந்தித்த முருகானந்தம் அவளைக் கலியாணஞ் செய்யமுன் வருகிருன். தம்பி பூபாலன் இராணுவத்திடம் பிடிபட்டு, விடுதலையாகிருன். அதன்பின்......

# கடுகு வேலி

செங்கை ஆழியான்

## தொடர் நவீனம்

## 12

கட்டிலில் இருந்தபடி, யன்னலூடாக வெளியே நோக்கும்போது, வெகு இனிமையாகக்காலை மலர்வது தெரிந்தது. இருள் மேகங்களிடையே சூரியக்கதிர்கள் நம்பிக்கையுடன் ஊடுருவிச்சென்றன. அவனுல் இன்றைய காலைப்பொழுதை அனுபவிக்க முடிகின்றது. மனதில் துயரச் சுமைகள் அழுத்தி, நினைவின் தடத்தைத்திசை திருப்பியிருந்த வேளைகளில், சூழலே துயரப்புகாராக இருந்தது.

இன்று மனம், இதயம் யாவும் இலேசானது மாதிரி உணர்வு. அவன் தங்கைகளின் கலியாணங்கள் ஒரு விதமாக ஒப்பேறிவிட்டன. கிளியின் திருமணத்தை அடுத்து இவ்வளவு விரைவில் செல்வத்தின் திருமணம் நிச்சயமாகுமென அவன் நம்பியவன் அல்லன்.

வரும் புதன்கிழமை செல்வத்திற்கும் முருகானந்தத்திற்கும் சன்னதியில் கலியாணம் நடக்கவிருக்கிறது.

'திருமணம் என்பது சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது' என்றஅனுபவ வார்த்தைகளில் அவனுக்கு முன்பு நம்பிக்கைஇருந்ததில்லை. உமாவின் திருமணத்திற்காக, அவன் நிர்மலாவைச் சீதனத்தோடு மனைவியாக்க நேர்ந்தது; கிளியின் கலியாணத்திற்காக அவன் நிர்மலாவைப்பிரிந்து ஐந்தாண்டுகள் வெளிநாட்டில் உழைக்கநேர்ந்தது.

செல்வத்தின் கலியாணமோ-?

எவ்வளவு சுலபமாக முற்ருகிவிட்டது? இந்தச்சமூகத்தில் முருகானந்தம் போன்ற இளைஞனும், அவனது தாயார் போன்ற தெய்வங்களும் இருக்கமுடியுமா? இருக்கத்தான் செய்கிருர்கள்.

நிர்மலா கோப்பியுடன் வந்தாள் கூடவே ரமணனும் தாயின்பின் வந்தான்.

அவன் ரமணனைத்தூக்கி மடியில் வைத்துக்கொண்டான்.

''அப்பா..'' என்ருன் குழந்தை.

''என்ன கண்ணு?...''

''எனக்கு சயிக்கில்வேணும் ...சயிக்கிலிலை புர்ரென்று ஓடவேணும்.''

''கட்டாயம் வேண்டித்தாறன் அப்பாவைப் பின்ஞல ஏத்திப்போவியோ?...''

''ஓ... அம்மாவையும் ஏத்திப்போவேன்...''

மகனை இறுக அணைத்து, அவன் கன்னங்களில் மாறி மாறி முத்தமிட்டான்.

''ஐய... தாடிகுத்துது, அப்பா...''

நிர்மலா சிரித்தாள். அவன் அறையில் இவ்வளவுநேரம் நிர்மலா தங்குபவளல்லள்; கோப்பியைத் தந்துவிட்டுச் சென்றுவிடுவாள். இன்று தரித்து நிற்பதுடன், கணவனும் மகனும் பேசிமகிழ்வதைப் பார்த்துச்சிரித்தாள்.

நிர்மலா அழகிதான். அவள் சிரிப்பு அவனுக்குப் போதை தந்தது. செல்வத்திற்குக் கலியாணம் நிச்சயமானதிலிருந்து, அவள் முகத்தில் என்றுமேயில்லாத தெளிவும் எழிலும் ஏற்பட்டிருப்பதை அவன் கண்டான். புகைபடிந்த கண்ணுடியில், புகைநீங்கியது போன்ற துலக்கம் அவள் முகத்தில் தெரிந்தது.

''கோப்பியைக் குடியுங்க. ஆறிப்போகப் போகுது..''

''ஆறிப்போச்சுது...'' என்ருன் அவன்

நிர்மலா பதறிப்போய் 'கப்'பைத் தொட்டுப்பார்த்தாள்; நல்லசூடு இருந்தது.

''இல்லையே.. சூடாகத்தான் இருக்குது...''

அவன் எதுவும் பேசாது, கோப்பியை அருந்திஞன். அவன் வார்த்தைகளின் அர்த்தம் அவளுக்குப் புரிந்தது.

அவள் அப்படி நடந்திருக்கக் கூடாது தான். முகம் ஓடி வாடியது. தன்னைச்சாமாளித்துக்கொண்டாள்.

''கோபமா?...''

''இல்லை...வேதனை...''

''சோதனை...'' என்று நிர்மலா சிரித்தாள்: ''இன்றைக்கு நாங்க வெளியில போவமா? ஒருக்காரவுனுக்குப் போவமா?...''

அவள் விழிகளில் ஆவல் கொப்புளித்தது.அவளை அவன் ஏறிட்டுப் பார்த்தான் அவளின் கண்களினூடாகஅவள் இதயத்தை பார்க்க முடிந்தது போல இருந்தது. எவ்வளவு ஆசைகளை மனதில் தேக்கி வைத்திருக்கிருள், என்ருலும் பிடிவாதக்காரி.

''சரி ..''

''நான்...அப்பா?...''

''நீயும் தான், கண்ணு?...''

அவர்கள் வெளியில் புறப்பட்ட போது, மாமி திருப்தியாகச் சிரித்தாள்: ஒழுங்கையில் நடந்த போது எல்லோரும் தங்களை அதிசயமாகப் பார்ப்பது போல அவனுக்குப் பட்டது. நிர்மலா அவனுடன் வெகு நெருக்கமாக நடந்தாள். அவன் ரமணனைத் தூக்கிக் கொண்டு கூட நடந்தான்.

அவன் அவளுக்காக இம்முறை குவைத்திலிருந்து வாங்கி வந்திருந்த சேலையை அவள் கட்டியிருந்தாள். இள மஞ்சள் சேலை அகண்ட சிவப்பு போடருடன்; அவள் உடலைத் தழுவியிருந்தது. நிர்மலாவின் நிறத்திற்கும் கட்டுடலுக்கும் அச்சேலை மிகப் பொருத்தமாக இருந்தது.

பஸ்ஸில் அவர்கள் பயணம் செய்தார்கள். அவள் அவனுடன் மிக நெருக்கமாக அமர்ந்திருந்தாள்' புதிதாகக் கலியாணம் செய்து கொண்டவர்கள் போல, அவள் நெருங்கியிருந்தாள். அவன் மடியில் ரமணன் மட்டும் இல்லாதிருந்தால். புதுத் தம்பதிதான்.

அவனுக்குப் புரியாமலில்லை'

நிர்மலாவின் நெருக்கத்தின் காரணம் அவனுக்குப் புரிந்தது. அவனைத் தவிக்க வைத்த உறவு.

பஸ்ஸிலிருந்து இறங்கினுர்கள்.

ஐந்தாண்டுகளில் யாழ்ப்பாணம் அவ்வளவு தூரம் மாறிவிடவில்லை: அதே ஒடுக்கமான வீதிகள் குண்டும் குழியுமான அதே வீதிகள். அவசரத்துக்கு இயற்கைக் கடன்களைக் கழிக்க வசதி செய்து தராத மாநகர ஆட்சி. மிக மிக ஒடுக்கமான 'பாத்றூம்'கள்போன்ற மாநகர சபைக் கடைகள். தனியார் கட்டிடங்கள் சில, நகர நிர்மாணக் கட்டுப்பாடுகளை எவ்வகையிலோ மீறி எழுந்திருந்தன. ஆனுல் யாழ்ப்பாண நகரின் கடைகளில் குவிந்திருந்த வெளிநாட்டுப் பொருட்களைப் பார்த்து அவன் வியந்து போஞன்.

—என்ன தான் இல்லை?

ஒரு பொருட்காட்சிச் சாலைக்குள் நுழைந்தது போன்ற பிரமை அவனுக்கு ஏற்பட்டது.

'சிங்கப்பூருக்கு வந்து விட்டனே?'

வெளிநாட்டிலிருந்து கட்டிக் காவிஇனிஇங்குஎதுவும்கொண்டுவரத் தேவையில்லை. பணத்தை மட்டும் கொண்டு வந்தால் போதும்.ரீ வி. டெக், ருன்சிஸ்டர், பிரிட்ஜ், மிக்சி என்று அவர்கள் வெளிநாட்டிலிருந்து கொண்டு வருகிருர்கள். அவனும் தான். குவைத்திலும் பார்க்க இங்கு விலை மலிவாக இருக்கிறது.

யாழ்ப்பாண நகரின் ஒவ்வொரு கடையிலுள்ள பொருட்களின் மதிப்பு பத்து லட்சம் ரூபாவிற்குக் குறையாது.

நிர்மலா தனக்கும், கணவனுக்கும் குழந்தைக்குமெனப் பல பொருட்களை வாங்கிக் கொண்டாள். அவன் அவள் எண்ணப்படி விட்டு விட்டான். அவள் ஒரு குழந்தையாகி ஆவலோடு ஆசையோடு பலவற்றை வாங்கிஞள். ரமணண் விரும்பிக் கேட்டவற்றையும் அவன் வாங்கிக் கொடுத்தான்.

அவர்கள் மத்தியானம் யாழ்ப்பாண நகரின் ஹோட்டல் ஒன்றில் சாப்பிட்டார்கள். சாப்பிட்டுவிட்டு ஐஸ்கிறீம் அருந்திஞர்கள்.

''எனக்கு இன்னொரு ஐஸ்கிறீம் வேணும்...''என்று அவனைக் கேட்டாள்.நிர்மலா. அவன் மனைவியை வியப்புடன் பார்த்தான்.

''ஐய...'' என்ருன்,ரமணன் ''அம்மா குழந்தை''

''என்ன, நிர்மலா?..''

''மெய்யாத்தான் வேணும்.. இன்றைக்குத்தான் நான் மகிழ்ச்சியாய் இருக்கிறன், கொண்டாட வேணும்...''

''ஐஸ் கிறீம் குடித்தா?...'' என்று அவன் கேட்டான். அவள் வெட்க்த்துடன் சிரித்தாள். இன்னொரு ஐஸ் கிறீம் அருந்திவிட்டுத்தான் அவள் எழுந்தாள் .

எவ்வளவு குழந்தைத்தனமாக நிர்மலா நடந்து கொள்கிருள்.? இவளுடைய இதயத்திலா அப்படி ஒரு பெரும் பூதம் குடியிருந்தது.?

பெண்களேஇப்படித்தானே?

அவர்கள் வீட்டிற்கு திரும்பி வரும்போது மாலை கவிழ்ந்துகொண்டிருந்தது, அன்று முழுவதும் அலைந்த களைப்பில் ரமணன் உறங்கிப் போனுன்,

அவன் முகம் கழுவித் துடைத்தபடிதன் அறைக்குள் வந்தான். அவன் கட்டிலைத் தட்டி விரித்தபடி நிர்மலா நின்றிருந்தாள் . பழைய விரிப்பை மாற்றிப் புதியவிரிப்பொன்றை விரித்திருந்தாள். தலையணைகளின் உறைகள்மாற்றப்பட்டிருந்தன

அவனைக் கண்டதும் அவள் வெட்கத்துடன் சிரித்தாள். அந்தச் சிரிப்பினுள் புதைந்து கிடந்த ஆயிரம் அர்த்தங்கள்.

வானத்திலிருந்து ஆயிரம் கோடி நறு மலர்கள் சொரிந்தாற் போல அவனுக்கு இருந்தது மறுகணம் அவன் இதயத்தின் ஒரு இருண்ட மூலையிலிருந்து ஒரு ஏமாற்ற வடு வீரிட்டது.

''பிளீஸ்...நிர்மலா...''

எவ்வளவு தாட்சண்யமின்றி அவனை அன்று அவள் உதாசினம் செய்தாள்?

அவன் கட்டிலில் அமர அருகில் அவள் அமர்ந்தாள்.

'' இன்னமும் கோபம் தீரவில்லையா?...'' என்றபடி நிர்மலா அவன் கரத்தைப் பற்றிஞள்.

''இன்னமும் என் கடமை தீரவில்லை ..'' என்றபடி தன் கரத்தை அவன் இழுத்துக் கொண்டான். ஆண்மையின் விழிப்பிலும் தன் மானத்தின் ஆட்சி கூடுதலாக இருந்தது.

''என்னை மன்னியுங்கள்..'' என்ருள் அவள். அவன் அவளைத் திரும்பிப்பார்த்தான். அவள் கண்கள் திடீரெனக் கலங்கிப்பனித்தன. அவனை நிமிர்ந்து பார்க்கத் திராணியின்றித் தலையைக்குனிந்தபடி, கைகளில்முகத்தைப் புதைத்தபடி அழத்தொடங்கிஞள்

அவன் உள்ளம் அவளை அணைத்து கண்ணீரைத் துடைத்து ஆறுதல் கூறத் துடித்தது. ஏதோ தடுத்தது.

''அழாதே நிர்மலா. என் கடமை புதன் கிழமை தீரும். உனக்காகத்தான் சொல்கிறேன்... செல்வத்தின் கழுத்தில் தாலி ஏறும் வரை...''

அவள் துயருடன் குறுக்கிட்டாள்.

அதுதான் நிச்சயமாகி விட்டதே...? ஏன் இப்படி வருத்துறியள்?...''

''நானு?'' என்று கேட்க வாயெடுத்தவன் பின்னர்அடக்கிக் கொண்டான்.

''அது நீயாகவே ஏற்படுத்திக்கொண்ட வேலி. அதை நீ தாண்டிஞலும் என் மனம் அதுக்கு இடம் கொடாது! ஐந்தாண்டுகள் உனக்காகக் காத்திருந்த நான் இன்னமும் மூன்று நாட்கள் பொறுத்திருக்க மாட்டேஞ? நீ சொன்ன என் கடமைகள் முடிய வேண்டும். அதன் பிறகுதான் உன் அருகில் நான் உறங்குவேன்...''

சுவரில் மோதிய பந்து. எதிர் காற்றில் உமிழ்ந்த எச்சில்... அவள் விம்மியபடி எழுந்திருந்தாள். அப்படியே தன் அறைக்குள் ஓடிச் சென்று கட்டிலில் விழுந்து அழத் தொடங்கிஞள்.

(அடுத்த இதழில் முற்றும்)

## திருடர்கள் இல்லாத தீவு

இந்தியாவின் மேற்குக் கடற்கரையையொட்டி, இந்தியாவின் ஆட்சியின் கீழுள்ள லட்சத் தீவுகளில் சுமார் 42,09) மக்கள் வரை வாழ்கின்ருர்கள் திருடர்களே அங்கு கிடையாது! பெண்கள் கற்பழிக்கப்பட்டதாகவும் செய்தி கிடையாது. இதஞல் இங்குள்ள பெண்கள் இரவில் கூட நகைகள் அணிந்து அச்சமின்றி நடமாடுவார்கள். இவர்களிடம் மது அருந்தும் பழக்கமும் கிடையாது.

- வை. வாசுதேவன்




[11]

அன்பாலே இணைந்திட்ட இருவர் தாமும்
அவசரமாய் மூதாட்டி இடத்தே சென்றார்
பொன்போன்ற புதல்வியையும் பொன்போன் றாளைப்
போற்றுகின்ற குமாரினையும் கண்ட பெண்ணாள்
''என்னேஇச் சோடியது பொருத்தம்'' என்றே
இதயத்துள் எண்ணியே இவர்கள் என்றும்
''இந்நாள்போல் அன்பினராய் இனிதின் வாழ்க!''
எனறேதான் அன்பாக வாழ்த்த லானாள்.

பாவொன்றைக் கற்றோர்கள் ஆயும் வேளை
பண்பறியா ஒருமூடன் புகுதல் போலும்
பூவொன்றும் சோலையிலே அருமை சற்றும்
புரியாத மந்தியொன்று புகுதல் போலும்
மூவருமே மகிழ்வுற்றே இருந்த வேளை
முழுவெறியிற் குடிகாரன் அங்கே சென்றான்
''ஆஉன்னைப் பலகாலும் தேடி நின்றேன்
அகப்பட்டாய்'' எனச் சொன்னான் குமாரைப் பார்த்தே!

கயல்விழியாள் திடுக்குற்றாள் முதியள் தானும்
கலங்கினளே செய்வதினை அறியாள் ஆகி
அயல்நின்ற குமார்என்பான் அஞ்சு வானா
அவன்இளைஞன் துணிவுடனே சிரித்த வாறே
''நயவுரையே அறியாத கிழோய் நீயார்
நாவடக்கம் இன்னதென அறியாய் போலும்
தயவுடனே சொல்கின்றேன் அப்பாற் செல்வாய்!
தாமதித்தால் நான்பொறுமை இழப்பேன்'' என்றான்

''இவ்வீட்டின் அனைத்துக்கும் பொறுப்பு நானே
என்தமக்கை அவள்எனநீ அறியாய் போலும்
வெவ்வுரையும் நயவுரையும் நானே தேர்வேன்
விளக்கங்கள் நீஎனக்குத் தருதல் வேண்டாம்
செவ்வியதா நின்செய்கை என்று தானும்
சிந்தித்து நீபார்த்துக் கொண்ட துண்டா?
இவ்வேளை நீஅப்பால் செல்தல் ஒன்றே
ஏற்றதுவும் பொருத்தமும் ஆம்'' என்றும் சொன்னான்

''அன்னத்தைத் தூதுவிட்ட அரசன்கூட
அதிர்ச்சிஉறும் வகையினிலே நீதான் இந்நாள்
என்னத்தைத் தூதுவிட என்றே ஆய்ந்தே
ஈற்றினிலே ஸ்கூட்டரினைத் தூது விட்டாய்!
உன்னொத்தார் குணமெல்லாம் அறிவேன் நானே
ஓர்நாளிற் காதலென்பார் மறுநாள் வந்தே
பொன்னொத்த மாதர்தம் கற்பை வாங்கிப்
போய்விடுவார் பின்பாதை மாற்றிக் கொள்வார்!''

''என்னுடைய மருமகளின் வாழ்வை நீதான்
ஏப்பமிடப் பார்க்கின்றாய் விடுவே னாநான்
உன்னுடைய ஸ்கூட்டர் இனக் கலகத் தாலே
ஒள்ளெரிவாய்ப் படாதன்று பிழைத்த தெல்லாம்
என்னுடைய கையாலே சோதி தன்னில்
இரண்டறவே கலந்துவிடத் தானே போலும்
இன்னுமிங்கு தாமதித்தால் உன்றன் ஸ்கூட்டர்
இமைப்பொழுதில் முத்தியுறும்'' என்றும் சொன்னான்

துணைவனது படத்தினையே பார்த்த வாறு
துயர்ப்பட்ட கயல்விழியின் தாய்அவ் வேளை
துணிவுதனை வரவழைத்தே வாய்தி றந்தே
சொல்லலுற்றாள் சிலவார்த்தை பொறுமை யோடும்
''எனதுமகள் நான்இருவர் இதுநாள் மட்டும்
இருந்திட்டோம் அடிமைகள்போல் இந்த வேளை
எனதன்பன் முன்புரிந்த புண்ணி யத்தால்
இவ்விளைஞர் வந்திட்டார் எம்மைக் காக்க''

''உடன்பிறந்தே கொல்லுகின்ற கொடிய நோயே
உபத்திரத்தை இனியேனும் நிறுத்திக் கொள்வாய்!
படம்வரையும் இவ்விளைஞன் என்றன் சேய்க்குப்
பல்பிறப்பும் துணைஆவான் இவர்கள் வாழ்க!
இடமறிந்தும் நிலையறிந்தும் நின்ம திப்பை
இனியேனும் காத்திடலாம்'' என்றும் சொன்னாள்
குடியுடையான் இதுகேட்டு வெகுண்டோ னாகிக்
குழறுகின்ற வார்த்தைபல கழற லானான்

''நேற்றுவந்த இவ்வாளைப் பெரிதாய் எண்ணி
நின்னரிய உடன்பிறப்பை வெறுத்தி டாதே
வேற்றுமைகள் இருந்தாலும் நீநான் ஒன்று
வீணனிவன் யார்நம்மைப் பிரிப்ப தற்கே
ஆற்றலுடன் இனிமுயன்றே நின்றன் சேய்க்கே
அழகான மணமகனைக் கொணர்வேன் நானே
நேற்றுவந்த இவ்வாளால் நாளை நீங்கள்
நெடுந்தெருவில் அலையுநிலை எய்தல் வேண்டாம்!''

''ஆயிரம்தான் சொன்னாலும் உம்மேல் அன்பே
அவனிமிசை நெஞ்சின்கண் எனக்கே உண்டாம்
நாயெனநான் பாய்கின்ற ஒன்றைக் கொண்டே
நானுங்கள் விரோதியென முடிவு செய்தே
தீயனிடம் சிக்காதீர்! என்சொற் கேளும்!
சிந்தித்தே முடிவினைநீர் செய்தல் நன்றாம்
வாய்மொழியை நீர்விடுத்தே அவன் சொல்கின்ற
மொழியினிலே வாய்மை உண்டா என்றே நோக்கீர்.

(வளரும்)

# சிகரட் புகைக்கிறீர்களா?

# அப்படியானால்

# நீங்கள்

# சாவை அணைக்கிறீர்கள்!

புகை பிடிப்பதா? அல்லது ஆரோக்கியமா?

இரண்டிலொன்றை நீங்கள் தெரிவு செய்ய வேண்டும்.

புகையிலையைப் புகைப்பது இலங்கையில் இப்பொழுது ஆரோக்கியத்துக்கு ஒரு கடும் அபாய ஏதுவாகி உள்ளது. புகையிலைப்புகை வாயுக்களையும் நிக்கொட்டீன், கீல்கள் (தார்கள்), உறுத்திகள், காபன் ஒரொட்சைட் (காபன் மொனோக்ஸைட்) ஆகியவற்றின் சிறு துளிகளையும் கொண்ட ஒரு கலவையாகும். புகை உட்சுவாசிக்கப்படும் போது அதில் ஏறக்குறைய 50 சதவீதம் சுவாசப்பையில் நிறுத்தி வைக்கப்படுகிறது. சிறு துளிகளில் சில சுவாசப் பையின் காற்றுக் குழாய்களிலும் காற்றுப் பைகளிலும் படிந்துவிடுகின்றன.

## புற்றுநோய்

## மாரடைப்பு

புகைப்பதன் காரணமாக சுவாசப் புற்றுநோய் உண்டாகிறது.

இருதய வியாதிக்கும் சிகரெட் பிடிப்பது காரணமாயிருக்கிறது. புகை உட்சுவாசிக்கப்படும்போது நிக்கொட்டீன் ஏறக்குறைய 90 சதவிகிதம் உறிஞ்சப்படுகிறது. இது இருதய தசைக்குக் குருதியை வழங்கும் நாடிகளை அடைத்துவிடுகின்றது. ஓயாது புகை பிடிப்போருக்கு இது பல சந்தர்ப்பங்களில் மாரடைப்பை உண்டாக்கிவிடுகிறது. புகையில் உள்ள கீல்கள் புற்றுநோயை உண்டாக்குகின்றன. உறுத்திகள் மூச்சுக்குழல்களைப் பாதிக்கின்றன. காபன்ரொட்சைட் இருதய வியாதியை மோசமாக்குகின்ற ு

வி. என். எஸ். உதயசந்திரன்

காரணிகள் எப்படி இருப்பினும் - புகைக்காத அவர்களுடைய சமகாலத்தவரைவிட மாரடைப்பினால் மரணிக்கும் சாத்தியம் இருமடங்காகும். உள்நாட்டிலும் சிகரெட் புகைப்பவர்கள் புகைக்காதவர்களைவிட மாரடைப்புகளால் சாகக்கூடிய ஆபத்து அதிகமுண்டென இலங்கை இருதயநோயியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இந்நிலைமையில் சிகரெட் புகைத்தல் ஒன்றில் தனியாகவோ அல்லது உயர் குருதியமுக்கம், உடல் வருத்தம், அமித கொழுப்புநிலை போன்ற மற்றும் பிரதான அபாயக்காரணிகளுடன் சேர்ந்தே செயல்படுகின்றதென்று கூறப்படுகின்றது.

## குடலையும்

## சுரப்பிகளையும்

## பாதிக்கும்

நாட்பட்ட மூச்சுக்குழல் அழற்சிக்கும் இழைய அகவீக்கம் (எம்பி சீமா) என்னும் நோய்க்கும்கூட புகைப்பதே பிரதான காரணமாயிருக்கிறது. இவை இரண்டும் உடல் நலத்தைக் கெடுத்து இறுதியில் உயிராபத்தை உண்டாக்கும் மார்பு நோய்களாகும். எம்பிசீமாவின் தாக்குதல் சுவாசப்பையின் மீள்தன்மையை இழக்கச் செய்வதன் காரணமாகச் சுவாசப்பை இயங்குவது கடுமையாகப் பாதிக்கப்படுகிறது. புகையிலைப் புகையின் உறுத்தும் செயல் இருமல் நிலைமைகளை அதிகப்படுத்துகிறதென்பது பொதுவான அனுபவமாகும். புகைத்தல் குடல் இயக்கங்களையும் சுரப்பிகளையும் பாதித்துக் குமட்டலையும் ஆறுதலின்

## பெண்களை இலகுவில் பாதித்துவிடுகிறது

இங்கிலாந்து மருத்துவர்களின் றோயல் கல்லூரியும் மற்றுமநேக வைத்திய ஸ்தாபனங்களும் நடத்திய கூட்டுப் பரிசீலனை ஒன்றிலிருந்து வழக்கமாகப் புகைக்கும் ஒருவரின் ஆயுள் அவர் புகைக்கும் ஒவ்வொரு சிகரெட்டுக்கும் ஐந்தரை நிமிடங்கள்வீதம் சராசரியாகக் குறுக்கப்படுகிறதென்று தெரியவந்தது. நாளொன்றுக்கு 20 சிகரெட்டுக்கு மேல் புகைக்கும் 40 வயதுக்கும் 49 வயதுக்கும் இடைப்பட்டோர் சுவாசப்பை புற்றுநோயால் சாகக்கூடிய சாத்தியம் பத்திலிருந்து பதினைந்து மடங்குவரை அதிகம் என்றும் இருதயவியாதிகளால் இறக்கக்கூடிய சாத்தியம் மூன்றுமடங்கு அதிகம் என்றும் அறிவிக்கப்படுகிறது. நாளொன்றுக்கு 20 சிகரெட்டுக்குமேல் புகைக்கும் பெண்கள் - மற்றெந்த அபாயக்

மையையும் உடல்நிறை இழப்பையும் உண்டாக்குகிறது. சிகரட் புகைப்பவர்களுக்கு வாயிலும் தொண்டையிலும் உணவுக் குழாயிலும் புற்றுநோய் ஏற்படுவது மிகச் சாதாரணமாகக் காணப்படுகின்றது. சுங்கான் புகைப்பவர்களுக்கும் சுருட்டுப் புகைப்பவர்களுக்கும்கூட இந்த அபாயம் அதே அளவில் இருந்துவருகிறது. புகைக்காதவர்களைவிடப் புகைப்பவர்களுக்கு உதரப் புண்கள் உண்டாதல் ஏறக்குறைய இருமடங்கு அதிகமாயிருக்கிறது. புகைப்பவர்களுக்குச் சிறுநீர்ப்பையிலும் முன்னிலைச் சுரப்பியிலும் கல்லீரலிலும் புற்றுநோய் ஏற்படுவதும் அதிகளவில் இருக்கிறது. ஓயாது புகைப்பவர்கள் புகையிலைக் கண்மங்கல் என்னும் ஓர் அபூர்வ வகைக் குருட்டுக்கு உள்ளாகும் அபாயமுண்டு.

புகைத்தல், பலவழிகளில் புகைக்காதவர்களையும் கூடப் பாதிக்கின்றது. சிகரட் புகை கண்உறுத்தலையும், நாசி - தொண்டைக் கோளாறையும் தலைவலிகளையும் உண்டாக்கலாம். புகை நிறைந்த சூழல் நாட்பட்ட இதயக்கலன் வியாதிகளாலும் நுரையீரல் (சுவாசப்பை) நோய்களாலும் அவதிப்படுவோரைப் பாதிக்கின்றன.

## கைத்தொழில்மய

## நாடுகளில்

## புகைத்தல்

பல கைத்தொழில்மய நாடுகளில் பெண்கள் புகைத்தலுக்குப் புதிதாகப் பலியானோராக மாறியுள்ளனர். இந்த நாடுகளில் புகைக்கும் ஆண்களின் விகிதாசாரம் குறைந்து வருவதாகத் தோன்றுகிறது. ஆனால் புகைக்கும் பெண்களின் விகிதாசாரம் அநேகமாக மாறாமலிருந்து வருகி

## புகைத்தலினால்

## மாரடைப்பு

## புற்றுநோய்

## குடல்

## சுரப்பிகள்

## பாதிப்பு

## ஏற்படுகின்றன

றது. உதாரணமாக இங்கிலாந்தில் 1961ம் ஆண்டிலே சுமார் 60 சதவீதமாயிருந்த ஆண் புகைஞர்களின் விகிதாசாரம் 1975ம் ஆண்டிலே 47 சதவிகிதத்துக்குக் குறைந்து விட்டது. அதே காலத்தில் பெண் புகைஞர்களின் விகிதாசாரம் ஏறக்குறைய 40 சதவிகிதத்தில் நிலையாக இருந்துள்ளது. அங்குள்ள ஆண்கள் 15 வருட காலத்தில் நடைபெற்ற புகைத்தல் ஒழிப்பு இயக்கங்களுக்குச் செவிசாய்த்துள்ளதாகத் தோன்றுகின்றது.

பெண் புகைஞர் 'தனது மகப்பேற்றுப் பங்களிப்புக்கு ஒரு பயமுறுத்தலை விதித்து வருவதாக' பிரிட்டிஷ் வைத்திய சஞ்சிகை அண்மையில் வர்ணித்தது. புகைக்கும் இளந்தாய் குழந்தையின் மரணத்துக்கும் போஷாக்கின்மைக்குமான சந்தர்ப்பங்களை அதிகரிப்பதன்மூலம் அதன் பிறப்புரிமையைத் தூரத் தூக்கியெறிகிறாள் என்று பொது மருத்துவத் தொழிலரின்

(10ம் பக்கம் பார்க்க)

# சேர் ஒலிவர்: பழகும் கலை படித்த ஓர் தலைவர்!

நா. மாணிக்க இடைக்காடர்

**1951-ம்** ஆண்டு அத்தனகல தேர்தல் தொகுதியில் ஒரு பெரிய கூட்டம் நடந்தது. மறைந்த பிரதமர் பண்டாரநாயகா தலைமை வகித்தார். நான் அப்பொழுது மேல் மாகாணத்து மேலதிக அரசாங்க அதிபர். உணவு உற்பத்தியைப் பற்றி என்னைப் பேசக் கேட்டார்கள். நான் சிங்கள மொழியில் பேசிக்கொண்டிருக்கும் பொழுது புதிய உள்நாட்டு அமைச்சர் சேர் ஒலிவர் குணதிலகா மேடையில் வந்து உட்கார்ந்தார். நான் பேச்சு முடிந்து மேடையில் ஒரு நாற்காலியில் உட்கார்ந்தேன். சேர் ஒலிவர் லண்டனில் இலங்கைத் தூதுவராய்க் கடமையாற்றி சமீபத்தில் நாடு திரும்பியிருந்தார். அவரை நான் முந்திச் சந்தித்ததில்லை. ஆகையால் அவரைக் கூட்டம் முடியச் சந்திக்கலாமென யோசித்துக் கொண்டிருக்க, சேர் ஒலிவரே என் பக்கம்வந்து கொண்டிருந்தார். இவர் என்ன செய்யப்போகிறார் என்று யோசிக்க முன் என் தோளைத் தட்டி, 'தூய சிங்களத்தில் சிறப்பாகப் பேசினீர்கள். உங்கள் சிறந்த நாட்டுச் சேவையைப்பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறேன். கூட்டம் முடிய என்னுடன் பேச வாருங்கள்' என்றார். இது தான் எனது முதல் சந்திப்பு. இதன் பின் ஏதாவது கொழும்புக் கச்சேரியில் வேலையிருந்தால் தொலைபேசிமூலம் என்னுடன் தொடர்பு கொள்வார்.

1952ம் ஆண்டு தேர்தல் நடந்தது. புது அரசாங்கத்தில் சேர் ஒலிவர் உணவு விவசாய அமைச்சராக நியமிக்கப்பட்டார். உணவு உற்பத்திக்கு ஒரு தனி இலாகா வேண்டுமென்று அரசாங்கம் தீர்மானித்தது. சேர் ஒலிவர் என்னை இந்தப் புது இலாகாவின் அதிபராகப் பாரம் எடுக்கச் சொன்னார். பதினெட்டு மாதம் சேர் ஒலிவருடன் சேர்ந்து பல செயல்களைச் செய்யக்கூடியதாயிருந்தது அதோடு அரசியல் நிர்வாகத்தில் ஒரு வசிட்டர் போன்ற அமைச்சருடன் கடமையாற்ற வாய்ப்புக் கிடைத்தது. இதை நான் நன்கு பயன்படுத்தினேன்.

நான் பல அமைச்சர்களுடன் கடமையாற்றினேன் - இலங்கையில் மாத்திரமல்ல; வெளிநாடுகளிலும். ஆனால் சேர் ஒலிவருக்கு நிகரானவர்கள் மிகக் குறைவு. அவருக்கு நிகர் அவரே.

இந்தப் பெரியாருக்கு இன வித்தியாசம் கிடையாது. இவரின் கீழிருந்த இலாகாவில் பல இன அதிகாரிகள் கடமைபுரிந்தனர். தமிழ் அதிகாரிகளின் சிறந்த அம்சங்களைப் பற்றிப் பலமுறை என்னுடன் அவர் உரையாடினார். ''ஒரு அலுவலைத் தமிழ் அதிகாரியிடம் பாரம்கொடுத்தால் அநேகமாகத் தாம் அவரை இடைஇடையே எப்படி அந்த விஷயம் முன்னேறுகிறது என்று கேட்கத் தேவையில்லை. ஏனென்றால் பொறுப்புணர்ச்சியோடும் பூர்த்தியாகும்வரை தொடர்ந்து அத்த அலுவலில் கண்ணேக்கத்துடனும் கடமையாற்றுவார்'' என்று பெருமைப்படுவார். எந்த விடயத்திலும் தன்னுடைய நோக்கத்தைத் தெளிவாய் அதிகாரிகளுக்குக் கூறிவைப்பதால் அடிக்கடி அவரைச் சந்தித்து ஆலோசனை கேட்கத் தேவையில்லை. ஒருமுறை ஒரு விடயத்தைப்பற்றி என்னுடன் பேசியபின் அதையிட்டு ஒரு கடிதம் தயார்செய்துகொண்டு வரும்படி கூறினார். அதன் பிரகாரம் கடிதத்தை அவருடைய கையெழுத்துக்குக் கொண்டு போனேன். கடிதத்தை வாசியாமல் கையெழுத்திடப் பார்த்தார். அப்பொழுது நான் அவரிடம், ''தயவு செய்து வாசித்துப் பார்த்துக் கையெழுத்திடுங்கள்'' என்றேன். அவர் சிரித்துவிட்டு வாசிக்காமலே கையெழுத்திட்டுவிட்டுக் கூறினார்: ''உங்களில் எனக்கு முழு நம்பிக்கை. அதோடு நான் வாசிக்காமல் கையெழுத்திடுவதானால் நீங்கள் அதிக கவனம் செலுத்திக் கடிதங்களைத் தயார் செய்வீர்கள்'' என்று.

## 'தமிழர் முன்னேறக் காரணமென்ன?'

ஓர் அமைச்சருடன் நெருங்கிப் பழகவேண்டுமாயின் சுற்றுப் பிரயாணத்தில் (Circuit) நல்ல சந்தர்ப்பங்கள் வரும். எல்லாக் கடமைகளையும் முடித்துவிட்டு இரவு தங்குமிடத்தில் சிலமணி நேரம்பேசிவிட்டுத்தான் நித்திரைக்குச் செல்லுவோம். அப்பொழுது அமைச்சருடன் நெருங்கிப் பழகலாம். சேர் ஒலிவருடன் பழகுவதற்குப் பல சந்தர்ப்பங்கள் கிடைத்தன. மிகவும் சிறந்த அறிவாளியாயிருந்தபடியால் சம்பாஷணைகள் எதிர்காலத்திற்குப் பயன்தரக்கூடியதாயிருந்தன. ஒருமுறை என்னை அவர், ''ஏன் தமிழ் மக்கள் சாதாரணமாக மற்ற இனங்களிலும் பார்க்க முன்னேறுகிறார்கள்?'' எனக் கேட்டார். அவர்கள் பிரயாசை எடுப்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்; இதைவிட வேறேதும் இருக்கிறதா என்று கேட்டார். அதற்கு நான் ஆங்கிலத்தில், Ambition (குறிக்கோள்) என்று கூறி ஒரு உதாரணத்தையும் சுட்டிக் காட்டினேன். எனது இனத்தவர் ஒருவர் இடைக்காட்டில் விவசாயம் செய்கிறவர். நான் படித்த கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகத்தைப்பற்றி நுணுக்கமாக விசாரித்தார். ஏன் என்று கேட்டபொழுது, தனது மகன் ஒருவன் படிப்பில் கெட்டிக்காரன் என்றும், அவனைக் கேம்பிறிட்ஜ் அனுப்பலாமோவென்று ஆசைப்படுவதாகவும் கூறினார். ஒரு சாதாரண விவசாயி ஆசைப்படக்கூடிய விடயமல்ல; இருந்தும் அவருக்கு இந்த ஆசை வந்தது. இப்படிப்பட்ட சிந்தனை எங்கள் இனத்தின் சிறந்த அம்சம் என்று கூறுகிறேன்.

## நாய் வாலை நிமிர்த்த முடியுமா?

ஒருமுறை ஒரு உத்தியோகத்தர் எவ்வளவோ புத்திமதி கூறியும் திருந்தவில்லை. சேர் ஒலிவர் இவருக்கு என்னசெய்யலாம் எனக் கேட்டார். நாய் வாலை நிமிர்த்த முடியாதென்றேன். அது என்னவென்று கேட்க, நான் கதையைச் சொன்னேன். ''ஒருவன் தன் குருவைப் பார்த்து எனக்கு எல்லாம் செய்யக்கூடிய தொன்றைத் தாருங்கள் எனக் கேட்டான். அதற்குக் குரு, 'அது ஒரு கஷ்டமில்லை. நான் ஒரு பிசாசு தருகிறேன். ஆனால் அதற்குத் தொடர்ந்து வேலை கொடுத்துக்கொண்டேயிருக்க வேண்டும். இல்லாவிட்டால் உன்னையே கொன்றுவிடும். முடியுமா?' என்று கேட்டார். அது மிகவும் சுலபம் என்றான் சீடன். சொற்பவேளையில் பிசாசு தோன்றி அம்மனிதனை என்ன வேணும் என்று கேட்டது. ஏதோ பல அலுவல்களைச் செய்யும்படி அவன் ஆணையிட்டான். சொற்ப நேரத்தில் முடித்துவிட்டு, வேறென்ன செய்யவேண்டும் என்றுகேட்டது பிசாசு. வேறும் பல அலுவல்களைக் கொடுத்துவிட்டுக் குருவிடம் ஓடிப் போய், 'நான் என்ன செய்ய; அது எல்லாவற்றையும் சட்டென்று செய்கிறதே' என்றான் அவன். குரு அவனை அங்கே நின்ற நாயின் வாலை வெட்டி அதை நிமிர்த்தச் சொல்லிப் பிசாசிடம் கொடுக்குமாறு கூறினார். சீடனும் அப்படியே செய்தான். கதையின்படி இன்னும் பிசாசு வாலை நிமிர்த்திக்கொண்டிருக்கிறது'' என்று சேர் ஒலிவருக்குக் கூறினேன். அவர் விழுந்து விழுந்து சிரித்தார். இதன்பின் மிகவும் மோசமான அதிகாரி ஒருவரைப்பற்றிப் பேசும் பொழுது அவரே சொல்லுவார், ''இது நாய் வாலா அல்லது திருத்தக்கூடியதா?'' வென்று.

## பெருங்குணம்

உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பல கூட்டங்கள் நடந்தன. இதிலொன்றில் நடந்ததைக் கூறினால் எவ்வளவு பரந்த மனமுள்ள மனிதர் சேர் ஒலிவர் என்று நன்கு தெரியவரும். உணவு இறக்குமதியைக் குறைப்பதற்கு ஆராய்ந்துகொண்டிருக்கும் பொழுது ஒருவர் இறைச்சிக்கு ஆடு இறக்குமதியைக் குறைக்க வேண்டுமென்றார். அந்நேரத்தில் வேறொரு அமைச்சர், ''நாங்கள் எல்லோரும் உள்

## 'நாய்வாலை நிமிர்த்தும் தத்துவக் கதை கேட்டு விழுந்து விழுந்து சிரித்தார்!

ளூர் மாட்டிறைச்சி சாப்பிடுகிறோம். மற்ற இனங்களும் இதைப் பழகவேண்டும். அப்படியானால் இறக்குமதியை முற்றாக நிற்பாட்டலாம்'' என்றார். சேர் ஒலிவர் இதற்கு அந்த அமைச்சரைப் பார்த்து, ''அப்படிச் சொல்லாதீர்கள். ஒரு இனத்திற்கோ, ஒரு சமயத்திற்கோ விருப்பமில்லாததை நாங்கள் ஒருபொழுதும் வற்புறுத்தப்படாது'' என்று தமது வழக்கமான புன்சிரிப்புடன் கூறி அந்த விடயத்தை அவ்விடத்தில் வாதத்திற்கு விடாமல் நிற்பாட்டிவிட்டார்.

அக்காலத்தில் சுமார் 55 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்தனர். ஏதாவது முக்கியமான உணவு, விவசாய விடயங்களைப்பற்றி அவர்களுக்கு எழுதவேண்டியிருந்தால் பிரதி போடாமல் 55 முறை தட்டெழுத்துச் செய்து தமது கையெழுத்துக்குக் கொண்டுவரும்படி கூறுவார். ஏனென்று வினவியதும் அவர், ''ஒரு கடிதத்தின் பிரதி (Carbon Copy) கிடைத்தால் எவரும் விடயத்திற்கு அவ்வளவு கவனம் செலுத்த மாட்டார்கள். அதனால் ஒவ்வொருவருக்கும் தனிக் கடிதம் அனுப்பவேண்டும்'' என்று கூறினார். இதில் எவ்வளவோ உண்மையுண்டு. ஓர் அமைச்சர் இதுபோன்ற விடயங்களிலும் தன் மனதைச் செலுத்தி அதிகாரிகளுக்கு வழிகாட்டுவது மிகவும் அரிது. இதுபோன்ற சில முறைகளே சேர் ஒலிவரை ஒரு சிறந்த நிர்வாகியாக்கியது. இதற்கு 'ஒலிவர் முறை' (Oliver Technique) என்றும் கூறலாம். இவற்றுள் சில வற்றைக் கூறுகிறேன்:

## ஒலிவர் முறை

காலி மாவட்டத்தில் விவசாய முன்னேற்றத்தைப்பற்றிய கூட்டத்திற்கு அமைச்சரும் நானும் போனோம். போகும் வழியில், எப்படி உணவுற்பத்தி காலி மாவட்டத்தில் என்று அமைச்சர் கேட்டார். ஏனைய காரிய அதிகாரிகள் (A. G. A.) ஒத்துழைக்கிறார்கள் ஆனால் இருவர் அவ்வளவு கவனமெடுக்கிறார்களில்லையென்று கூறினேன். சரி. இவர்களை நான் வளைத்துத் தருகிறேன் என்றார் அமைச்சர். அந்த அதிகாரிகளை அமைச்சருக்குத் தெரியாததால் கூட்டம் முடிந்ததும் இந்த இருவரையும் தனியே கூப்பிட்டு என்னைப் பேசிக்கொண்டிருக்கச் சொன்னார். அப்பொழுது தனக்கு இன்னாரெனத் தெரிந்துவிடுமென்றார். அப்படியே ஏதோ சாட்டைச் சொல்லி இந்த இருவரையும் ஒருபுறம் நான் கூட்டிக்கொண்டு ஏதோ முக்கியமான விடயம் பேசுமாப்போல் நடந்தேன். இதைக் கண்டதும் அமைச்சர் எங்கள் பக்கம் வந்து, இரண்டு அதிகாரிகளின் நடுவில் நுழைந்து இருவரின் தோள்களிலும் தன் கைகளைப் போட்டுக்கொண்டு, 'உங்கள் இருவரையும்தான் இம் மாவட்ட உணவுப் பெருக்கத்திற்கு நம்பியிருக்கிறேன்'' என்றார். அதிகாரிகளுக்கோ சந்தோஷம் தாங்கவில்லை. அமைச்சர் ஒருவர் தோளில் கைபோட்டு அவர்களின் உதவியை நம்பியிருப்பதாகக் கூறியதும் அவர்கள் அமைச்சரிடம் சரண் அடைந்தார்கள். இதன் பின் இவர்களின் முழு ஒத்துழைப்பு எங்களுக்குக் கிடைத்தது. இதுவெல்லாம் ஒரு 'ஒலிவர் முறை'.

இதுபோல் புத்தளம் கச்சேரியில் ஒரு கூட்டம் நடந்தது. அப்பொழுது ஒரு முக்கிய விவசாயி அரசாங்கத்தின் விவசாயக் கொள்கைகளை மிகவும் கண்டித்து இடையிடையே பேசினார். அமைச்சருக்குப் பின் இப்படிப்பட்ட கூட்டங்களில் நான் உட்கார்ந்திருப்பேன். அமைச்சர் மிகவும் மெதுவாக என்னிடம் விவசாயியின் பெயரைக் கேட்டார். நான் ஒரு சிறு கடுதாசியில் பெயரைக் குறித்துக் கொடுத்தேன். உடனே ஒன்றும் செய்யாமல் சில நிமிடங்களுக்குப் பின் விவசாயியை அவர் பெயரால் குறிப்பிட்டு பல விடயங்களைப்பேசினார். அமைச்சருக்கு தன்னை இன்னாரெனத் தெரிந்துவிட்டதே என்ற மகிழ்ச்சியால் இந்த விவசாயி அரசாங்கத்திற்குச் சாதகமாகப் பேசத் தொடங்கினார். இதுவும் ஒரு ஒலிவர் முறை. இன்னுமொரு முறை அமைச்சு அலுவலகத்தில் ஒரு கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு வந்தவர்களில் ஒருவர் நீர்ப்பாசன இலாகா அதிபர். சேர் ஒலிவருக்கு இவரைத் தெரியாது. ஏதோ விவாதித்துக்கொண்டிருக்கும்பொழுது அமைச்சர் கூறியதற்கு இந்த அதிபர் இணங்கவில்லைப்போல் எனக்கு தோன்றிற்று. இவர் சாதாரண பொறியியலாளரென்று நினைத்தே அமைச்சர் பேசினார். இந்த அதிகாரி முரட்டுச் சுபாவமுள்ளவர். ஏதாவது தகராறு வந்துவிட்டாலுமென்று பயந்து நான் ஒரு சிறு கடதாசியில் ''உங்களுக்கு முன் உட்கார்ந்திருப்பவர் நீர்ப்பாசன இலாகா அதிபர். பெயர்...'' என்று குறித்து ஏதோ வேறுவிடயமாகக் கடுதாசி கொடுப்பதுபோல் அமைச்சரிடம் கொடுத்தேன். உடனே ஒன்றும்செய்யாமல் சில நிமிடங்களுக்குப்பின் அந்த இலாகா அதிபரின் பெயரைச் சொல்லி ''நீங்கள் இந்த இலாகாவிற்கு அதிபராயிருக்கும் வரைக்கும் எங்களுக்கு உதவி ஒத்தாசை கிடைக்கும்'' என்று மிகவும் கவர்ச்சியாகக் கூறினார் சேர் ஒலிவர். அதிகாரி மகிழ்ச்சி வெள்ளத்தில் ''ஆம் சேர்'' என்றார். கூட்டம் முடிந்தது. எல்லோரும் போய்விட்டார்கள். அமைச்சரும் நானும் தனியே இருந்தோம். அப்பொழுது அமைச்சர் நான் செய்த காரியத்தை மெச்சி இன்று ஒரு முரட்டு அதிகாரியையும் எங்கள் பக்கத்துக்கு வளைத்துவிட்டோமென்றார்.

## சண்முகம் சொன்ன சோதிடம் பலித்தது

உணவு விவசாய அமைச்சராய்ப்பதிவியேற்றுச் சிலமாதங்களில் ஒரு நாள் சேர் ஒலிவர், இப்பதவியில் பல ஆண்டுகள் சேவை செய்கிறதாயிருந்தால் இலங்கை முழுவதும் பிரயாணம்செய்து பல விவசாயிகளைச் சந்தித்துப் பலவிடயங்களை அறிந்து சிறப்பாகக் கடமையாற்றலாம்; ஆனால் குறுகிய காலம்தான் இப்பதவியிலிருப்பதாயின் இது தேவையில்லையென்று கூறி என்னவிதமாக எதிர்காலத்தை அறியலாமென வினவினார். அதற்கு நான், எனக்குத்தபால் அதிபர் ஒரு நண்பன் இருப்பதாயும் அவருடைய சோதிட பலனில் எனக்கு நம்பிக்கையுண்டென்றும் கூறினேன். பிறந்தநேரம், இடம் குறித்துக் கொடுத்தார். இவர் திருமலையில் தந்தையார் தபால் அதிபராயிருக்கும் பொழுதுபிறந்தாரென்றுஅறிய வந்தது. ஒரு குறிப்பிட்டதினம் அமைச்சர் வாசஸ்தலத்திற்கு எனது நண்பனை (சமீபத்தில் மறைந்த சுன்னாகம் சண்முகம்) அழைத்துச் சென்றேன். நான் வெளியே நாற்காலியில் உட்காரப்போக அமைச்சர் என்னையும் உள்ளே அழைத்துப் பலன் சொல்லும்பொழுது கேட்கச் சொன்னார். இருக்கும் பதவியில் ஒரு ஆண்டு அல்லது 18 மாதம்தான் கடவையாற்றுவாரென்றும் பிறகு இன்னும் முக்கிய மந்திரிப் பதவி வகிப்பாரென்றும் அதற்குப் பிறகு ஒரு இலங்கையரும் இவ்வளவுகாலமும் வகிக்காத பெரிய பதவியிலிருப்பாரென்றும் நண்பன் சண்முகம் கூறினார். அப்பொழுது நான் கேட்டேன், இப்பதவி தேசாதிபதியாயிருக்குமோவென்று. சேர் ஒலிவர் இப்படி ஏதாவது கூறினால் குறும்புத்தனத்தை நிற்பாட்டென்றுகூறி ஒருவிரலைக்காட்டுவார். ஆனால் இம்முறை பேசாமலிருந்தார். ஆகையால் தேசாதிபதி பதவி அவர் மனதிலிருந்திருக்க வேண்டும், நண்பன் சண்முகம் கூறியதுபோல் 8மாதத்திற்குப் பிறகு நிதி அமைச்சராகவும் பிறகு ஒரு ஆண்டின் பின் மகாதேசாதிபதியாகவும் ஆனார். ஒலிவர். தேசாதிபதிஆகியதும்எனக்குத் தொலைபேசியில் சண்முகம் சொன்னது சரியாகிவிட்டதென்றும் தன் சார்பில் அவருக்கு நன்றி கூறும்படியும் கோரினார்இதுபோன்றசெயல்களால்தான் இவர் பல அதிகாரிகளின் மனதையும் கொள்ளை கொண்டார். இதன் விளை

(12ம் பக்கம் பார்க்க)

# செந்தமிழ்க் காவலன் சிங்கையாரியன் தந்த தமிழ்

க. சி. குலரத்தினம்

பூன்னர் மாகன், ஜெயபாகுதேவர், சந்திரபானு முதலானோர் படையெடுப்பால் இலங்கையின் வடபகுதி பெருமளவில் வலிமையுற்றுத் தென்திசைவேந்தரின் கட்டுப்பாடுகளினின்றும் நீங்கித்தமிழ்ப் பிரதேசமாய் உருப்பெற்று வந்தது. அதில் யாழ்ப்பாணக் குடாநாடு, வன்னி, முல்லைத்தீவு முதலியபகுதிகள் ஒருங்கிணைந்திருந்தன. இப்பிரதேசமெங்கும் கிராமங்கள்தோறும் பெருமளவில் குளங்கள், கோயில்கள் நெருக்கமாயிருந்தன. இலங்கைத்தமிழர் நாகரிகம் குளத்தங்கரை நாகரிகம் எனக்கூறும் வகையில் குளங்கள்பலவித தேவைகளுக்கு ஊரவர்களுச்கு உறுதுணையாயிருந்தன. அவை ஊருணிகள்.

## யாழ்ப்பாணத்து அரசு

முன்னர் 1284 ஆம் ஆண்டில் குலசேகர பாண்டியனுக்காக இலங்கைமீது படையெடுத்து வந்த ஆரியசக்கரவர்த்தி என்னும் படைத்தலைவன், தனச்குச் சாதகமாயிருந்த சூழ்நிலையில், வடக்கில் யாழ்ப்பாணத்து அரசை நிறுவினான். அவனுடைய தலைநகரம் சிங்கைநகர் எனப்பெயர் பெறுவதாயிற்று.

யாழ்ப்பாணத்து அரசு, இங்கிலாந்தில் ரியூடர்வம்சத்தார் 1484 ஆம் ஆண்டளவில் ஒரு நிலையான அரசைநிறுவுவதற்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன் நிலைபெறத் தொடங்கிய போதிலும், அதற்காதாரமானவரலாறுகள் அழிந்து போயின எனலாம். பழைய மன்னர்களுள் யாழ்ப்பாணன், உக்கிரசிங்கன், சிங்கையாரியன் முதலிய பெயர்கள் பலவிதமான உபகதைகளோடு பின்னிப்பிணைந்து வழங்குகின்றன.

## தமிழ் தந்த தாதாக்கள்

சிலர் யாழ்ப்பாணத்து அரசின் தலைநகராகச் சிங்கை என்னும் சிங்கபுரம் 1216 ஆம் ஆண்டு முதலாக புகழ்பூத்ததென்பர். சிங்கை 1216 முதல் 1450 ஆம் ஆண்டு வரையும் சிறப்புடன் விளங்கியது என்பர். பின்னர் 1450 முதல் 1621 வரையும் நல்லூர் இராசதானியாய் விளங்கியதாகும். தமிழரசர்களுள் செகராசசேகரன், பரராசசேகரன் என்னும் பெயர்கள்பல தலைமுறைகளாக எட்டுமுறை மாறி மாறி வருகின்ற முறையில் சில மயக்கங்கள் உண்டாகியுள்ளன. இங்கிலாந்தில் ஹென்றி எனஎண்மரும், எட்வேட் எனஎண்மரும் அரசு செய்துள்ளபோதிலும் எவ்வித மயக்கமும் உண்டாகவில்லை.

சிங்கையாரியச் சக்கரவர்த்திகள் செகராசசேகரன் சிறந்து விளங்கினான். இவன் செந்தமிழும் சைவநெறியும் சிறந்து விளங்கமுழுநேரப் பணிபுரிந்தான் என்பர். இவனுடைய ஆட்சிகாலம் 1380 முதல் 1414 வரையிலாகும். இவன் தானே புலவனாய் இருந்ததோடு புலவர்கள் பலரைவரவேற்று உபசரித்துப் போற்றிய புரவலனுயும் இருந்தான். இவன் காலத்தில் சோமசன்மா, பண்டிதராசர், கவியராசர், சகவீரன், கரசைப்புலவர் முதலான செந்தமிழ்ப் புலவர்கள்பலர் வாழ்ந்துதமிழ் தந்தார்கள்.

சிங்கைச் செகராசசேகரன் தமிழ்நாட்டிலிருந்து செந்தமிழ் வடமொழிவல்ல புலவர்கள் பலரைவரவழைத்து யாழ்ப்பாணம் எங்கும் குடியேற்றியதோடு, கிழக்கில் திருகோணமலைப் பிரதேசத்திலும் வாழவ்சதி செய்து வழங்கினான்.

சிங்கைச்செகராசசேகரன் காலத்துப் புலவர்கள் தந்த நூல்களுள் செகராசசேகரம், செகராசசேகரமாலை என்னும் இரண்டுசிறந்த நூல்கள் எமக்குக் கிடைத்துள்ளன. செகராசசேகரம் என்பது வைத்திய நூல். இதனைச்செய்த புலவர் பெயரை அறியமுடியவில்லை. செகராசசேகரமாலை என்பது ஒரு சோதிடநூல். இதனைச் செய்தவர் இராமேசசன்மா என்பாரின்மைந்தர் சோமசன்மாஎன்று அறியக்கிடக்கிறது.

செகராசசேகரம் எனத்தன் பெயர் நிலவச் செகராசசேகரன் நூல்செய்வித்த அருமையை நூலின் பாடல்கள் தெளிவாகத் தெரிவிக்கின்றன. ''செயம் பெறு சிங்கை நாடன் செகராசசேகரன்'' என்றும், ''செகராசசேகரன் என்னும் சிங்கையாரியனை யெதிரொன்னுர்கள் எனவே'' என்றும், ''பத்மராகமிலங்குமணி முடிபுனையும் இலங்கைவேந்தர், சீரியபொன் திறையளக்கச் செங்கோலோச்சும், செகராசசேகரமன் சிங்கைமேவும் ஆரியர்கோன் வெண்குடையின் நிழலே செய்யும் அவனிதனை'' என்றும் பாடல்கள் பலவாறுக வருகின்றன.

# சிகரட்

(8ம் பக்கத் தொடர்ச்சி)

ரோயல் கல்லூரி வெளியிடும் சஞ்சிகை ஒருமுறை கூறியது.

1969ம் ஆண்டில் புகைக்கும் பழக்ககள்பற்றி நடத்தப்பட்ட ஒரு பரிசீலனையின்படி இலங்கையில் 1.6 சதவிகிதப் பெண்கள் மட்டுமே புகைப்பவர்களாயிருக்க ஆண்களுக்கான நேரொத்த சதவிகிதம் 48.25 சதவிகிதமாயிருந்தது. பாடசாலைக் குழந்தைகளின் புகைக்கும் பழக்கங்களைப்பற்றி இலங்கையில் நடத்தப்பட்ட ஒரு பரிசீலனையிலிருந்து பாடசாலைப் பையன்களில் 55 சதவிகிதத்தினர் கிரமமாகப் புகைப்பவர்களாயிருக்கக் காணப்பட்டனர் என்பது தெரியவந்துள்ளது.

புகைஞர்கள் புகைத்தற் பழக்கத்துக்கு அடிமையாகிவிடுகின்றுர்கள் என்பதற்குத் திட்டவட்டமான சான்றுகள் உள்ளன. இந்த அடிமைத்தனத்திற்கு உண்மையில் நிக்கொட்டீனே காரணம் எனச் சொல்லப்படுகின்றது. அதிக அளவில் நிக்கொட்டீன் உள்ள சிகரட்டுகளிலிருந்து குறைந்தளவில் நிக்கொட்டீன் உள்ள சிகரட்டுகளுக்கு மாறும் புகைஞர்கள் ஒன்றில் ஊதிவெளியிடும் சிறு மூச்சுகளின் விகிதத்தைத் தாமுகவே அதிகரிக்கிருர்கள் அல்லது தாங்கள் உள்ளிழுக்கும் நிக்கொட்டீனை அதிகரிப்பதற்காக அதிகமான சிகரட்டுகளைப் புகைக்கின்றுர்கள். புகைத்தல் தங்களை அமைதிப்படுத்துவதாகவும், அத்துடன் சிந்தனை செய்வதற்கும் வேலை செய்வதற்கும் தங்களை ஊக்குவிப்பதாகவும் அநேக புகைஞர்கள் கூறுகின்றுர்கள். இதற்கும் நிக்கொட்டீனே காரணமெனப் பரிசோதனைச் சான்றுகள் குறிப்பிடுகின்றன.


## உலக சுகாதார ஸ்தாபனம் அறிக்கை

உலக சுகாதார ஸ்தாபனத்தைச் சேர்ந்த நிபுணர்கமிட்டி 'புகைத்தலும் ஆரோக்கியத்தின்மீது அது ஏற்படுத்தும் விளைவுகளும்' என்பதைப்பற்றிய அறிக்கையொன்றில் கூறுவதாவது: ''அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் சக்தியற்ற நிலைக்கும் அகால மரணத்துக்கும் புகைத்தல் தொடர்பான வியாதிகள் எவ்வளவோ முக்கியமான காரணங்களாயிருப்பதால் இந்த நாடுகளில் ஆரோச்கியத்தை அபிவிருத்தி செய்யவும் ஆயுட்காலத்தை நீடிக்கவும் தடுப்புமுறை பருத்துவத்தின் முழுத்துறையிலும் எடுக்கப்படும் வேறெந்த நடவடிக்கையையும் விடசிகரட் புகைத்தலைக் கட்டுப்படுத்தினல் அதிகம் உதவியாயிருக்கலாம்.'

புகையிலை புகைப்பதனுல் ஏற்படும் மிகவும் தீங்கான விளைவுகளைப்பற்றி எமது மக்களில் பெரும்பாலானோர் இன்னும் அறியாதிருக்கின்றுர்கள். புகையிலை புகைத்தல் மக்களின் ஆயுளைக் குறுக்கும் அல்லது மக்களைக் கொல்லும் என்பதை அவர்கள் உணர்வது அவசியமாகும்.







* ஆஷாரெராஸோ (கற்கள் தரை ஓடுகள்) உயர்ந்த தரத்தில் உற்பத்திசெய்யப்பட்டவை. அழகிற்கும் நீண்ட பாவிப்பிற்கும் உறுதியளிக்கும் வகையில் அழுத்தமாகத் தயாரிக்கப்பட்டவை.
* பரபரப்பூட்டும் பல வர்ணங்களிலும், கண்கவர் டிசைன்களிலும் உருவாக்கப்பட்ட ஆஷா ரெராஸோ, உங்கள் தரைக்கு புத்தம் புதியதோர் (ஒளியைத்) அமைப்பைத் தருகிறது.
* 12 வர்ணங்களில் இருந்து தேர்ந்தெடுக்கலாம். எத்தனை ரம்யம், எத்தனை எழில். அது மட்டுமா நடைமுறக்குகந்தது.. ஆஷா ரெராஸா.

விலை: ரூபா 17/50 சதத்திற்கு மேல்.

திருப்தியடைந்த எமது சில வாடிக்கையாளர்கள்
தாஜ்லங்கா ஹோட்டல்ஸ் லிமிடேட், ரிரான்ஸ் ஆசியா ஹொட்டல் (போக்குவரத்து நிலயம்)
வர்த்தகவங்கி-கண்டி, மத்திய ஆஸ்பத்திரி.

உற்பத்திசெய்வோர்:
ஆ ஆஷா டைல்ஸ்
150, வோர்ட் பிளேஸ், கொழும்பு -8. தொலைபேசி: 597610, 597952,

விபரங்களுக்கு :-
தேவின்சா என்டர்பிறைசஸ் ''யோகமாளிகை'' வல்லை ரோட், சங்கானை, யாழ்ப்பாணம்.

ஆஷா ரெராஸோ - பல ரகங்களில் மிகச்சிறந்தது

TEAM

## தமிழ்ப்பணியும் மறைப்பணியும்

## மூச்சாய்க் கொண்ட

## மானிப்பாய் தந்த குருமணி

## சொற்கலைப் புலவர்

# சுவாமி ஞானப்பிரகாசர்

நம் ஈழத் திருநாட்டில் தமிழ்வளர்ச்சிக்கு உதவியவர்களுள் ஒருவரான சுவாமி ஞானப்பிரகாச அடிகளாரின் நினைவுதினம் இன்றாகும். தமிழுக்கும் சைவசமயத்துக்கும் மகத்தான பணியாற்றியவர் வண்ணை ஆறுமுக நாவலர் பெருமான் ஆவர். நல்லூர் சுவாமிஞானப்பிரகாசர் தமிழுக்கும் கிறீஸ்துவத்திருமறைக்கும் அளப்பரிய அரும்பணி ஆற்றியவர் பேரான-புகழான உயர்சைவவேளாண் மரபில் பிறந்தவைத்தியலிங்கம் என்பவன் பிற்போது கத்தோலிக்கத் திருமறையைத் தழுவி, துறவுபூண்டு, கிறீஸ்துவசமய வளர்ச்சிக்கு அரும்பணிபுரிந்து ஆயிரக்கணக்கான பிறமதத்தவரை மனந்திருப்பி, கிறீஸ்தவர்களின் கண்கண்ட மனித தெய்வமாய் சுவாமி ஞானப்பிரகாசகர் எனப் போற்றப்படுவர் என்று எவர்தாம் எண்ணியிருந்தார்!

சைவப்பெரியார் சுவாமிநாதப்பிள்ளையின் மகனாகிய வைத்திலிங்கம் மானிப்பாயில் 30-8-1875 ல்பிறந்தார்.

வைத்திலிங்கம் சிறு குழந்தையாயிருக்கும் போதே தந்தை சுவாமிநாதபிள்ளை இறப்பெய்தி விட்டார். பின்பு, தாயார் முன்மரபு உறவினரான அச்சுவேலி சத்தியாகுப்பிள்ளை உடையாரின் மகன் தம்பிமுத்துப்பிள்ளையை மறுமணம் புரிந்து கொண்டார். இதனால்தாயும் மகனும் கத்தோலிக்கமதத்தைத் தழுவிக் கொண்டனர். வைத்தியலிங்கத்துக்கு ஞானப்பிரகாசம் என்னும் புதிய கிறீஸ்துவப் பெயரிடப்பட்டது.

ஞானப்பிரகாசம் முதலில் தன் தந்தையால் தாபிக்கப்பட்டு நடத்தப்பட்டு வந்த மானிப்பாய்ப் பாடசாலையில் ஆரம்பக்கல்வியைப்பயின்றான். பின் அச்சுவேலிப் பாடசாலையிலும் பயின்றான். பின் யாழ் நகர் புனிதபத்திரீசியார் கல்லூரியில் சேர்ந்து ஆங்கில உயர்படிப்புக்களைப் பயின்றான். அந்நாட்களில்தான். சங்கீதம், சமஸ்கிருதம், அச்சகவேலை, தமிழ் இலக்கியம் இவற்றில் இவன் ஆர்வம் கொண்டு அறிவைத் தேடுவதற்குரிய ஏற்பாடுகளைச் சிறிய தந்தையார் செய்துதவினார்.

### சிங்களத்தில்

### தேர்ச்சி

கல்லூரிப்படிப்பை முடித்துக்கொண்டு உத்தியோகம் பெறுவதற்காகக் கொழும்பு சென்ற ஞானப்பிரகாசம் சிங்களமொழித்தேர்ச்சியும் பெற்றார். தன்தாய் மாமனாரின் தேயிலைப் பெருந்தோட்டமொன்றில் சிறிதுகாலம் கணக்காளராகக் கடமைபுரிந்தார். இந்தியத் தோட்டத் தொழிலாளரின் பேச்சு மொழிகளை அவதானித்து இந்தியத் தமிழ், தெலுங்கு, மலையாளம், துளுகுறவமொழி இவற்றை அனுபவரீதியில்நன்கு அறிந்துகொண்டார். அந்நாளில் இலங்கை அரசுவிளம்பரப் படுத்தியிருந்த புகையிரதப் பகுதிப் பரீட்சைக்கு விண்ணப்பித்து அதில் தேர்ச்சி பெற்று புகையிரதத் தந்திச் சேவை உத்தியோகத்தராகக் கடமை ஏற்றார். சில நாட்களுள் உயர்பதவியும் கிடைத்தது.

### பதவியைத்துறந்து

### துறவற பூண்டார்

இத்தருணத்தில் தான், ஒரு கிறீஸ்துவத்துறவியாகி ஏழை மக்களுக்கு மதப்பணிபுரிய வேண்டும் எனத்துணிவு பெற்றார். அரச அலுவலைத் திடீரெனத்துறந்து வீடுசென்று, சிறியதந்தையாரின் மறுப்பையும் பறுவாய்பண்ணது, நேராக யாழ்ப்பாணத்துறவுப் பயிற்சிநிலையத்தில்சேர்ந்து குருமாணவனானார் பூரணதுறவுப் பயிற்சிபெற்றுத்தமது 26 வயதில் குருத்துவப்பட்டத்தையும் பெற்றார். இவர்தாம் இயல்பிலே அடைந்திருந்த அடிப்படை ஆற்றல்களையும், பெற்றுக்கொண்ட அனுபவங்களையும் வளமாக வளர்த்து, தாம் ஆற்றப்போகும் பணிக்குக்தக்க பக்குவநிலையையடைந்திருந்தார்.

### தமிழ்ப் பணி

மதப் பணியில் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்த சுவாமி ஞானப்பிரகாசர் தமிழ்ப் பணியிலும் பெருமிதமாகச் செயலாற்றி வந்தார். தமிழ் இலக்கிய இலக்கண நூல்களைக் கற்றறிந்த சுவாமிகள் தமிழ் மொழி உற்பத்தி, அமைப்பு வளர்ச்சி பற்றி விஞ்ஞான முறையில் அறியவும் ஆராயவும் தொடங்கினார். பல மொழிகளிலுமுள்ள சொல் ஆய்வு நூல்களை எல்லாம் பெற்று அவற்றில் ஆய்வு நடத்தினார், முப்பதுக்கு மேற்பட்ட மொழிகளைப் பற்றித் திருந்திய அறிவு பெற்றிருந்தார். எழுபதுக்கும் மேற்பட்ட மொழிகளை இனங்கண்டு கையாளும் திறமை பெற்றிருந்தார்.

மொழியியலில் வியக்கத்தக்க ஆய்வு நடத்தி புதிய நியதித் தன்மைகளை வெளியிட்டார். தமிழ்ச் சொற்களின் அடிவேர்ச் சொற்களின் நுண்மைகளைக் கண்டறிந்து அவை பிற மொழிகளில் சென்றடைந்துள்ள செறிவுத் தன்மையை ஆதாரங்களுடன் எண்பித்துக் காட்டினார். இவரின் சொல்—மொழி ஆராய்ச்சி முடிவுகளை பிற நாட்டு மொழி ஆய்வு அறிஞர் பலர் ஒப்புக் கொண்டனர். சிலர் முதலில் தப்புக் கண்டனர் எனினும் பின்பு ஏற்றுக் கொண்டனர்!

பண்டிதர்
க. ஆசிநாதர்

சுவாமிகளின் மொழி ஆய்வு தனித்துவத் தன்மையை மேனாட்டு மொழி நிபுணர் பலர் நேரடியாகப் பாராட்டி உள்ளனர். ஜெர்மனி நாட்டு பேரறிஞர் மன்றச் சிபாரிசின் பேரில் அந்நாட்டு அரசாங்கம்

(12ம் பக்கம் பார்க்க)

## இந்தியாவின் கிரிக்கெட்

## உலகக்கிண்ண வெற்றி

## தற்செயலானது என்பதை

## மேற்கிந்தியா நிரூபித்தது

இந்திய - மேற்கிந்திய அணிகளுக்கிடையே இந்திய மண்ணில் நடந்து முடிந்த கிரிக்கெட் டெஸ்ட் தொடரில் பல சாதனைகள் நிகழ்த்தப்பட்டன. குறிப்பாக இந்திய வீரர் சுனில் மனோகர் கவாஸ்கர் சேர்டொனல்ட் பிரட்மனுடைய 29 செஞ்சரிகளை முறியடித்து 30 செஞ்சரிகள் புதிய சாதனை ஏற்படுத்தியமை கிரிக்கெட் ரசிகர்களினால் போற்றப்படுகிறது.

இந்த டெஸ்ட் தொடரில் கவாஸ்கர் சாதனைகள் ஏற்படுத்தியபோதிலும் இன்னொரு முக்கிய சாதனை ஏற்படுத்தப்பட்டிருப்பதைக் குறிப்பிட வேண்டியதும் மிக அவசியமாகும்.

### மேற்கிந்திய

### வெற்றி

கிளைவ்லொயிட் தலைமையிலான மேற்கிந்தியத் தீவுகள் அணி இந்திய மண்ணில் கண்ட மாபெரும் வெற்றியே அந்த சாதனையாகும்.

மே. இ. தீவுகள் அணி சென்ற ஆண்டு இங்கிலாந்து ''லாட்ஸ்'' மைதானத்தில் உலகக் கிண்ணத்துக்கான இறுதிப் போட்டியில் இந்தியாவிடம் தழுவிக் கொண்ட தோல்விமுழுக் கிரிக்கெட் உலகத்தினையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியபோது, இது மே.இந்திய அணியினரைக் குறிப்பாக கப்டன் கிளைவ் லொயிட்டை அத்தோல்வி மிகப் பலமாகத் தாக்கியிருந்தது.

ஏனெனில் அன்று 'லாட்ஸ்' விளையாட்டில் லொயிட் நோய் வாய்ப்பட்டுக் காணப்பட்டமை, அணியின் ஆரம்ப ஆட்டக்காரர்கள் 60 ஓவர் போட்டியினை 30 ஓவரிலேயே முடித்து வெற்றிபெற முயன்றமை என்பனவே அந்தத் தோல்விக்கு முக்கிய காரணங்களாகும்.

### லொயிட்

### ஒரு சிறந்த

### காப்டன்

லொயிட் ஒரு சிறந்த வீரர். அவர் உலகக் கிண்ணத் தோல்வியினால் மிகவும் வேதனையுற்றார். அந்தத் தோல்வியின்பின் ஓய்வு பெறுவதென்று அறிவித்த அவர் பின்னர்தமதுநிலையைமாற்றி இந்திய, அவுஸ்திரேலிய சுற்றுப் பயணத்துக்குத் தலைமைதாங்க முன்வந்தார். உலகக்கிண்ணத் தோல்வியை ஈடுசெய்ய இந்தியாவுக்குச் சென்று இந்திய அணியை அவர்கள் மண்ணிலேயே தோற்கடிக்க வேண்டுமென்ற நோக்கத்தினாலேயே அவர் தமது அணித் தலைமையை மீண்டும் ஏற்றார் என்று கூற வேண்டும். குறிப்பாக உலகக் கிண்ணப் போட்டியில் பங்கு பற்றிய அதே வீரர்களுடன் அவர் இந்தியாவுக்கு வந்தமை அவரது நோக்கத்தை தெளிவாகப் புலப்படுத்துகிறது.

### உலகக் கிண்ண

### வெற்றி

### தற்செயலானது

எந்த நோக்கத்துடன் இந்தியாவுக்கு வந்தாரோ அந்த நோக்கம் லொயிட்டுக்கு நிறைவேறிவிட்டது. இந்தியாவில் நடந்த 5 ஒருநாள் ஆட்டம் அனைத்திலும் வென்றதோடு 6 டெஸ்ட் தொடரில் மூன்றில் பெருவெற்றியும் கண்டார். இந்த வெற்றிகளில் பல லொயிட்டின் தனியான ஆட்டத் திறமையினால் வெல்லப்பட்டமை என்பது குறிப்பிடத்தக்கது.

'லாட்ஸ்' மைதானத்தில் இந்தியாவிடம் தோல்விகண்ட வீரர்களான லொயிட், விவியன் றிச்சார்ட், கிறினிடிச், கோம்ஸ், டியோன் போன்ற ஆட்டக்காரர்களும், மல்கம் மார்ஷல், மைக்கல் கோல்டிங் போன்ற உலகத்திலேயே சிறந்த வேகப் பந்துவீச்சாளர்களும் இந்தியமண்ணில் சிறப்பாகவிளையாடி தமது அணியினை பெருவெற்றிபெறச் செய்தனர்.

உலகத்திலேயே தலைசிறந்த கப்டனான லொயிட் இந்த டெஸ்ட் தொடரில் தமது அணியினை சிறப்பாக வழி நடத்தியதோடு 6 டெஸ்டுகளிலும் மொத்தம் 496 ஓட்டங்களை எடுத்தமையும் இதில் பல வெற்றிகள் அவரின் தனித்திறமையால் வெல்லப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு இந்தியாவில் மேற்கிந்திய தீவுகள் அணியின் திறமையான ஆட்டத்தினால் இந்தியா உலகக் கிண்ணத்தில் கண்ட வெற்றி ஒரு தற்செயல் நிகழ்ச்சியென சொல்லுமளவுக்கு மாறிவிட்டது.

### இளம் வீரர்களுக்கு


### இடமில்லை

இதுவிடயத்தில் இந்தியா கண்ட படுதோல்வியினையும் குறிப்பிட வேண்டும். இந்தியா உலகக் கிண்ணத்தை சுவிகரித்தபோது சந்தீப் பாட்டேல், யக்ஸ்பால்சர்மா, அமரநாத், சிறிகாந், கபில் தேவ் போன்ற மிக விரைவான ஆட்டக்காரர்கள் அணியில் இருந்தார்கள். ஆனால் தற்போது கபில்தேவ் தவிர்ந்த ஏனையோர் ஒருசில டெஸ்டுகளில் சிறப்பாக விளையாடாத காரணத்தினால் நீக்கப்பட்டு விட்டார்கள். அத்துடன் மிக விரைவான ஆட்டக்காரரான சிறிகாந் மெதுவாக ஆடும்படி

(14ம் பக்கம் பார்க்க)

ஏ. பி. சூரியகாந்தன்

விளையாட்டு




நம்பிக்கையான நவநாகரிக தங்க வைர நகைகள் வேண்டுமா?

**பொ. அம்பலவாணர்**

தங்க, வைர நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.

போன்: 23199 தந்தி: 'வைரம்'

(9ம் பக்கத் தொடர்ச்சி)

வாக அதிகாரிகள் இவருக்கு விசுவாசமாய் முழு ஒத்துழைப்பைக் கொடுத்தார்கள். இதனல் இன்னும் பெரியவரானர்.

### 58 கலவரத்தில்

உணவு விவசாய அமைச்சர் பதவியிலிருந்து மாறிய பிறகு சேர் ஒலிவருடன் நெருங்கிய தொடர்பு மீண்டுமொருமுறை 1958ம் ஆண்டு இனக் கலவரத்துடன் ஆரம்பமாயிற்று. அப்பொழுது அவர் மகா தேசாதிபதி. தமது பிரத்தியேக தொலைபேசி இலக்கத்தைக் கொடுத்து ஏதாவது வெள்ளவத்தையில் ஆபத்திருந்தால் தன்னுடன் நேரடித் தொடர்பு கொள்ளும்படி சொன்னர். அதோடு ஒவ்வொரு காலையும் ஐந்து மணிக்கு வெள்ளவத்தையில் நடக்கிறதெல்லாவற்றையும் கூறுமாறு கேட்டிருந்தார். அந்த நாட்களில் 41வது ஒழுங்கையில் சில காடையர் ஒரு வீட்டைத் தாக்க வீட்டுக்காரரர் என்னிடம் அறிவிக்க நான் உடனே தொலைபேசியில் சேர் ஒலிவருக்கு முறையிட்டேன், என்னைத்தொலைபேசியை விடாமல் இரண்டு நிமிடம் பொறுக்கச் சொல்லிவிட்டு வேறு தொலைபேசியில் அவர் ஒரு தளபதியுடன் பேசுவது எனக்குக் கேட்கக் கூடியதாயிருந்தது. இந்நிலையில் 42வது.ஒழுங்கையிலுள்ள எங்கள் வீட்டிலிருந்து துருப்புகள் 41வது ஒழுங்கைக்கு வரும் சத்தம் கேட்டது. சேர் ஒலிவர் தொலைபேசிக்கு வந்து 'இப்போதைக்கு துருப்புக்கள் வந்த சத்தம் உங்களுக்குக் கேட்டிருக்குமே. எனவே எல்லாம் சரியா' என்றார். கலவரம் முடிந்ததும் ஒருநாள் இராணிமாளிகைக்கு அழைத்துக் கலவரத்தைப்பற்றிப் பேசினர். அவர் சொன்னதைக் கேட்டதும் இவர் அறிவில் ஒரு வசிட்டரா என்று யோசிக்க நேர்ந்தது.

# சேர் ஒலிவர்

### விருந்தில்

### நன்றி தெரிவித்தார்

உணவு உற்பத்தி அதிபர் வேலையால் மாறி சனத்தொகைப்புள்ளிவிபர அதிபராகக் கடமையாற்றினேன். இடையிடையே தனக்குத் தேவையான புள்ளிவிபரங்களுக்குத் தேசாதிபதி நேரே தொலைபேசியில் என்னிடம் கேட்பார். ஒருமுறை தொலைபேசியில் மத்தியானம் பன்னிரண்டு மணியளவில் கூப்பிட்டு தான் நாலு மணிக்கு ஒரு கூட்டத்தில் பேசவிருப்பதாயும் சில புள்ளிவிபரங்களைச் சேர்த்து மூன்று மணிக்கு அனுப்ப முடியுமோவென்றும் கேட்டார். முடியுமென்று கூறிவிட்டு இரண்டு மூன்று உத்தியோகத்தருடன் சேர்ந்துபுள்ளி விபரங்களைச்சேகரித்து மூன்று மணிக்கு முன்னரே கையில் சேரும்படி அனுப்பிவைத்தேன். அன்று இரவு ஒருபெரிய ஹோட்டலில் விருந்தொன்றுக்கு நானும் என், மனைவியும் சென்றிருந்தோம். பிரதமவிருந்தினராக சேர் ஒலிவர் வருகிருரெனக்கூறினர்கள். அவர் வந்ததும் எல்லோரும் எழுந்து நின்ருேம். சேர் ஒலிவருக்கு வந்திருந்தவர்களை அறிமுகப்படுத்திக் கொண்டிருந்தார்கள். எங்களுக்கருகாமையில் வருமுன் நான் எனது மனைவியாருக்கு 'இன்று மகாதேசாதிபதி புள்ளிவிபரம் ஏதோ சடுதியாகத் தேவையென்று கேட்டு நான் கொடுத்தேன். இவரை எனக்கு நல்லாய்த்தெரியும். இப்போது அதற்கு நன்றி கூறுவார்' என்று கூறினேன். எங்களுக்கு அருகே வந்ததும் எனக்கருகில் வந்து மெதுவாக எனது காதில் 'இவ்வளவு சீக்கிரமாகப்புள்ளி விபரம் சேர்த்துத்தந்ததற்கு மிக்க நன்றி' யென்று கூறினர். இதுபோன்ற நல்ல கருமங்களை மெச்சி நடந்ததால் இவருக்கு நாங்கள் எல்லோரும் அக்காலத்தில் முழு ஒத்துழைப்பைக் கொடுத்தோம்.

### பாகுபாடு

### காட்டாதவர்

சாதி, மதம், இனமென்ற பாகுபாடின்றி சமீபத்தில் இலங்கையில் வாழ்ந்து அமரத்துவம் அடைந்தவர்களில் சேர் ஒலிவரும் ஒருவர். இவரது உருவச்சிலையைச் சமீபத்தில் திரை நீக்கம் செய்திருந்தார்கள். இவருக்கு எதிரிகள் இல்லாமலில்லை. ஆனல் எதிரிகள் இவரைச் சந்தித்துப் பழகினல் நண்பர்களாகிவிடுவார்கள்.

### ஒலிவரிடம்

### சேர் ஜோன்

### பெட்டிப் பாம்பானர்

சேர்ஒலிவரும் மறைந்தபிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலையும் இரத்மலானை விமான நிலையத்தில் ஒரு விடயமாக அரசாங்க அதிகாரிகளையும் சந்திக்க நேரிட்டது. சேர் ஒலிவர் வீட்டில் பல ஆட்கள் வந்து, விடாமல் பேசிக்கொண்டிருந்தபடியால் கூட்டத்திற்குச் சமுகமளிக்கப்பத்து நிமிடம் பிந்திப் போய்விட்டது. 'இதற்கிடையில் சேர் ஜோன் பொறுமை இழந்து ''வரட்டும் ஒலிவர்' நான்நல்லாய் ஏசப்போறேன்'' என்றார். இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும்பொழுது சேர் ஒலிவர் வந்துகொண்டிருந்தார். என்ன நடக்கப்போகிறதென்று நாமெல்லோரும் ஆவலுடன் பார்த்திருந்தோம். சேர் ஒலிவர் சேர் ஜோனிடம் போய் தான் தாமதித்து வந்ததற்கு மன்னிக்குமாறு கூறி, சேர் ஜோனின் தோளில் ஒரு கையைப் போட்டு மற்றக்கையால் அவர் நாடியைத் தடவினர். சேர்ஜோன் படமெடுத்துஆடிய பாம்பு அடங்கிப் பெட்டிக்குள் போன மாதிரி, சிரித்துவிட்டு மௌனமாயிருந்தார். இந்தப் பெரியாருடன் சேர்ந்து கடமை செய்ய கிடைத்த வாய்ப்புக்கு நான் கடவுளை வணங்குகின்றேன். சிலர் கூறும் சேர் ஒலிவரின் குறை குற்றங்களைத் தவிர்த்து இவரின் சிறந்த குணங்களை மதித்து இலங்கை அரசியல் வானில் உதித்துப்பிரகாசித்து அழியாப் புகழுடன் இன்றும் பலர் மனதில் வாழும் சேர் ஒலிவருக்கு எனது அஞ்சலியைச் செலுத்துகின்றேன்.

# ஞானப்பிரகாசர்

(11ம் பக்கத் தொடர்ச்சி)

சுவாமிகளின் உருவம் பொறித்த அஞ்சல் முத்திரையை வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. இலங்கை இந்திய தமிழ் பேரறிஞர் அவையினர், சுவாமிகளுக்கு 'சொற்கலைப் புலவர்' எனும் கண்ணியப் பட்டத்தைக் கொடுத்துப் பாராட்டினர்.

### நூல்கள்

சுவாமிகளுக்குஅழியாப்புகழை ஈட்டிக் கொடுத்தவை அவர். எழுதிப் பதிப்பித்து வெளியிட்ட நூல்களேயாகும்.

சுவாமிகள் மதம், மொழி வரலாறு, தத்துவம், தருக்கம், ஆன்மிகம், அனுசாரம், ஆராய்ச்சி முதலியவை தொடர்பாக நூற்றுக் கணக்கான சிறிய பெரிய நூல்களை எழுதியுள்ளார். இந் நூல்களை வகைப்படுத்தித் தொகைப் படுத்திக் காட்டுவது எளிதான காரியமன்று.

சுவாமிகள் வெளியிட்ட நூல்களும் மிக மேலானதாக கணிக்கப்படுவது சொற்பிறப்பு ஒப்பியல் தமிழகராதி ஆகும். இதில் ஒரு சில பாகங்களே வெளியாகி உள்ளன. இதில் எழுபத்தைந்து மொழிகள் கையாளப்பட்டுள்ளன என மொழி ஆய்வாளர் கணக்கிட்டுள்ளனர். சுவாமிகள் அரை நூற்றுண்டளவாகத் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிட்ட நூல்களையும் பத்திரிகைக் கட்டுரைகளையும் ஒரு சேரச் சேகரித்து மதிப்பீடு செய்தவர் எவருமே இலர். பல வகையிலும் தமிழிற்கும் சமயத்திற்கும் ஒப்பில்லாத பணி புரிந்த சுவாமி ஞானப்பிரகாசர் 1947 ஆம் ஆண்டு தைத் திங்கள் 22 ம் நாள் அமரர் ஆனர். இலங்கை அரசு 1981 ம் ஆண்டில் சுவாமிகளின் நினைவு முத்திரையை வெளியிட்டது.

# இவ்வாரம் எப்படி?

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

படவும் உடல் நலம் பாதிக்கப்படலாம். பெண்கள் மிகவும் அவதானமாக நடக்கவும். அதிஷ்ட தேவதையின் பார்வை உங்களுக்கு கிடைக்கலாம். குருவின் உபதேசம் வாழ்க்கைக்கு வழி காட்டியாக அமையலாம்.

### துலாம்

கன்னல் மொழி மூலம் காரியங்களைச் சாதிப்பீர். கவர்ச்சியான உடை அணிவதற்கு விரும்புவீர் இன்னலின் பின்னல் உங்கள் முன்னேற்றத்தைத் தடுக்கும். திடசித்தம் இருப்பின் எதையும் சமாளிப்பீர். குறுக்கு வழித் தலையிடு சட்டத்தில் மாட்டி வைக்கும். கொள்வனவுகளில் நல்ல திருப்பம் ஏற்படும்.

### விருச்சிகம்

சீறி வரும் கோபம் சிறிற மோதல்களை உருவாக்கும். பொறுமை வேண்டும். உடல் நலமும் பாதிக்கப்படலாம். கைத்தொழில் புரிவோருக்கு நல்ல வருவாய் உண்டு. குடும்பத்திலும் மகிழ்ச்சிக்கு இடமுண்டு. தீய சக்திகள் பல வழிகளிலும் உங்களை வீழ்த்தப் பார்க்கும். விழிப்புடன் செயல்படவும்.

### தனுசு

தாய்வழிப் பெருமையும் அவ்வழிஇலாபமும் ஏற்படும். உயர்கல்விகளும் இடம்பெறும் சிந்தையில் தடுமாற்றம் ஏற்படலாம். சுகாதாரம் வேண்டும். நீண்டகாலபிணி நீங்க இடமுண்டு. அவப்போக்கையும் ஆத்திரஉணர்ச்சியையும் தவிர்க்கலாம்.

### மகரம்

எப்பக்கம் திரும்பினுலும் ஆதரவு கொடுக்க அன்பர்கள் முன்வருவார்கள். வெளியிடத் தொடர்புகள் சிறப்பைத்தரலாம். படித்தவர்களால் பயன் கிட்டும் சகோதரங்களால் தொல்லைகள் அதிகரிக்கும். பிரயாணங்களைத் தவிர்ப்பது நன்று. பேச்சாளர்களும் வீரம் காட்டுவர். புகழும் ஈட்டுவர்.


### கும்பம்

பகைமூட்டம் தோன்றும். பதட்டமும் உடன்சேரும். மிகையான போக்கு கசப்பாக இருக்கும். குழந்தை ஒன்றின் முன்னேற்றம் மகிழ்ச்சியைத் தரும். புதியபொருள்கள் கொள்வனவு செய்வதற்கு நன்று. பந்தபாசம் உங்களைப் பரவசப்படுத்தும். இளையோர் கசப்பர்.

### மீனம்

கண்வலை வீசி காதல்கணை தொடுப்பீர். குடும்பத்தில் சிறு பூசலின்பின் குதூகலம் நிலைக்கும். ஆயுதபீடையும் எதிரிகள் சச்சரவும் பிரிவும் உங்களை நிலைதடுமாற வைக்கும். தாய்வழியால் புத்திரருக்கு இலாபம் கிட்டும். அவ்வழியால் மகிழ்ச்சிக்குஇடமுண்டு.


## நவீன உல்லாசக் குடிசைகள்



### எல்லாம் உங்களுக்காகவே

- EVERY SATURDAY AND SUNDAY BUFFET LUNCH - Rs. 35/-
- EVERY SATURDAY DISCO - Rs. 15/- (5 p. m to 11-30p. m.)
- EVERY SATURDAY BAR BE QUE DINNER - Rs. 60/-

FAMILY WEEKEND PACKAGE - FRIDAY NIGHT TO SUN NOON

(Inclusive of all meals plus accommodation)
A/C ROOM Rs. 590/- PER COUPLE
NON A/C ROOM Rs. 500/- PER COUPLE
N. B. : 10% Service charge additional on above rates

- VAST BANQUET HALL FOR WEDDINGS and RECEPTIONS.

கலியாணம் அல்லது விருந்துபசாரம் கொண்டாட வசதியாய் அமைந்த களியாட்டு மண்டபமுண்டு.

- SPECIAL RATES FOR HONEYMOON COUPLES

புதுமண தம்பதிகளுக்கு விஷேச சலுகைகள்

Harbour View Hotel
Keerimalai Road, Kankesanturai, Sri Lanka.

ANOTHER HOTEL MANAGED BY
AITKEN SPENCE & CO LTD
Lloyds Building, Sir Baron Jayatilaka Mawatha
Colombo 1. Tel : 27861-8 547161

Telegrams : ANCHOR Kankesanturai. Telephone : 22605 Jaffna.

வடபகுதியில் அமைந்துள்ள ஒரே ஒரு பூங்கா உல்லாச பயணிகள் ஹோட்டல்

காங்கேசன்துறை

ஹாபர் வியூ ஹோட்டல்

THE ONLY GARDEN RESORT HOTEL IN THE NORTH

# பனம்பொருள் நிபுணர் சம்பந்தம் பேசுகிறார்

இங்கு சில இடங்களில் நார்ப்பெட்டிகள் (நார்கடகங்கள்) நன்றாக செய்கிறார்கள். அதற்கு அயல்நாடுகளில் மார்க்கட் இருக்கிறது. எழுவைதீவில் எழுபது எண்பது குடும்பங்கள் நார்ப்பெட்டியை வைத்தே பிழைக்கிறார்கள். உதவி அரசாங்க அதிபருடன் போய்ப்பார்த்தேன். அவர்கள் கையினாலேயே நாரைவழிப்பதினால் அதிகநேரம் பிடிக்கிறது. அதற்குமாற்றாக இந்தியாவில் இருப்பதுபோல் நாரை நான்காக ஒருதரத்தில் கிழிக்கும் வகையிலான இயந்திரத்தை அவர்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளேன். இப்போது அவர்கள் செய்யும் நார்ப்பெட்டி பெரிய பெரிய இதழ்களினாலே செய்யப்படுவதால் பார்வைக்கு அழகில்லாமல் இருக்கிறது. ஆனால் அதையே இந்த யந்திரத்தில்போட்டு ஒரே அளவில் நார் தயாரித்துப் பெட்டி தயாரிப்பார்களானால் அழகாய் இருக்கும் அயல் நாடுகளில் அதற்கு வரவேற்பும் இருக்கும்.

நார்ப் பெட்டிகளுக்கு வெளிநாட்டில் வாய்ப்புக் கிடைத்துவிடும். பிரான்ஸில் ஆப்பிள் போக்ஸ் என்று சொல்லி இந்தியாவிடமிருந்து நார்ப் பெட்டியை வாங்குகிறார்கள்.

## நார்க்கடகங்களுக்கு வெளிநாடுகளில் நல்லமதிப்பு மதிப்பு உண்டு

நான் அண்மையில் தமிழ்நாடு சென்றிருந்தபோது பிரான்ஸுக்கு அனுப்பப்படும் நார்ப்பெட்டி ஒரு (செட்டை' வாங்கி எழுவைதீவிலுள்ள பாதிரியாருக்குக் கொடுத்தனுப்பியிருக்கிறேன். அவரும் அங்குள்ள பெண்களிடம் இதனைக் காட்டியிருக்கிறார். அவர்களும் மிகவும் உற்சாகமாக ஏற்றுக்கொண்டார்களாம். ஆனால் அவர்களை எப்படி ஒரு இயக்கமாக நடத்துவதென்று கேட்டார். மண்டைதீவுமாதிரி

ஒரு கூட்டுறவுச் சங்கம் அமையுங்கள் என்று யோசனை கூறினேன். உற்பத்தி செய்கிறவர்களுக்குத் தேவையான நார் போன்றவற்றை வேறு இடங்களிலுமிருந்து வாங்கி வந்து கொடுக்கமுடியும். அவர்களும் அதிலேயே நாட்டத்தைச் செலுத்தமுடியும், டிசைன்கள் எல்லாம் நன்றாக அமைவதால் அயல்நாட்டிலும் மார்க்கட் நல்லாயிருக்கும்; வருமானமும் அதிகரிக்கும்.

### நாரினால் கட்டில் பின்னலாம்

நாரினால் வேறு பொருட்களும் செய்யலாம். கட்டில் பின்னலாம். தமிழ் நாட்டிலிருந்து ஒரு மாதிரிக் கட்டிலை வாங்கி அங்கு கொண்டுபோய்க் காட்டியிருக்கிறேன். இப்போது அவர்களும் கட்டில் பின்னப்போகிறார்கள். கட்டில் பின்ன ஆரம்பித்துவிட்டால் பிரம்புத் தேவை இருக்காது. நாரினாலேயே பின்னிக்கொள்ளலாம். இது கொஞ்சம் புதுத் தொழில். படித்த பிள்ளைகள் தான் இதனை விரும்பிச் செய்வார்கள். இதற்கும் இப்போது சி-நோர் சனசமூக நிலையத்தில் பயிற்சியளிக்கின்றேன்.

### காரியாலயக் கூடைகள்

பனைநாரினால் நாற்காலிகளும் பின்னலாம். காரியாலயங்களுக்கான கூடைகளும் பின்னலாம். இந்தியாவில் கூட்டுறவுச்சங்கம் தயாரிக்கும் இப்படியான கூடைகளைத்தான் அரசாங்கக் காரியாலயங்களில் எல்லாம் பாவிக்க வேண்டும் என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். படித்துவிட்டு வீணாகஅரட்டையடித்துக்கொண்டிருக்கும் பிள்ளைகளை இப்படியான கைத்தொழில்களைச் செய்யும்படி பழக்கினோமானால் அவர்களுக்கும் பயனுண்டு; நாட்டுக்கும் பயனுண்டு. இவைகளை வாங்குவதற்கு மார்க்கட் இல்லையென்று கொள்ளமுடியாது. அரசாங்க அதிபர் போன்றவர்களிடம் கேட்டுக்கொண்டால் நிச்சயம் வாங்கத்தான் செய்வார்கள்.

### தமிழகத்தில் முதல்வர் ஒத்துழைப்பு

தமிழ்நாட்டில் முதல்வரிடமிருந்தே ஒரு உத்தரவைப் பெற்றுக்கொண்டு விட்டோம். அரசாங்கக் காரியாலயங்களில் எல்லாம் இந்தமாதிரி கூட்டுறவுச் சங்கங்கள் தயாரிக்குப் கூடைகளைத்தான் வாங்க வேண்டும் என்று உத்தரவு போட்டார் எம். ஜி. ஆர். அப்படியான நிலையை ஏற்படுத்துவதற்கு நீங்கள் தரமான பொருட்களை தயாரிசெய்ய வேண்டும்.

### ஓலைத்தொழில்

ஓலைத்தொழிலிலும் ஏற்றுமதிசெய்யலாம் என்று யோசித்திருக்கிறேன். இந்தத்துறையில் யாழ்ப்பாணத்துப் பெண்கள் நல்ல வேலைகள் செய்திருக்கிறார்கள். 60 சத வீதம் இந்தியா மாதிரிச் செய்கிறார்கள். சிலர் விசேஷமாகக் கூடச்செய்கிறார்கள்.

ஓலைவேலையில் யாழ்ப்பாணத்துப் பெண்களுக்கு இருக்கும் திறனை இன்னும் கொஞ்சம் மாற்றிக்கொடுப்பதற்கு முயற்சி எடுத்துள்ளோம்.

### பூஞ்சணத்தைத் தவிர்க்க

மேலும் இந்த ஓலைச்சாமான்கள் மழைபெய்யுங்காலங்களில் ஒருவித மஞ்சள் நிறமாகப் பூத்துப்போய்விடுகிறது இதனைப் 'பங்கஸ் அட்டாக்' என்று சொல்வார்கள் இதற்கு ஒரு மாற்றுவழியிருக்கிறது. திக்கத்தில் இதற்கென்று ஒரு அறை ஏற்பாடுசெய்து தரும்படி பனை அபிவிருத்தி சபையிடம் கேட்டிருக்கிறேன் அங்கே அதைச்செய்து காண்பித்தபிறகு எல்லோருமே அதைப்பின்பற்றக்கூடியதாக இருக்கும். அது ஒரு மிகவும் இலேசானமுறைதான். வீட்டிலேயே இந்தச் சாமான்களை அடுக்கி அதன்கீழே நான்கூறும் ரசாயனத்தைப்போட்டு விட்டார்களானால் அந்த மஞ்சள் பூத்துப்போகும் தன்மையிலிருந்து பொருட்களைக்காத்துக் கொள்ள முடியும்.

### ஓலையில் பூவேலை

ஓலையில் பூவேலைகளும் நன்றாகச் செய்கிறார்கள் இந்தப் பூக்களைச் செய்வதற்கு ஓலையைக் கையினால்தான் வெட்டுகிறார்கள் இந்தியாவில் இப்படியான வேலைகளுக்கென்று ஒரு மெஷின் செய்து கொடுத்திருக்கிறோம்.

அதில் ஓலையைக் கொடுத்துவிட்டால் நாம் விரும்பும் அளவில் பூ இதழ்கள் விழுந்து கொண்டேயிருக்கும். அதைப் போன்ற விஞ்ஞான முறையில் இவைகளைச் செய்யப் பனை அபிவிருத்திசபை அல்லது ஏற்றுமதிச்சபை கருவிகளைப்பெற்றுக் கொடுப்பார்களானால் அதில் ஈடுபட்டுள்ளவர்கள் மேலும் பயனடைவார்கள். இதழ்களைச் சுருக்குவதற்கான கருவி மற்றும் நல்ல வர்ணங்கள் எல்லாம்கூட பெற்றுக் கொடுக்கவிருக்கிறேன். இங்கு சில பிள்ளைகள் நல்ல கலர் வேலைகள் செய்கிறார்கள். ஆனால் வர்ணங்கள் கிடைப்பதில் கஷ்டமிருந்தால், பலபேர் இதில் ஈடுபடும்போது வர்ணங்களை இறக்குமதியே செய்து கொடுக்கமுடியும்.

### பன்னாடைப் பூ வேலை

பன்னாடையில் பூக்கட்டு

(16ம் பக்கம் பார்க்க)

கேட்டு எழுதியவர் பேனா 5

உ

முருகா

# வி. ஜே. எஸ். (V. J. S.) எக்ஸ்பிறஸ்

ஸ்தாபனத்தார்

யாழ் — கொழும்பு பிரயாணிகள் எமக்கு இதுவரை நல்கிய ஆதரவிற்கு எமது அன்பார்ந்த நன்றிகள்

உங்கள் தேவையை, வசதியை என்றும் முதலிடம் வழங்கி சேவையாற்றும் எம்மை நாடுங்கள். நவீன உறங்கலிருக்கை வசதியும், புதிய திரைப்படங்களை பிரயாணம் செய்யும் பொழுதே பார்த்து மகிழக்கூடிய வசதியும், ஒருங்கே பெற்று போக்குவரத்துத்துறையில் முன்னோடிகளாக விளங்கும் எமது ஸ்தாபனத்தை நாடுங்கள், நாடிவாருங்கள்.

ஓர் நற்செய்தி

உங்கள் தேவையே எங்கள் சேவையென போக்குவரத்துத்துறையில் திறம்படச் செயலாற்றிவரும் எமது ஸ்தாபனத்தார் 22-12-83 தொடக்கம் மறுஅறிவித்தல்வரை பிரயாணம் செய்யும் அனைவருக்கும் தரத்திற் சிறந்த பொக்கற் தினசரி குறிப்பு அன்பளிப்பாக வழங்குகின்றோம் என்பதை மகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

ஆசனங்கள் பதிவுசெய்யும் இடங்கள்

கொழும்பு

1. அஜந்தா ஹோட்டல் லிமிட்டெட்
   கோட்டை, கொழும்பு.
   தொலைபேசி இல. 28089
2. T. S. R. BOOKING CENTRE
   DANIEL BOOKS SHOP
   287, Galle Road, Wellawatta. Tele: 86694

யாழ்ப்பாணம்

1. S. சரவணபவான்
   113, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
   தொலைபேசி இல. 24204, 23615, 24433
2. ஸ்ரீமகள் றேடேர்ஸ்
   158, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
   தொலைபேசி இல. 23572

புறப்படும் இடங்கள் - நேரங்கள்:

யாழ்ப்பாணம்:
நல்லூர் கைலாசபிள்ளையார் கோவில் முன்பாக இரவு 6-30 மணி
நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்பாக இரவு 6-45 மணி
C. S. K. மில் முன்பாக இரவு 7-30 மணி

கொழும்பு:
மூர் வீதி, வெள்ளவத்தை முன்பாக இரவு 7-00மணிக்கும் கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக இரவு 8-00 மணிக்கும் புறப்படும்.

கொழும்பிலிருந்து புறப்பட்டு வரும் பஸ் முறையே நல்லூர் கைலாச பிள்ளையார், நல்லூர் கந்தசுவாமி கோவில்களின் முன் தரித்துச் செல்வதற்கேற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

முக்கிய குறிப்பு: ஒவ்வொரு பிரயாணத்திற்கும் இடையில் 12 மணிநேர ஓய்வின் பின்பே எமது வாகனங்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன.
உலகில் முன்னணி வகிக்கும் யப்பானில் தயாரிக்கப்பட்டு அவர்களாலேயே T V. பொருத்தப்பட்ட புத்தம் புதிய ISUZU பஸ்களே சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன.

உங்கள் தேவையே எங்கள் சேவை.

# பாலஸ்தீன விடுதலைக்கு குழிபறிப்பது யார்?

பாலஸ்தீனவிடுதலை இயக்கத்துக்குப் பத்தொன்பது ஆண்டுகள் நிறைவெய்து கின்ற தருணத்தில், இவ்வியக்கம் பல்வேறு நெருக்கடிகளுக்கும் முகம்கொடுத்த துர்ப்பாக்கிய நிலையில் உள்ளது.

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தில் ஏற்பட்டுள்ள விரிசல்களை நீக்குவதற்கு கரிசனையுள்ள பல தரப்புகள் முயன்று வருகின்ற அதேவேளையில், இவ்வியக்கத்துக்கு இறுதி 'மரணஅடி'யைக் கொடுப்பதற்கான முஸ்தீபுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதையும் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. பாலஸ்தீன அரபுக்களை ஒருஇனம் என்றளவில் இல்லாதொழிப்பதற்கு மேற்கொள்ளப்படுவதாக முன்சொன்ன முனைப்புகளில் ஒன்றாக அண்மையில் அமெரிக்க - இஸ்ரேலிய கூட்டு இராணுவ, அரசியல் குழுவை அமைப்பது தொடர்பாக றேகனும், ஷமீரும் செய்துகொண்ட உடன்படிக்கையைக் குறிப்பிடலாம்.


## றேகன் – ஷமீர் உடன்படிக்கை

இவ்வுடன்படிக்கை பற்றி அமெரிக்காவின் பிரபல பத்திரிகை 'வால் ஸ்ரீட் ஜேர்னல்' எழுதுகையில், ''அரபு ஒத்துழைப்பினைப் பெறுவதற்காக இஸ்ரேலின் அதிசூரத்தன இலக்குகளிலிருந்து அமெரிக்காவை விடுவித்துக்கொள்ளும்விதத்தில் அண்மைக் காலங்களில் வாஷிங்டன் பின்பற்றி வந்த கொள்கையில் இருந்து ஜனாதிபதி றேகன் தடம்புரண்டுள்ளார்'' எனக் குறிப்பிடுகின்றது.

இஸ்ரேலுடன் அமெரிக்கா பேணுகின்ற உறவுகளினால் ஏற்படக்கூடிய எதிர்மறை விளைவுகளைப்பற்றி அமெரிக்கா கவலைப்படக்கூடாதென்றும், இஸ்ரேலானது ஒளித்துவைக்கப்படுமளவுக்கு' அமெரிக்காவின் 'கள்ளக் காதலி' இல்லையென்றும் இஸ்ரேலிய பிரதமரின் அரசியல் ஆலோசகர் பென் அஹ்றோன அண்மையில் கூறிய கருத்துக்கு வாஷிங்டன் வளைந்து கொடுத்திருப்பதையே இவ் உடன்படிக்கை காட்டுகிறது எனவும் 'வால் ஸ்ரீட் ஜேர்னல்' மேலும் குறிப்பிட்டுள்ளது.

## ஐ. நா. சபையில் கண்டனம்

ஐ. நா. பொதுச்சபையின் 38வது தொடர்கூட்டத்தில் பெரும்பான்மை நாடுகளினால் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் கைப்பற்றப்பட்ட பாலஸ்தீனிய, அரபு பிரதேசங்களில் இஸ்ரேல் மேற்கொண்டு வரும் அத்துமீறல்களையும், அட்டூழியங்களையும் வன்மையாகக் கண்டித்துள்ளது. 101 நாடுகள் ஆதரவளித்த மேற்படி தீர்மானமானது பாலஸ்தீனிய மக்களுக்கு அவர்களது சட்டரீதியான, மீறவொண்ணா உரிமைகள் வழங்கப்படாத பட்சத்தில் மத்தியகிழக்கில் ஒரு நீதியானதும் நிலையானதுமான அமைதியை ஏற்படுத்த முடியாது என்றும் வலியுறுத்துகிறது.




## கூட்டு இராணுவ உடன்படிக்கை


தற்போது பாலஸ்தீனிய விடுதலைஇயக்க அணிகளில் ஏற்பட்டிருக்கக்கூடிய கருத்து முரண்பாடுகளும் விரிசல்களும் தமது 'கூட்டுஇராணுவ, அரசியல் உடன்படிக்கையை' மத்தியகிழக்கில் சுலபமாக அமுல்படுத்த துணைசெய்யும் என வாஷிங்டனும் டெல் அவிவ்வும் நம்புகின்றன. ஆனால், பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் அணிகளைப் பிளவுபடுத்தி, 3,000,000 மக்களின் முதுகுகளின் பின்னால் பாலஸ்தீனியப் பிரச்னைக்கு ஒரு தலைப்பட்சமான தீர்வொன்றினைக் காணுவது அசாத்தியம். தமது உரிமைகளையும், சுதந்திரத்தையும் கட்டுப்படுத்துகின்றவிதத்தில் ஏகாதிபத்தியத்துடன் உடன்பாடுசெய்துகொண்ட தரப்புக்களை அவற்றின் சொந்தமக்களே தூக்கி எறிந்துள்ளார்கள் என்பதற்கு வரலாற்றில் பல உதாரணங்கள் உண்டு.

## நீதியான பெறுபேறு

தற்போதுள்ள நெருக்கடியிலிருந்து புதுப்பலத்துடன் பாலஸ்தீன விடுதலை இயக்கம் மீண்டும் வீச்சுபெறும் என்பதும் நிச்சயம். ஏனெனில், சொந்த மண்ணிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட மக்களுக்கு அவர்களின் தாயகத்தினை மீட்டுக்கொடுக்கும் புனிதப் போரில் ஈடுபட்டுள்ள பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தின் பின்னே உலகின் பெரும்பான்மையான நாடுகள் நிற்கின்றன.

பாலஸ்தீன விடுதலைப் போராளிகளின் போராட்டம் நீண்ட பயணமாக இருந்தாலும் இதனால் ஒரு நீதியான பெறுபேறு கிட்டுவது தர்க்கரீதியில் தவிர்க்கமுடியாதது.

புதிய லக்ஸ்பிறே 500




100 கிராம் மேலதிகம்.

500 கிராமிற்கான விலையோ 26/00 ம் மட்டுமே. செறிவும், செழுமையும் மிகுந்தவாய்ப்பாடு புதிய லக்ஸ்பிறே (26% பாற் கொழுப்பு நிறைந்தது)

★ ஈரலிப்பு, துர்நாற்றம், பக்ரிறியாத்தாக்கம் என்வற்றைத்தடை செய்யத்தக்க முப்படைகளான பையில் அடைக்கப்பட்டு வெளிவருகிறது.

★ நைதரசன் வாயுவுடன் சேர்ந்து அடைககப்படுவதால் நீண்ட காலச் சேமிப்பிற்கு உகந்தது,

தீவு பூராவும் தாராளமாகக் கிடைக்கிறது.

எடை போட்டுப் பார்க்க சில உண்மைகள்.

சந்தைப்படுத்துவோர்
லங்கா மில்க் ஃபூட்ஸ் (சீ. டப்ளியூ. ஈ) லிமிட்டெட்.
வெலிசர, ருகம, இலங்கை.

ZENITH

கடைசிவாரம்
ராஜா (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00 9-00
சிவாஜி - சௌகார்
பாபு (புதிய பிரதி)

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30 6-00,
கமல்-ஸ்ரீதேவி
சில்க் சுமிதா
மூன்றாம் பிறை
(வெள்ளிவிழா சித்திரம்)

வின்ஸர் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
2வது வெற்றி மாதர்மாதம்!
சிவகுமார் - ராதா
சிவச்சந்திரன் - அருணா
நடித்த
ஆனந்தராகம்
கடற்கரைக் கிராமத்தில் சிட்டாகப் பறந்து வானம் பாடியாய் - ஆனந்தராகமாய் சுருதியை மீட்டிவரும் காதல் ஜோடிகளின் கண் கவர் வண்ண ஓவியம். ஈழத்திரை வானிலே இசையின் தேன் வெள்ளமாய் பெருக்கெடுத்து அநேகரின் இதயத்தைக் கவர்ந்த இசை ஓவியம்.

சாந்தி (யாழ். நகர்)
10 30, 2-30, 6-30
20—23-1-84
முத்துராமன், லக்ஷ்மி
சுருளி
நங்கூரம்
புதிய வண்ணப்பிரதி
இத்துடன் பல ஆண்டுகட்கு முன்னர் திரையிட்ட மிகப்பழைய படத்துணுக்குகள் திரையிடப்படுகின்றன.

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி-சௌகார் ஜானகி
பட்டாக்கத்தி
பைரவன்
23-1-84 முதல்
செந்தாமரை

லிடோ (யாழ்நகர்)
தினசரி 3 காட்சிகள்
WHO FINDS A FRIEND FINDS A TREASURE
(Scope Color)

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00, 9-00
முத்துராமன் - கவிதா
தேங்காய்சீனிவாசன்
காற்றினிலே
வரும் கீதம்

மனோகரா (யாழ். நகர்)
Daily 10-30 a.m. 2-15, 4-45, 7-00 p.m. 9-30
25-1-84 வரை மட்டும்
Alexander Stewar
in
Intimate Moments
The Most Intimate Fantasies and Desires of Men and Women
[Strictly for Adults]
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்
(Color)
எக்காரணம் கொண்டும் நீடிக்கப்படமாட்டாது

## யாழ்ப்பாணத்தில்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு ஏக்கர் நிலம் மட்டுமே உள்ளது. பிரதேச விவசாய அலுவலராக நான் இருந்த போது ஆராய்ச்சி நிலையத்தைப் பெருப்பிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தும் அவை நிறைவேற்றப் படாததுடன் இப்பொழுது இருக்கும் ஆராய்ச்சி நிலையத்தின் எதிர் காலமும் கேள்விக்குறியாகவே இருக்கிறது.

வெஸ்லி
(மாவிட்டபுரம்)
தினசரி 2-30, 6-00
என். டி. ராமராவ்
மாஜா பஜார்

தடை செய்யப்படலாம்
ஹரன் (யாழ். நகர்)
10-30 - 2 00 - 4-45 - 7-15
இப்படம் தயாரிக்கப்பட்ட முறை நீங்களே ஒரு யுத்தத்தில் கலந்து கொள்ளும் பிரமையை ஏற்படுத்துவதால் எந்நேரமும் தடை செய்யப்படலாம். இச் சந்தர்ப்பத்தை தவற விட்டுபின் வருந்தாதீர்கள்.
Kevin Dobson - Gregory Walcott in
THE MIDWAY BATTLE

4-வது சப்தஸ்வர வாரம்
றீகல் (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-15,



மோகன்... பூர்ணிமா
ஜெயராம்...
பயணங்கள்
முடிவதில்லை
(ஈஸ்மென் கலர்)

# வடக்கு மல்லிகைக்கு

# தெற்கின் நன்றி

இம்மாதம் 8ம் திகதி ஞாயிறுக்கிழமை ''சிங்கள நறுமணம் வீசும் வடக்கு மல்லிகை'' என்ற தலைப்பின் கீழ் 'திவயின' பத்திரிகையில் வெளிவந்த கட்டுரையை வாசித்தபிறகு இதனை எழுதி அனுப்ப எண்ணினேன். 'திவயின' நிருபரால் தமிழ் இலக்கியக்காரரிடம் கேட்டிருந்த கேள்விக்கு அவர் தந்த பதில் மதிப்புமிக்க, காலத்திற்குப் பொருத்தமான பதிலொன்றாகும்.

இதுபோன்ற ஒரு கால கட்டத்தில் வடக்கில் வாழ்பவர்களுக்கு மாத்திரமன்றி எல்லாத் தமிழ் மக்களுக்கும் சிங்கள இலக்கியத்தின் நறுமணத்தை அறிமுகப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருக்கும் அவ்விலக்கியக்காரரின் சேவை உண்மையில் சிறந்தது; சிறப்பானது. ஆனால் அவரிடம்

ஊவாபரணகம
குமார வனசிங்க

தமிழில்:
கே. ஜி. அமரதாச

கேட்கப்பட்டிருந்த ஒரு கேள்விக்கு மறுமொழியாக அவர் கேட்டிருக்கும் இன்னுமொரு கேள்வியின் முன்னிலையில் எமது சிங்கள இலக்கியக்காரர்கள் மௌனமடைந்திருக்கிறார்கள்.

இலக்கியமாவது இசை போன்ற, எல்லா உலகத்திற்கும் பொதுவான ஒரு சாதனமாகும். பிரச்சினையாக இருப்பது மொழிகளைப் புரிந்து கொள்வதில் ஏற்படும் கஷ்டங்களாகும். இதற்காகச் செய்யவேண்டியது வெவ்வேறு மொழிகளில் வெளிவரும் ஆக்கங்களைச் சுயமொழியில் பெயர்த்து வாசகர்கள் சுவைக்க ஏற்பாடு செய்தலாகும்.

இன்று சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்குமிடையில் நல்லுறவு முன்பிருக்காத அளவில் தூரமாகியிருப்பது இரகசியமில்லை. தேசிய ஒற்றுமையின் முக்கியத்துவத்தைஇன்று போலப் புரிந்துகொண்ட கால கட்டமும் இல்லை.

தேசிய ஒற்றுமையை உண்டு பண்ணி நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு எதிராகவரும் அச்சுறுத்தல்களை நீக்க அரசியல் மட்டத்தில் வழிகளைத் தேடிக்கொண்டிருக்கும் இக்காலத்தில் இலக்கியகாரர்கள் என்ற முறையில் நீங்கள் ஆற்றக்கூடிய சேவையொன்று இத்தமிழ் இலக்கியகாரரால் சுட்டிக்காட்டப்பட்டிருக்கும் போது சிங்கள இலக்கியகாரர்களான நீங்கள் எல்லோரும் முன்வந்து தேசிய ஒற்றுமையைப் பாதுகாக்க உங்கள் வலதுகையிலுள்ள பேனாவைப் பயன்படுத்திச் செய்யக்கூடியவற்றை உடனடியாகச் செய்யும்படி வேண்டுகின்றேன்.

இறுதியாக அதை இலக்கியகாரர்களான சிங்கள வாசகர்களுக்கு அறிமுகப்படுத்த முன்வந்த 'திவயின' செய்திப் பத்திரிகைக்கும் அக்கட்டுரையைச் சமர்ப்பித்த எழுத்தாளருக்கும் நன்றி செலுத்தித் துணிகரமான முயற்சி மற்றத் தேசிய பத்திரிகைகளுக்கும் ஒரு முன்மாதிரியாக இருக்க வேண்டுமென நான் பிரார்த்திக்கின்றேன்.

ஊர்காவற்றுறை
ப. நோ. கூ. சங்கம்

## கேள்விப் பத்திரம்

மூவாயிரத்தி எழுநூறு (3700) வெற்றுச் சாக்குகளுக்கு கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது. ரூ. 2/50 செலுத்தி சங்கத்தில் இருந்து பெறப்பட்ட பத்திரத்தில் ''பொது முகாமையாளர், ப.நோ.கூ. சங்கம், ஊர்காவற்றுறை' என்னும் விலாசத்திற்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ கேள்விப்பத்திரங்கள் 26-1-84ந் திகதிக்கு முன் அனுப்பிவைக்க வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் 25-1-84 ந் திகதி பகல் 12-00 மணிவரை விநியோகிக்கப்படும். விண்ணப்பதாரர் ரூ. 750/-வைப்புப்பணம் செலுத்தி இருத்தல் வேண்டும்.

இசுசு (Isuzu) லொறியின் பாவித்த உப உறுப்புகள் விற்பனைக்கு உண்டு. சங்கவேலை நேரத்தில் பார்வையிட்டு விண்ணப்பிக்கவும்.

பதில்
பொது முகாமையாளர்
17-1-84
ஊர்காவற்றுறை. 240

காணி விற்பனைக்கு
மருதனமடம் — K. K. S. வீதியில்
இராமநாதன் கல்லூரிக்கு முன்பாக
4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:
குறூஸ் 13, மத்திய சந்தை, சுன்னாகம்.
விபரங்களுக்கு: போன்: COLOMBO 34249. (241)

பாடசாலை மாணவர்களுக்குப்
பிரத்தியேக போக்குவரத்துச்சேவை
(மினி வான்)
கோப்பாய்
இருபாலை
கல்வியங்காடு
திருநெல்வேலி
நல்லூர்
இருந்து
சென். ஜோன்ஸ் கல்லூரி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, பரி. சம்பத்தரிசியார் கல்லூரி (சென். பற்றிக்ஸ் கல்லூரி), சென் யோன் பொஸ்கோ, கொன்வென்ற் பாடசாலை, வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். மத்தியகல்லூரி
மாணவர்களின் சௌகரியத்திற்கேற்ப
போக்குவரத்து பிரத்தியேகமாக
அளிக்கிறோம்.
ஆரம்பம்: 1-2-84
மாணவர் போக்குவரத்துச்சேவை
மே/பா இ. கமலநாதன்
''திருப்பதி'', ஆடியபாத வீதி, திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 24404
272

## 31-வது நாள் நினைவஞ்சலி

திருமதி நாகேஸ்வரி துரைராஜா



மலர்வு:
1942-9-12

உதிர்வு:
1983-12-24

அன்னையே! எம் அன்புத்தெய்வமே! எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே! நினையாப்பிரகாரம் எம்மை விட்டுப்பிரிந்து ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு, நீங்கள் மீளாத்துயில் கொண்டுவிட்டீர்களே! அம்மா! அம்மா என அழைத்தால் அன்போடு அரவணைப்பீர்களே! இனி யார் வந்து ஆறுதல் சொல்வார்? அம்மாவின் இறுதிக்கிரியைகளில் நேரில் கலந்துகொண்டு ஆறுதல் அளித்தவர்களுக்கும், அனுதாபச்செய்திகள் அனுப்பியோருக்கும், கலந்துகொள்ளமுடியாது வருந்தியோருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத்தெரிவிப்பதோடு, அந்தியேட்டிக்கிரியைகளைத் தொடர்ந்து 23-1-84-ல் நடைபெறும் வீட்டுக்கிரியைகளில் கலந்து, எம்மை விட்டுப்பிரிந்து இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத்தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கும்.

K. துரைராஜா
[துரை அன் கோ உரிமையாளர்]
(அன்புக் கணவன்)
T. தயாநந்தி
(அருமை மகள்)

232, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 294

கடவுளின் வார்த்தைகளை
காதால் கேட்கும் வாய்ப்பு!
புதிய ஏற்பாடு
முழுவதையும் இப்போது
கெசற்றுகளில் கேட்கலாம்!
கிடைக்குமிடம்:
சத்தியம் புத்தகசாலை,
THE JAFFNA PAINT HOUSE,
21, மணிக்கூட்டு கோபுர வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24238,
[எம்மிடம் சத்தியவசனம் பாடல்கள் அடங்கிய கெசற்றுகளும், BACK TO THE BIBLE) வெளியீடுகளும், சகலவித தமிழ், ஆங்கில கிறிஸ்தவ கெசற்றுகளும், புத்தகங்களும் விற்பனைக்கு உண்டு.
(152)

## யாழ். புற்று....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் நினைவாக 12 லட்சம் ரூபா அன்பளிப்பாக இதற்கு வழங்கப்பட்டது.

அரசாங்கம் பல லட்சம் கணக்கான பெறுமதிமிக்க 'கோபால் யூனிட்' ஒன்றை வழங்கியிருக்கிறது.

தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் அமைக்கப்பட்ட இந்த புற்றுநோய் சிகிச்சைப்பிரிவு நிலையத்தில் கடமையாற்ற இங்கு வைத்திய நிபுணர் இல்லாததால் வெளிநாட்டிலிருந்து ஒரு வைத்திய நிபுணரை அழைத்து அமர்த்துவதற்கு அரசாங்கம் தமக்கு அனுமதியளித்திருப்பதாக சம்பந்தப்பட்ட வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இச்சிகிச்சைப்பிரிவு நிலையம் திறந்துவைக்கப்பட்டாலும் மகரகமை ஆஸ்பத்திரியிலிருந்து இருவாரங்களுக்கு ஒருதடவை வைத்திய நிபுணர் ஒருவர் வருகை தந்து நோயாளருக்கு சிகிச்சையளிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிகிறது.

இச்சிகிச்சை நிலையத்துக்கு ''ஜி. ஜி. பொன்னம்பலம் புற்றுநோய்சிகிச்சைநிலையம்'' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இதனை அரசாங்கமும் அங்கீகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

புற்றுநோய் சிகிச்சைப்பிரிவு நிலையத்தை சுகாதார அமைச்சர் திறந்து வைப்பதற்குமுன்னர் யாழ். ஆஸ்பத்திரியில் அமைக்கப்பட்டுள்ள 'அதிதீவிர சிகிச்சை' நிலையத்தை அவர் திறந்துவைக்கவுள்ளார்.


## மரண அறிவித்தல்

### முத்துக்கிருஷ்ணர் நடராசா

சரம்பனூரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொழும்பு புதுச்செட்டித் தெருவில் வசித்தவரும் இளைப்பாறிய போட் கமிஷன் உத்தியோகத்தரும், புதுச்செட்டித்தெரு பொன்னம்பலம் அன் கம்பனி உரிமையாளருமான முத்துக்கிருஷ்ணர் நடராசா காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற அன்னம்மாவின் அன்புக் கணவரும் சந்திரலீலா, சத்தியலீலா (U.K.) ஆகியோரின் அன்புத் தந்தையும், சத்தியசீலன் (பொறியியலாளர்-மின்சாரசபை, கொழும்பு) வைத்திய கலாநிதி ஆறுமுகராசா (U. K.) ஆகியோரின் மாமனாரும் அர்ச்சுனா, தாரணி, பார்த்திபன் ஆகியோரின் அன்புப் பாட்டனுமாவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (22-1-84) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் அரசடி வீதி 75ம் இலக்க 'அன்னவாசா' இல்லத்தில் நடைபெறும்.

292

## மரண அறிவித்தல்



### தம்பையா இராசையா


(இளைப்பாறிய நிர்வாகசேவை உத்தியோகத்தர் மலேசியா)

**தோற்றம்: 1903 மறைவு: 15-1-1984**

உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த தம்பையா இராசையா அவர்கள் மலேசியாவில் 15-1-1984 அன்று காலமாகி அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18-1-1984 அன்று மலேசியா கோலாலம்பூரில் நடைபெற்றது. அன்னார் அன்னபூரணத்தின் அன்புக் கணவரும், மகாலிங்கம் (நிறைவேற்றுப் பொறியியலாளர் பெருந்தெருக்கள் திணைக்களம் - கொழும்பு) சிவலிங்கம் (Operation Manager Range II Westren Zone Banke of Ceylon), Dr. இரத்தினலிங்கம் (விஞ்ஞானப் பகுதி பீடாதிபதி-பினாங் பல்கலைக்கழகம்), புஸ்பலிங்கம் (கணக்காளர் U. K), இராசபூரணம், இராஜேஸ்வரி, இராஜதேவி, இராஜமலர் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பொன்னையா, பொன்னுத்துரை, பாலசிங்கம், திருபதி நேசம்மா சுந்தரம், திருமதி R. குமாரசாமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற செல்வரத்தினம், இ. சங்கரப்பிள்ளை (ஆசிரியர் நைஜீரியா), R. யோகநாதன் (மேலதிக அரசாங்க அதிபர் - மட்டக்களப்பு), T. சிவபாக்கியநாதன் (U.K.) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். இத்தகவலை உற்றார் உறவினர் நண்பர்கள் யாவரும் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

இரா. சிவலிங்கம்
அரசடி ரேட் யாழ்ப்பாணம்.

[318]




## கார் விபத்தில் பலி!

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை ஆறுகால் மடத்தடியில் 70 வயது வயோதிபர் ஒருவர் நேற்று கார்விபத்தில் பலியானார்.

யாழ். பதில் நீதவான் எஸ். அமிர்தலிங்கம்மரணவிசாரணை நடத்தினார்.

இறந்தவரான வண்ணார் பண்ணை மேற்கைச் சேர்ந்த கனகசபை கந்தையா காரினால் மோதப்பட்டு, யாழ். ஆஸ்பத்திரியில் நேற்றுமுன்தினம் அனுமதிக்கப்பட்டு நேற்றுக்காலை மரணமானார் பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்ட பதில் நீதவான், விசாரணையைஇன்று வரை ஒத்திவைத்தார். (க)

## ஞானப்பிரகாசர்---

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிகமான நதிகளினதும், மலைகளினதும், இடங்களினதும் பெயர்களை ஆராய்ந்த பின்னர், ஜெர்மன் அறிஞர் கிளெமென்ட் ஸ்கோனர், இப்பெயர்கள் யாவும் திராவிட மூலத்தையே கொண்டவை என்ற முடிவுக்கு வந்தார்.

ஆராய்ச்சியினதும், அதன் புலமை வழிபட்ட முடிவுகளினதும் இருக்கை ஆபத்துக்குட்பட்டது. இவற்றுக்கு அடுத்து வரும் தலைமையினதும் புலமையினலும்புதிய தொல்பொருள் ஆய்வு முடிவுகளதும். வேறு பல தரவுகளாலும் திருத்தலுக்கும் அமுக்கலுக்கும் உடன்படுகிற சுபாவம் எப்போதும் உண்டு. எனவே எடுக்கப்பட்ட முடிவுகளினது ஸ்தூலமான உண்மையானது மட்டுமே அறிஞர்களது தராதம்மியத்தை நிர்ணயிப்பதற்கான ஒரே அடிப்படையகாது.

தனது ஆய்வு முடிவுகள் முழுவதையும் வெளிப்படுத்துவதற்கென ஞானப்பிரகாச சுவாமிகள் மேற்கொண்ட அகராதியியற்றற்பணி முற்றுப்பெறவில்லை. எனவே இதுபற்றிய எந்தவொரு இறுதித் தீர்வும் இப்போது சாத்தியமில்லை.

### ஆதீனங்களின் ஆசியுடன்

சுவாமி ஞானப்பிரகாசர் மறைவு பற்றி விசாரித்தவர்களில் பலர் அவரது மதநம்பிக்கைகளைப் பகிர்ந்துகொள்ளாதவர்கள். அவரது அறிவுத்துறை முயற்சிகளை ரோமன்கத்தோலிக்க அணிக்கும் அப்பாற்பட்ட பலரது பாராட்டைச் சம்பாதித்துத் தந்தது. சைவத்தைமட்டும்வளர்க்காது தமிழ் கல்வியின் காவலர்களாகவுமிருந்த தென்னிந்திய சைவ ஆதீனங்கள் ஞானப்பிரகாச சுவாமிகளின் ஆராய்ச்சியில் மிக்க ஆர்வங்காட்டியதுடன் அவருக்கு நிதியுதவியையும் வழங்கினன. குறிப்பாக அவரது 'தமிழ் தழைத்த கதை' நூலுருப் பெறுவதற்கானசெலவினத்தின் பெரும்பங்கைத் திருப்பனந்தாள் ஆதீனம் வழங்கியது ஆனால், புலமைத்துறைச் சிறப்புகளுக்கு அப்பாற்பட்ட காரணங்களுக்காகக்கூடக் கௌரவப்பட்டங்களை வழங்கிய இலங்கைப் பல்கலைக்கழகம் ஞானப்பிரகாச சுவாமிகளைக் கௌரவித்துத் தனக்கும் ஒரு கௌரவத்தைத் தேடிக்கொள்ளத் தவறியமை விசனிக்கத்தக்கது

(ஹன்டி. பேரின்பநாயகம் நினைவு நூலிலிருந்து)

## புறக்கோட்டை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முயன்ற தரகரான சுந்தரம் பிள்ளை என்பவரை அவர்கள் குத்தியதாகவும், அவர்இறந்துவிட்டதாகவும் விசாரணைகளிலிருந்து தெரியவருகிறது.

மற்றிரு கடைகளிலும் 1 லட்சத்து 20 ஆயிரம் கப்பம் பெறப்பட்டுள்ளது.

கொழும்பு மேலதிக மாஜிஸ்திரேட் திரு. குமார் எக்கரட்ண ஸ்தலத்துக்குச் சென்று விசாரணை செய்தார்.

## நார்க்கடகம்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வது உலக மார்க்கட்டில் நன்றாக விற்கும் என்று நம்புகிறேன். இம்மாதிரிப் பொருட்களில் மட்டும் ஒரு பத்துப் பொருட்களைத் தெரிவுசெய்திருக்கிறேன். பனம்பொருள் அபிவிருத்திசபை இதில் யாழ்ப்பாணத்தில் பல இடங்களிலும் நல்ல பயிற்சி கொடுத்திருக்கிறது. அப்படிச் செய்யப்படும் பொருட்களில் வெளிநாட்டு மார்க்கட்டைப் பிடிக்கக்கூடிய பொருட்கள் ஒரு பத்தைத் தெரிவுசெய்திருக்கிறேன்.

இப்படித் தயாரிக்கப்பட்டுள்ள சுமார் 20 பொருட்களில் வர்ணப்படங்கள் வெளிநாட்டு ஏற்றுமதியாளர்களுக்கு அளிக்கப்பட்டு அவர்கள் மூலம் ஏற்றுமதிக்கு 'ஆர்டர்' பெறப்படும். இவைகளைத்தரப்படுத்துவது ஒரு முக்கிய அம்சம்.

[வளரும்]

## கரவெட்டி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

டத்தினால் பயனில்லை. அரசுக்கு எதிராக ஆயுதமேந்தி போராடவேண்டும்' என்று கூறும் துண்டுப்பிரசுரங்களை கரவெட்டி தபால்நிலையப் பகுதியில் காலையில் விநியோகித்துக்கொண்டிருந்த இளைஞரைப் பொலிசார் கைது செய்ய முயன்றபோது அவ்இளைஞர் சைக்கிளில் குறுக்குப்பாதையால் தப்பி ஓடினார். அவரைக் கலைத்துச் சென்றபோது பொலிசாருக்கு குண்டை வீசினார். அப்போது பொலிசார் சுட்டதில் இளைஞர் காயமடைந்து பின்னர் இறந்தார்.

20-ம் திகதி பென்ஷன் வழங்கப்படும் தினமானதால், பயங்கரவாதிகள் வரலாம் என்பதால் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. அந்தச் சமயத்தில் பொலிஸார் இவ்விளைஞரை சந்தேகித்தனர்.

இளைஞரின் பையிலிருந்து இரு கைக்குண்டும், தமிழீழ விடுதலைப் புலிகளின் 39 துண்டுப் பிரசுரங்களும் இருந்தன

ராஜாங்க அமைச்சு நேற்று கரவெட்டியில் இறந்த இளைஞரின் மரணம் தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்ட தகவலை தெரிவித்துள்ளது:

## கிளிநொச்சியில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மரங்களைக் கொண்ட இக்காணி திருத்தம் செய்து கட்டிடம் அமைக்க பல வருடங்கள் எடுக்கும் என பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. (மா)

## ராஜ்குமார் வீட்டுக்கு பலத்த பாதுகாப்பு

(சென்னை)

சென்னையிலுள்ள கன்னட நடிகர் ராஜ்குமாரின் வீட்டுக்கு பலத்த பாதுகாப்பு தமிழ்நாடு அரசினால்வழங்கப்பட்டுள்ளது.

ராஜ்குமார் வீட்டுக்கு முன்பாக மறியல் போராட்டம் நடத்துவதற்கு ஜனதா கட்சியினர் கோரியிருந்த அனுமதி தமிழ்நாடு அரசினால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

கர்னாடகத்தில் பிறமொழிக்காரர்களுக்கு அரசு வழங்கியிருந்த சலுகைகளுக்காக, அம்மாநிலத்தில் பலத்த ஆர்ப்பாட்டங்களை ராஜ்குமார் ஆதரவாளர்களே நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது (கு)

## டாக்டரின் பொருட்கள் மாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் டாக்டர் ஒருவரின் முக்கிய பொருட்கள் கொண்ட பாக் ஒன்று திருட்டுப்போய்விட்டதாக பொலிசில் முறைப்பாடு செய்துள்ளார்.

சனநெருக்கடி மிக்க கடையொன்றில் பொருட்களை வாங்கிக் கொண்டிருந்தபோது முக்கிய தஸ்தாவேஜுகளுடன் ஸ்ரெலஸ்கோப், காசோலைப் புத்தகம் என்பவை அடங்கிய சிறிய 'பாக்' ஒன்று திருட்டுப் போய்விட்டதாக டாக்டர் எஸ். விஸ்வேஸ்வரஐயர் யாழ். பொலிசில் முறைப்பாடு செய்துள்ளார். [கு]

## வெங்காயப் பயிர் பாதிப்பு

(புத்தூர்)

புத்தூர் பகுதயில் இவ்வருடம் வெங்காயம் மழையினால் பாதிப்படைந்துள்ளது. புத்தூர் கிழக்கு, அச்சுவேலி, ஆவரங்கால், விரைவாணி, சிறுப்பிட்டி போன்ற கரையோரப் பகுதியில் இவ்வருடம் பெரும் செலவு செய்து இப்பகுதி விவசாயிகள் வெங்காயம் சாகுபடி செய்தனர்.

ஆனால் இவ்வருடம் மழை தொடர்ந்து பெய்ததினால் சகலரது வெங்காயப் பயிர்களும் அழுகிச் சேதமடைந்துள்ளன. இதனால் விவசாயிகள் பெரும் கவலை அடைந்து அரசாங்கத்திடம் புகார் செய்துள்ளனர். அரசாங்கத்தின் உதவி கிடைக்கும் எனவும் எதிர்பார்கின்றனர். (கி-தணு, நி)

## அறுவடை செய்யமுடியாத நிலை

(சாவகச்சேரி)

அண்மையில் பெய்த பெருமழை காரணமாக சாவகச்சேரிப் பகுதிகளில் உள்ள வயல்களில் தண்ணீர் பெருமளவு தேங்கியுள்ளதால் நெற்கதிர்களை உரியகாலத்தில் வெட்டமுடியாது மிகவும் கஸ்டப்படுகின்றனர். [கு]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம், [illegible] மேற்கு வீதி, 88-ம் இலக்க அச்சகத்தில் 1984-ம் ஆண்டு ஜனவரி மாதம் 22-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu- P. O. Box: 49, Telephone: 22389 — 24126.